
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com



# தாய் வீடு

THAIVEEDU உள்ளும் புறமும் பெப்பிரவரி 2008



வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HomeLife Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5



# கனேடிய சுகாதார மையத்தின் எச்சரிக்கை:

## தடுப்பூசி எடுத்தபின் பிரயாணங்களை மேற்கொள்ளுங்கள்

ஒவ்வொரு வருடமும் 100 மில்லியன் வெளிநாட்டுப் பயணங்களை கனேடியர்கள் மேற்கொள்கின்றனர் என்று கனேடிய சுகாதார மையம் (Health Canada) தெரிவிக்கின்றது. வியாபாரத்திற்காக மட்டும் என இந்த பயணங்கள் நிகழுவதில்லை. தமது மகிழ்ச்சிக்காவும், சந்தோசத்திற்காகவும் கனேடியர்கள் வெளிநாடுகளுக்கு தனியாகவும், தமது காதலர்களுடனும், நண்பர்களுடனும், குடும்பத்துடனும் பயணம் செய்கின்றனர். இந்தப் பயணங்கள் வருடா வருடம் அதிகரித்தே செல்கின்றன.

இது மட்டுமல்ல. உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் கனடா நாட்டுக்கு அகதிகளாகவும், குடிவரவாளர்களாகவும் வருடாந்தம் பல ஆயிரம் பேர் வருகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் தம்மை சட்டரீதியாகவும், பொருளாதார, சமூக ரீதியாகவும் நிலைப்படுத்திய பின்னர் தமது தாய் நாட்டுக்கு சென்று தமது உறவுகளையும், மண்ணையும் பார்க்க ஆசைப்படுகின்றனர். ஒருவர், இருவராக வந்தவர்கள் தமது பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தாய் நிலத்தை பார்க்கச் செல்வதும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

கனேடியர்களின் இந்த மில்லியன் தொகையான பயணங்களால் கனடாவுக்கு புதிய நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று கனேடிய சுகாதார மையம் (Health Canada) தொடர்ந்து எச்சரிக்கின்றது. இந்த எச்சரிக்கையை புறக்கணிப்பதற்கில்லை. வெளிநாடு சென்று திரும்பியவர்களால் கனடாவில் 2003ம் ஆண்டு SARS நோய் பரப்பப்பட்டதும், அதனால் கனடாவுக்கு ஏற்பட்ட பொருளாதார, மனித உயிர் இழப்புகளைப் பற்றியும் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

48ம் பக்கம் பார்க்க...


இம்மாதம் முதலாம் நாள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வீசிய பனிப்புயலில் குழந்தைகளை பாடசாலையிலிருந்து அழைத்துவரும் திரு. காங்கேசு கந்தையா.


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8


THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying · Selling · Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Property Mortgage Canada Inc.


Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E.,
Unit 202, Scar, ON


PMCI Property Mortgage Canada Inc.
Buying · Selling · Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
RE/MAX
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

முக்கிய குறிப்பு வீட்டு உரிமையாளர்களுக்கு
60 நாட்களில் அதிகூடிய விலையில் உங்கள் வீட்டை என்னால் விற்க முடியும் உங்கள் அனுசரணையுடன். தாமதிக்காது உடன் அழைத்தால்...
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21 Affiliate Realty Inc.



R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Radha
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada
Tel: 416.412.3838
Fax: 416.412.1174




Mortgage
Residential & Commercial
Line of Credits
Personal & Business
Second Mortgage
Raj. S
Broker / Director
416. 993. 2638
SMI
STANDARD MORTGAGES INC.
Residential & Commercial


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470

ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwelbaner.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER



இந்த அழகிய வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
240 Bedrooms, 78 Washrooms, 825,000 square feet, 40 acre garden, 1500 doors, 750 windows, movie theatres, swimming pools, many more..
இன்னும் பல வசதிகள்... அது
பக்கிங்காம் அரண்மனை
துரதிஷ்டவசமாக அது விற்பனைக்கில்லை. ஆனாலும் என்னால் உங்களுக்கு பொருத்தமான, பிடித்த அழகியதோர் இல்லத்தை வாங்கித் தரமுடியும்.

SHRI PARAMSOTHY
Sales Representative
Dir: 647.285.4663
Office: 905.812.9000, fax: 905.812.6909
shri@shri.ca, www.shri.ca
TERREQUITY REALTY, BROKERAGE,
Independently Owned And Operated
2690 Erin Centre Blvd., Unit A5,
Mississauga, ON L5M 5P5

COLDWELL BANKER


BAD CREDIT?
LOWEST RATE IN CAR INSURANCE
Save 40% - 60%
MORTGAGE LOAN | BUSINESS LOAN | CAR LOAN | SECURED VISA | LOWEST RATE CAR INSURANCE |
We can get any automobiles instantly, with proof of your income.
For Better Savings Call Vijay!
at 647 281 9084

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## இல்லாச் சுதந்திரத்திற்காக ஒரு திருநாள்

இலங்கை தனது அறுபதாவது சுதந்திர தினத்தைப் பலத்த பாதுகாப்பு கெடுபிடிகளுடன் நடத்தி முடித்திருக்கிறது. இலங்கை சுதந்திரமடைந்த இந்த அறுபது ஆண்டுகளில் அதன் நிலைமை ஒன்றும் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. கல்வி, பொருளாதாரம், உற்பத்தித் துறை, மனித உரிமைகள், பாதுகாப்பு என்று அனைத்துத் துறைகளிலும் இலங்கை அதல பாதாளத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. எல்லா வற்றிற்கும் யுத்தமே காரணமென்கிற மாயை சிங்கள மக்களுக்கு ஊட்டப்பட்டுள்ளது. ராஜபக்ஷ சகோதரர்களும் அவர்களைச் சுற்றியள்ளவர்களும் பொதுமக்களை நட்டாற்றில் விட்டுவிட்டு சொத்து சேர்ப்பதற்காகவே யுத்தத்தை தொடர்கிறார்கள்.

பெப்ரவரி 4ம் திகதி ஜனாதிபதி, இலங்கையின் தேசியக் கொடியை 'தொலை இயக்கியால்' ஏற்றி வைத்திருக்கிறார். ஜனாதிபதியே தேசியக்கொடிக்கு அண்மையில் செல்ல முடியாத வகையில் இருக்கிறது இலங்கையின் பாதுகாப்பு நிலமைகள். ஜனாதிபதியே இந்த நிலையில் இருக்கும்போது சாதாரண குடிமகனின் பாதுகாப்பு சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை கைவிட்டதுடன் பெரும் எடுப்பிலான யுத்தமொன்றுக் கும் தயாராகி வருவதாகத் தெரிகிறது. யுத்தநிறுத்தத்தை கைவிடமுன்னரே தொடர் குண்டுவீச்சுக்களை வன்னியிலும், கிழக்கிலும் இலங்கை அரச படைகள் ஆரம்பித்து விட்டிருந்தன. பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை நோயாளிகள் என்று 'அறவ-ியல் கடப்பாடுகளைக்' கைவிட்டு பெரும் மனித அவலத்தை இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தது. இந்த அவலம் பற்றி யாரும் கண்டு கொண்ட தாகத் தெரியவில்லை. சர்வதேச நாடுகளும் குறிப்பாக அனுசரனையாளர்களும் 'கவலை தெரிவிப்பதோடு' கமது கடமையை முடித்துக்கொண்டார்கள்.

'மடு' தேவாலயத்திற்கு அண்மையிலும் தம்புள்ளையிலும், இன்னும் ஏனைய இடங் களிலும் நடந்த கிளைமோர் குண்டு வெடிப்புகளில் அப்பாவிப் பொதுமக்களே கொல்லப் பட்டிருக்கிறார்கள். எந்தத் தரப்பாக இருந்தாலும் அப்பாவிப் பொதுமக்ளை இலக்கு வைப்பதை நிறுத்தவேண்டும். அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது எந்த வெற்றிக் கும் உதவப்போவதில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள், யுத்தத்திற்காக பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும் என்ற மாயைக்குள் சிங்கள மக்களை அமிழ்த்தியுள்ளனர். தொடரும் இராணுவ நடவடிக்கைகள் இராணுவவெற்றி சாத்திமென்ற விபரீதமான கற்பனையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அவர்கள், விலைவாசி உயர்வையும், சுரண்டும் ஆட்சியாளர்களையும் 'தியாகம்' என்ற போர்வையில் சகித்துக்கொள்ளப் பழகிவிட்டனர். ஆட்சியாளருக்கு சிறிதுகாலம் இந்த சகிப்புத்தன்மை கைகொடுக்கலாம். இது நீண்டகாலம் நிலைக்கப் போவதில்லை.

கடந்த ஐம்பது வருடங்களாகத் தொடரும் தமிழ் மக்களின் போராட்டம், சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து எதுவும் கிடைக்காது என்ற உண்மையை தமிழ் மக்களுக்கு மறுபடி மறுபடி உணர்த்திவருகிறது. இதன்தொடர்ச்சியாகவே மீண்டும் வெற்றுப்பொதி-யொன்றுடன் ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் முன் வந்துள்ளனர். இது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நாடகமாகவே தெரிகிறது. சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை யில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்துவிட்டிருக்கும் நிலை யில் இந்த 'வெற்றுப்பொதி' எந்த மாறுதலையும் ஏற்படுத்தப்போவதில்லை. சர்வதேச சமூகம் இந்த 'வெற்றுப்பொதி' நாடகத்தைப் புரிந்து கொள்ளும் நாள் வெகு தூரத்திலில்லை.

■

கடந்த வருட இறுதியில் தமிழர்களால் நடத்தப்படும் பயண முகவர் நிறுவனம் ஒன்று 'மாபெரும்' மோசடியில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. இதில் ஆயிரக்கணக்கில் பணத்தை இழந்தவர்கள் ஒருவர், இருவரல்ல. நூற்றுக்கும் அதிகமானவர்கள். தென்னிந்திய ஆலயமொன்றுக்கு யாத்திரை செல்லப்புறப்பட்டவர்கள், உல்லாசப்பணம் புறப்பட்டவர்கள், பல ஆண்டுகளுக்குப்பின் தாயகம் புறப்பட்டவர்கள் எனப் பலர் இந்த மோசடியில் சிக்கியுள்ளனர். தாயகம் சென்ற சிலர் திரும்பிவருவதற்கான பயணச்சீட்டு போலி என்று தெரிந்ததும் கொழும்பு விமான நிலையத்தில் திணடாடிப் போயினர். நூறு டொலரை சேமிக்கப்போய் ஐயாயிரம், பத்தாயிரம் என்று இழந்திருக்கிறார்கள் இந்த அப்பாவிகள். தமிழர்களால் நடத்தப்படும் நிறுவனம் என்பதாலேயே முழுமையாக நம்பி விடாது, அந்த நிறுவனத்தின் நம்பகத் தன்மையை முழுமையாக விசாரித்து பெருந்தொகைப்பணத்தைக் கொடுப்பது பாதுகாப்பானது. இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது தமிழ் ஊடகங்கள் பாராமுகமாக இருப்பது கவலைக்குரியது.

■

# சோலை வரி அதிகரிப்பு

**சமீபத்தில் பல புதிய வீடுகளுக்கு ஒரு கடிதம் வந்தது. உங்கள் வீட்டின் சோலை வரி (Property Tax) கூட்டப்பட்டிருக்கிறது என்றும் அதைக் குறைக்க விரும்பினால் ஒரு கட்டணத்தைக் குறிப்பிட்டு அதற்குக் காசோலை அனுப்பும்படியும் கேட்டிருந்தார்கள். அப்படி சோலை வரியைக் குறைக்க வழிகளுண்டா?**

எல்லா வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் MPAC என்ற நிறுவனத்திடமிருந்தோ அல்லது நகரசபைத் திணைக்களத்திட மிருந்தோ வீட்டுக்கான தீர்க்கப்பட்ட வரிப் பெறுமதி (Assessed Value) என்ற ஒரு தொகையைக் குறிப்பிட்டு ஒரு பத்திரம் அனுப்பப்படுகிறது. இது உங்கள் வருமான வரி என்று நினைத்துச் சந்தோஷப்பட்டு விடாதீர்கள். இது உங்கள் வீட்டுக்கு நகரசபை வரிக்காரணங்களுக்காக தீர்மானித்த பெறுமதி. 1999ம் ஆண்டு மாநில அரசி னால் அமுல் செய்யப்பட்ட புதிய சோலை வரி முறை. இதை Actual Value Assessment என்ற பெயரில் அவர்கள் அழைத்தார்கள். இந்த வரிப்பெறுமதியை அந்தந்தப் பிராந்தி யத்துக்குரிய Mill Rateஇனால் பெருக்க வருவதே நீங்கள் கட்ட வேண்டிய உண்மையான வருமான வரி.

உங்களுக்கு வந்த கடிதம் இந்த உண்மை யான வருமான வரியைக் குறைத்து தருகி றோம் என்று ஒரு தனியார் நிறுவனத்திட மிருந்து கிடைத்திருக்கிறது. உங்களின் விண்ணப்பப் பணம் கிடைத்ததும் வரிக் குறைப்புக்கான விண்ணப்பத்தை அவர்கள் அனுப்புவார்கள். அதன் விளைவாக நகரசபை உங்கள் சோலை வரியை மறு பரி சீலனை செய்யும். சில வேளைகளில் உங்கள் வரி குறைக்கவும் படலாம். அல்லது அதிகரிக்கவும் படலாம். பேசாமல் அக்கடிதத்தைக் குப்பையில் போடுங்கள். வரி மீளாய்வு தேவையானால் நகரசபை யிடம் நேரே போய் விண்ணப்பியுங்கள். சரியான காரணங்கள் கொடுக்கப்படாவிடின் வரி குறைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. உங்கள் தெருவில் உள்ள ஏனைய வீடுகளை விட உங்கள் வீட்டின் பெறுமதியைக் குறைக்கும்படியான அம்சங்கள் ஏதாவதிருப்பின் அவை பாதிப் பான காரணிகளாகக் காட்டி வரிக் குறைப் புக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் வரி மதிப்பவர் உங்கள் வீட்டை மீள்மதிப்பீடு செய்ய வரும்போது உங்கள் நிலக்கீழ் வீட்டில் யாராவது வதிவது கண்டு பிடிக்கப் பட்டால் உங்கள் வரியை அவர் அதிகரிக்கவும் செய்யலாம்.

பி.கு. புதிய வீடுகளுக்கு நகரசபையின் முழு சேவைகளும் வழங்கப்படும்வரை (முழுதான தெருப்பாவனை) ஒரு இடைக் கால வரியையே நகரசபை அறவிடும்.

■ ■ ■

**Publisher & Editor : P.J. Dilipkumar**
**பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்**

**ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.**

**தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா.**

**ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.**

**வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)**

**தொடர்புகள் :**
**For More Info : Editor**
**P.O.Box #63581**
**Woodside Squarew**
**1571 Sandhurast Circ.**
**Toronto, ON. M1V 1V0**

**Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா**
**1-514-299-3186**
**Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு**
**1-613 -276-7253**

**Tel : 416-646-3422, 416.400.6406**
**Fax : 416.849.0594**
**Web : www.veedunews.com**
**E-mail : thaiveedu@gmail.com**

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! ஒளிமயமாகும் கிராமங்கள்!



த. சிவதாசன்
- வீடு விற்பனை முகவர் -

**Solar Technology on Roof Top**

'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்' என்று மனித குலத்தின் உயிர் வாழ்தலை உறுதிப்படுத்தி வருவதற்காய்த் தைத்திங்களில் பகலவனுக்கு நன்றி தெரிவித்து வருகின்ற தமிழர் கலாச்சாரம் வெறுமனே சம்பிரதாயச் சடங்கென்று எள்ளி நகையாடலாம். ஆனால் உலகம் போகின்ற போக்கில் இன்னும் ஓரிரு தசாப்தங்களில் எண்ணை உற்பத்தி தானாகவோ அல்லது புறக் காரணிகளாலோ ஒரு முடிவுக்கு வந்தேயாகும் என்ற அனுமானத்திற் பார்ப்பின் தமிழர் கலாச்சாரம் உலகம் முழுவதும் பரவி பகலவனைத் தஞ்சமடைவதைத் தவிர வழியேதுமிருப்பதாகத் தெரியவில்லை.

நுண்ணுயிர் தாவரங்கள் முதல் அசுர இயந்திரங்கள் வரை எல்லாவற்றின் இயக்கத்திற்கும் மூலாதாரமாய் இருக்கின்ற ஞாயிறைப் போற்றாது இருக்க முடியாது என்ற உண்மை இன்னும் சில தசாப்தங்களில் மேற்கில் உண்மையிலேயே சூரியன் அஸ்தமிக்கும் போது தான் உணரப்படும்.

சில வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் பல கிராமங்களில் தெருவிளக்குகள் பல ஒளிமின்கலங்களால் (photovoltaic cells) வலுவூட்டப்பெற்றன என்ற செய்தியை வாசிக்க முடிந்தது. ஒளிமின்கலங்கள் கண்டுபிடிக்கப் பட்டு ஏறத்தாழ நான்கு தசாப்தங்கள் முடிவுற்றிருந்தும் அவற்றின் பாவனை மேற்குலகிலேயே பெருமளவுக்கு இருக்கவில்லை என்பது ஆச்சரியமாகவிருந்தது. சூரியஒளியை மின்சக்தியாக மாற்றும் இக்கலங்களின் உற்பத்திக்கான பொருட் செலவு அதனால் பெறுகின்ற நன்மைகளுக்கு ஈடற்றது என்பதும் வினைத்திறன் (efficiency) குறைந்த பண்டமாகையால் அது உற்பத்தியாளருக்கு லாபத்தை ஈட்டித்தராது என்பதுமே அத் தொழில்நுட்பம் கிடப்பில் போடப்படக் காரணமாக அமைந்தது என்பது அப்போது செய்தியாகவிருந்தது. ஆனாலும் மேற்கத்தய வணிகத் தரங்களால் அளவிட்டுப் பார்ப்பின் ஒரு பண்டத்தின் உற்பத்திச் செலவைக் குறைக்கக் கையாளப்படும் வழிகளில் முக்கியமானவை – ஒன்று: பாரிய அளவில் உற்பத்தி செய்து சந்தையில் பண்டத்தைக் குவிப்பது – மற்றது: வினைத்திறனை அதகரிக்கும் வகையில் ஆராய்ச்சிகளைத் தொடர்வது (research and development). இந்த இரண்டும் மேற்கு நாடுகளால் தீவிரமாக மேற்கொள்ளப்படவில்லை என்பதே எனது வாதம்.

காரணம் என்ன?
ஒன்றல்ல பலவெனவே நான் கருதுகிறேன்.

முதலாவது - மேற்குலகின் வணிகம் பெரும்பாலும் எண்ணை முதலாளிகளின் தர்ம தானமாகவே இன்றுவரை இருந்து வருகிறது. உலக எண்ணைச் சந்தையை நிர்வகிக்கின்ற முதலாளிகளின் ஆதிக்கத்திலேயே வல்லரசுகளும் இயங்குகின்றன. ஒளிமின் கலங்களின் வருகை நிச்சயமாக அவர்களது மடிகளில் கைவைத்துவிடும். எண்ணையைப் போல் ஒருநாளில் எரிந்து முடிந்துவிடும் பண்டமல்ல ஒளிமின்கலம். இதனால் மாதங்கள் பயன்தராதிருக்கும் பண்டத்தில் முதலீடு செய்வது பொறுப்பற்ற வணிகத்தனம்.

மூன்றாவது - இப் பண்டங்களை உற்பத்தி செய்வதால் அதிக பலனைப் பெறப்போகிறவர்கள் வளர்முக நாடுகளே. அங்கு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் சூரியன் முழுநேரப் பணிபுரிவான். எண்ணையில் தங்காத பொருளாதாரம் நிச்சயமாக மேற்கு



முதலாளிகளின் நித்திய சம்பாதிப்புக்குப் பங்கம் வந்துவிடும்.

இரண்டாவது - மேற்குலக நாடுகளில் பெரும்பாலானவற்றில் சுமார் 3அல்லது 4மாதங்களே சூரியன் தலைகாட்டும் மாதங்கள். இப்படிக் குறுகிய காலப்பகுதியில் உற்பத்தியாக்கப்பட்ட மின்சக்தியைத் தேக்கி வைத்துக்கொள்ள பாரிய மின் சேமக்கலங்கள் (batteries) தேவை. எட்டு அல்லது ஒன்பது



லகிலும் தங்கியிருக்கத் தேவையில்லை. மேற்கூறியவை தர்க்கரீதியான காரணங்கள். இவற்றை உறுதி செய்யுமாப்போல் பல விடயங்கள் சமீபகாலமாக நடைபெற்று வருகின்றன. பல புதிய நிறுவனங்கள் ஒளிமின்கலத் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றன. மேலதிக ஆராய்ச்சியில் மேற்குலக நாடுகள் நிறுவனங்களுடன் கைகோர்த்துப் பணிபுரிய ஆரம்பித்திருக்கின்றன. இலகு வர்த்தக எல்லைகள் அகற்றப்பட்டதைப் பாவித்து வளரும் நாடுகள், குறிப்பாக சீனா, பெருமளவில் ஒளிமின்கலங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறது. எண்ணை விலை அதிகரிப்பு ஓரளவு மனிதத் தயாரிப்பு என்றாலும் அது பல நாடுகளையும் பாதித்திருக்கிறது.

போட்டியில் தாம் பின்தங்கிவிடக்கூடாது என்பதில் மேற்குலக நாடுகள் அதிக சிரத்தையுடன் தொழிற்பட ஆரம்பித்திருக்கின்றன. இதில் ஆச்சரியம் என்னவெனில் ஒளிமின்கல உற்பத்தியில் முன்னணி வகிக்கும் பல புதிய நிறுவனங்களின் சொந்தக்காரர்கள் வேறு யாருமல்ல. உலகின் அதிவலுவுள்ள எண்ணை நிறுவனங்களே. எண்ணை உற்பத்தி முடிவுக்கு வந்தாலுஞ்சரி, ஒளிமின்கலப் பாவனை உச்சத்துக்கு வந்தாலுஞ்சரி லாபமீட்டப் போகின்றவர்கள் அவர்களே. ஏற்கனவே நடைமுறையிலுள்ளதுபோல, மேலும் ஒளிமின்கல உற்பத்தியில் ஈடுபடவென உருவாகும் புதிய நிறுவனங்களைக் கபளீகரம் பண்ணி எதிரிகளைப் பூண்டோடழிக்கும் பணவலுவும் இந்த எண்ணை முதலாளிகளிடமுண்டு. இன்னும் இரண்டு தசாப்தங்களின் பின்னர் உலகின் வணிகத்தை ஆளப்போகும் இந்த ஒளிமின்கல உற்பத்திக்கு இவர்கள் ஏற்கனவே அத்திவாரமிட்டு விட்டார்கள்.

இப்போதுதான் இந்தியாவின் கிராமங்கள் ஒளியூட்டப்படும் செய்தி ஆச்சரியத்தைத் தந்தது. இலங்கையிலும் தென்பகுதியில் கனடிய நிறுவனமொன்று கிராமிய ஒளியூட்டலில் அக்கறையோடு செயல்படுகிறது. இதன்பின்னால் ஒரு சிங்கள சமூகத்தவர் இருக்கிறார் என்று கேள்வி. ஆழிப்பேரலைக்கு முன்னராகவே தமிழ்ப் பிரதேசங்களிலும் தனியார் உதவியுடன் சில கிராமங்கள் ஒளியூட்டப்பட்டு வருவதாக அறிகிறோம்.

ஒளிமின்கல உற்பத்தியில் கனடா அதிக பங்கை வகிக்கிறது. கனடிய மத்திய அரசின் நிறுவனங்கள் பல தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து வீடுகளின் கூரைகளை ஒளிமின்கலப் பதார்த்தங்களால் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதற்காக சுமார் இரண்டு மில்லியன் வெள்ளிகளை ஒதுக்கீடு செய்துள்ளது அரசு. வருடமொன்றுக்கு ஒரு வீட்டுக்கு தலா 4500 kwh மின்சாரத்தை உற்பத்தியாக்க முடியுமென்பது இவர்களின் உத்தேசம். இது ஒரு வீட்டின் சராசரி பாவனையின் 45வீதமாகும். தற்போது மின்னுற்பத்தி பல வழிகளிலும் செய்யப்பட்டு தேசிய ரீதியிலான மின்விநியோக வலையமைப்பு மூலம் வீடுகளை அடைகிறது. கூரை ஒளிமின்கலங்களினால் உற்பத்தியாகும் மின்சாரமும் தேவைக்கு அதிகமாக (அதிக வெளிச்சமுள்ள நாட்களில் அல்லது பாவனை குறைந்த நாட்களில்) இருக்கும்போது வீடுகளிலிருந்து வலையமைப்பு மூலம் வேறு பிரதேசங்களுக்கு வழங்கப்படும். எவ்வளவு மின்சாரத்தை ஒரு வீடு உபரியாக உற்பத்தி செய்ததோ அதற்கான பெறுமதியை விநியோக நிறுவனம் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு மீளச் செலுத்தும்.

கனடாவின் இந்த உத்தேசப் பரீட்சார்த்தத்தின் கீழ் ஒன்ராறியோ மாகாணத்தின் கிச்னர் - வாட்டர்லூ பிரதேசத்தில் சுமார் எட்டு தொடக்கம் பத்து வீடுகள்வரை ஒளிமின் கலக் கூரைகளைப் பெற்றிருக்கின்றன. தற்போது பாவனையிலிருக்கும் புதைபடிவ எரிபொருட்கள் (fossil fuel) சூழலை மாசுபடுத்துகின்றன என்பதும் இதன் விளைவாக ஏற்படும் காலநிலைக் கோளாறுகள் உலகில் பேரழிவுகளைக் கொண்டுவர வல்லனவென்பதும் நாம் அறிந்த விடயங்கள். இனிவரும் காலங்களில் பெரும்பாலான வீடுகள் ஒளிமின்கலக் கூரைகளால் வேயப்பட்டு நாமும் நமது எதிர்கால சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழ இத்தொழில்நுட்பம் நிச்சயமாகக் கைகொடுக்கும் என நம்பலாம்.

■ ■ ■

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும் குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும் அழையுங்கள்
Ravi. Paramu
Broker

Direct: 416-262-4176
Bus: 416-321-6969
HomeLife GTA Realty Inc. Real Estate Brokerage
1711 Mc Cowan Road, Suite #206, Scarborough.

# 2007இல் வருமானவரியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்




மகேன் சிங்கராஜா

- வீடு விற்பனைப் பிரதிநிதி -


### தனிநபரின் வருமானவரி வீதங்கள் (Personal Income Tax Rates)

எமக்கெல்லாம் ஒரு நல்ல செய்தியாக இந்த 2007 ஆம் ஆண்டுக்கான வரிச்சலுகைகள் மாகாண அரசாங்கத்தினால் கொண்டுவரப்-பட்டுள்ளது. அதன்படி 2007ஆம் ஆண்டு ஒரு தனிநபரின் வருமானம் $37,178 அல்லது அதற்குக் குறைவாக உள்ளவர்கள் தமது வருமானத்தின் 15%வரியை செலுத்த வேண்டி யிருக்கும். இது கடந்த வருட வரியுடன் ஒப்பிடும்போது 0.5% இனால் குறைக்கப்பட்-டுள்ளது.

### ஓய்வூதிய வருமானம் (Pension Income Splitting)

2007 வரி சலுகைகளுடன் ஆரம்பிக்கும் போது, கனடிய வதிவிடவாளர்கள், தமது தகுதி பெறும் ஓய்வூதிய வருமானத்தின் 1/2வாசி வரை தமது வாழ்க்கைத்துணைக்கு (Spouse) அல்லது சேர்ந்து வாழும் துணைக்கு (Common–Law–Partner) வருமானவரி நோக் கத்திற்காக ஒதுக்கக் கூடியவராக இருப்பார் கள். இதற்காக புதிதாக ஒரு Formஐ உருவாக்கியுள்ளார்கள்(T1032). இதில் இரு வரும் கையொப்பமிட்டு தமது வருமானவரி பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். இதனுள் OAS- Old Age Security, மற்றும் CPP- Canada Pension Plan என்பன அடங்க மாட்டாது.

### போக்குவரத்து தொழிலாளிகட்கான உணவு செலவுக் கோரிக்கை (Meal Expense Claim for Transport Employees)

உணவு செலவுகட்கான குறைப்பு 50%இலிருந்து 60% மாக மார்ச் 19, 2007 இலிருந்து அமுலுக்கு வரக்கூடியவிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. 2008இற்கான உணவுக் கோரிக்கை 65%ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### பதிவு செய்யப்பட்ட வலது குறைந்தோர் சேமிப்பு (Registered Disability Savings Plan)

2007 வரி வருடத்துடன் ஆரம்பித்து, RESPஐ ஒத்ததான அமைப்புடன், வலது குறைந்த தன்மையுடனான ஒரு பிள்ளையின் நீண்டகால நிதி பாதுகாப்பிற்காக, ஆயுட்கால அதிகூடிய பங்களிப்பு ஒரு பிள்ளைக்கு $200,000 ஆகும். அத்துடன் வருடாந்த பங்களிப்பு எல்லை எதுவும் இல்லை. பிள்ளை 59வயதடையுமட்டும் வருடத்தின் இறுதி வரை பங்களிப்புகள் (Contributions) அனுமதிக்கப்படும். அரசாங்கமானது, கனடா வலது குறைந்த சேமிப்பு உதவி நிதி (Canada Disability Savings Grant Fund and the Canada Disability Savings Bond) எனும் வடிவில் அதிகூடியது $3,500 மற்றும் $1,000 வரையாக, பயன்பெறுவோரின் குடும்பத்தின் தேறிய வருமானத்தில் தங்கியதாக பங்களிக்கும்.

### வாழ்நாள் முழுவதற்குமான முதலீட்டு பயன் விதிவிலக்கு (Lifetime Capital Gains Exemption)

சிறிய வர்த்தக உரிமையாளர்கள், மீன்பிடியாளர்கள், விவசாயிகள் ஆகியோருக்கான ஆயுட்கால முதலீட்டு பயன்களின் விதிவிலக்கு $500,000 இலிருந்து $750,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

### கட்டுப்பணம் (Installments)

2007இற்கான புதிய தனிப்பட்ட கட்டுப்பணத்தின் (Installments) அதிகூடிய அளவாக $3000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இது $2000 ஆக அமைந்திருந்தது.

### போக்குவரத்து வரி சலுகை (Transit Tax Credit)

2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த Transit Tax credit ஆனது மாதாந்த Passகளுக்கே வரிச்சலுகை வழங்கியிருந்தது. ஆனால் இது 2007இல் இருந்து கிழமை Passகளுக்கும் அனுமதி அளித்துள்ளது.

### வேலை செய்வோருக்கான வரி சலுகை (Income Tax Benefit working)

இந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து $3000 இற்கு அதிகமாக உழைப்பவர்கட்கு வரிச்-சலுகையாக, தனிநபர்களுக்கு $500உம் குடும்பத்தவர்கட்கு $1000உம், தனியாக வசிக்கும் ஒற்றைப் பெற்றோருக்கு $1000 ஆக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### பிள்ளையின் உடற்கட்டுக் கோப்பு வரிச் சலுகை (Child Fitness Tax Credit)

தகுதி வாய்ந்த உடலியல் செயற்பாட்டு நடவடிக்கைகளில் தமது பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோருக்கு 1பிள்ளைக்கு ஆண்டுமுழுவதும் அனுமதியளிக்கும் அதிகூடிய அளவு 1 வருடத்திற்கு $500 ஆகும்.

### RRSP

RRSP பெற்றுக் கொள்வதற்கான வயது எல்லை 69இலிருந்து 71ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.

### கனடா கல்வி சேமிப்பு உதவித் தொகை (Canada Education Savings Grant)

இது $400இலிருந்து $500ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது

### GST வீதக் குறைப்பு

- GST ஆனது ஜனவரி 1, 2008இல் 6%இலிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- தனிநபருக்கான வரிச்சலுகை $8839இலிருந்து $9600ஆக மாற்றப்பட்டுள்ளது.
- வயது முதிர்ந்தோருக்கு வரிச்சலுகை $5066இலிருந்து $5117ஆக மாற்றமடைந்துள்ளது.
- கணவன் அல்லது மனைவி அல்லது சேர்ந்து வாழ்பவர்கள் இருவரில் ஒருவர் வருமானம் அற்றிருந்தால் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ வரிச்சலுகையாக மேலும் $9600ஆக உயர்வடைந்துள்ளது. இது 2006ஆம் ஆண்டில் $7505ஆக இருந்தது. 18 வயதுக்குட்பட்ட பாதிப்புற்ற பிள்ளைகட்கான வரிச்சலுகை $9513 இலிருந்து $9721 ஆக மாற்றமடைந்துள்ளது. (Canada employment amount) வேலை செய்பவர்களுக்கான சலுகை $250இலிருந்து $1000ஆக மாற்றமடைந்-துள்ளது.

■ ■ ■


Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing

PROPERTY MAX

HIGHER ACHIEVEMENTS

Realty Inc. Brokerage

Residential, Commercial, Investment Industrial And Rental



Mohan Subramaniyam

Broker Of Record

416-857-1780

Search Your Dream Home @ www.rightbrokerrightproperty.com

OR Call

416-321-2300

One Source For Many Type Of Properties And Mortgages!



4 Bdrms, 3 Washrooms, Steps To School, Close To All Amenties.




3 Bdrms, 2 Washrooms, Shows Better Than A Model Suite!



4 Bdrms, 3 Washrooms, Detached 4Bedroom With Many Upgrades, Hardwood Floor.

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

# பாரம்பரியத்துடன் கூடிய கட்டிடங்கள் (Heritage Properties)



**கலா ஈஸ்வரன்**

- கட்டிடக் கலை நிபுணர் -

பாரம்பரியத்துடன் கூடிய கட்டிடங்கள், கட்டிடவியல் சரித்திரத்தை வெளிப்படுத்துவன. இவை சமூக பொருளாதார வாழ்வைப் பிரதிபலிப்பதுடன் தற்கால கட்டிடத்துடன் பின்னிய வரலாற்றை வெளிப்படுத்துவன. இத்தகைய கட்டிடங்கள் சுற்றாடலை மிகைப்படுத்துவதுடன் அதற்கென தனியான தரத்தையும் அடையாளத்தையும் (Character, Identity) காட்டுவனவாகவும் அமைகின்றன. பாரம்பரியங்களுடன் கூடிய கட்டடங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவையும் அத்துடன் பொருளாதார லாபங்களையும் ஏற்படத்தித் தருவன. இக்கட்டிடங்களை வாங்கும்போது அல்லது விற்கும்போது மற்றைய கட்டிடங்களைப் போலல்லாது மிகவும் வித்தியாசமான முறையில் தான் அணுகவேண்டும். இதன் பெறுமதி சாதாரண சந்தைப் பெறுமதி முறைப்படி அணுகமுடியாது. இக்கட்டிடங்களை உடைத்தல் தவிர்க்கப்படும். தேவைப்படின் இக்கட்டிடங்களை ஒரு இடத்திலிருந்து வேறொரு பொருத்தமான இடத்திற்கு இடமாற்றம் செய்யலாம். புதிதாக ஏதாவது இணைப்பு இக்கட்டிடத்துடன் செய்யவேண்டுமாயின் பாரம்பரிய கட்டிடத்தின் அமைவுக்கு ஏற்பதான முறையில் இதனைச் செய்ய வேண்டும். இவ்வாறான கட்டிடங்களும் அதனைச் சார்ந்த இடத்தையும் அபிவிருத்தி செய்வது மிகவும் கட்டுப்பாடு உள்ளதாகும்.

இவ்வாறான கட்டிடங்களை வாங்கும் முன்னர், அவை அதற்குரிய மாநகர சபையின் பாரம்பரிய கட்டிடங்களுக்குரிய பட்டியலில் இருக்கிறதா என அறிய வேண்டும். அவ்வாறு இருப்பின் ஒரு கட்டிடக் கலை நிபுணர் அல்லது Heritage consultant ஒருவரின் உதவியை நாடுதல் நன்று. உதாரணமாக Parliament & Wellesley சந்திக்கு அருகாமையில் உள்ள வீடுகள் அல்லது வியாபார கட்டிடங்கள் Heritage inventory listஇல் உள்ளவை. இக்கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதாயின் மிகவும் கட்டுப்பாடுகள் உண்டு. உயரம், அதன் சுற்றளவு, கட்டிட அமைப்பு முறை, அதன் Character and style போன்ற பல விடயங்கள் நன்கு பேணப்பட வேண்டியவை.

இவ்வாறான கட்டிடங்களைப் பாதுகாப்பதில் மாநகர சபை மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. 2006 தை மாதம் ஒன்ராறியோ அரசால் கொண்டுவரப்பட்ட "Ontario Heritage act regulation 9/06, Criteria for determining cultural Heritage value and interest" இன் மூலம் இது சட்டமாக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கமானது ஒரு சொத்தின் பாரம்பரிய சரித்திரப் பெறுமதியை அளவிடக் கூடியதற்கான அடிப்படை கொண்டதாகும். ஏற்கனவே மாநகரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இச்சட்டத்தின் மூலம் மாகாணத்தின் எல்லாப் பகுதியிலும் ஒரே தன்மையான வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளது.

பின்வரும் முக்கியமான மூன்று வழிகளின் மூலம் ஒரு சொத்தின் பாரம்பரியத் தன்மை அளவிடப்படுகின்றது.

### சரித்திர முக்கியத்துவம் (Historical and Associative value):

இவை தனி மனிதன் அல்லது சமுதாயத்தையோ அல்லது ஒரு குறிப்பிடக்கூடிய நிகழ்வுகளையோ அல்லது ஒரு ஸ்தாபனத்தையோ அல்லது கட்டிடக் கலைஞர், ஓவியக் கலைஞர், மற்றும் கட்டிடத்தின் வேலைப்பாடுகளையோ வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கலாம்.

### கட்டிடக் கலையின் முக்கியத்துவம் (Architectural Design Significance):

குறிப்பிடத்தக்க கட்டிட அமைப்பு, அதன் வெளிப்படும் நேர்த்தி, craftsmanship அல்லது தொழில்நுட்பத் திறன் போன்றவை.

சூழல் சார்ந்த முக்கியத்துவம் (Contextual importance): குறிப்பாக Landmarks, சூழலும் அத்துடன் தொடர்புடைய elements, streetscape and cetting. சில பாரம்பரியங்களுடன் கூடிய கட்டிடங்களை மீள் நிர்மாணம் செய்யும்போது அரச உதவிப் பணம் அல்லது வரிவிலக்கு மற்றும் வட்டியில்லாத கடன் போன்ற ஊக்குவிப்புகள் கிடைக்கின்றன.

■ ■ ■



## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

பெப்ரவரி குறிப்புகள்

- முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட குடும்ப நாள் இம்மாதம் 18ஆம் திகதி (Family day Holiday)ஆகும். இதனைக் குடும்பத்துடன் கொண்டாட ஆயத்தமாகுங்கள்.
- இம்மாதம் 15ஆம் திகதி வலன்ரைன் நாள் (Valentines day) காதலருக்கு மட்டுமே உரிய தினமல்ல. இந்நாள் உங்கள் வாழ்வில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் அன்பைத் தெரிவிக்கும் நாளாகும். இதனை வெளிக்காட்டுமுகமாக உங்கள் வீட்டை அலங்கரித்து வலன்ரைன் நாளின் சந்தோஷத்தை உங்கள் வீட்டினுள் கொண்டுவாருங்கள்.
- வரப்போகும் வருமானவரி காலத்திற்காக ஒரு பைலினை (File) ஆரம்பிப்பதுடன் உங்கள் வரி வேலைகளை செய்வதற்காக வரி ஆலோசகருடன் ஆலோசிப்பதற்காக ஒரு நேரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள் (Appointment).
- உங்கள் வருமான வரியை E-File மூலம் அனுப்புவதாக இருந்தால், அது பெப்ரவரி 11 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.
- நீங்கள் RRSPஐ வாங்குவதாக இருந்தால், கடைசி வரை பொறுத்திராமல் கடைசிநாளான (Deadline) இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன் வாங்குவதன் மூலம் 2007 வரியினை சேமியுங்கள்.
- உங்கள் வீட்டில் காணப்படும் கம்பளி மற்றும் நிலப்பகுதிகளை பரிசோதியுங்கள். நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு கம்பளியைச் சுத்திகரியுங்கள். பருவகாலத்திற்குப் பின் இடம் பெறும் மலிவு விற்பனையில் கம்பளிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்.
- வசந்தகாலத்திற்கு ஆயத்தம் செய்யுமுகமாக விளையாட்டு உபகரணங்களான துவிச்சக்கரவண்டி, டெனிஸ் மட்டைகள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்குமுகமாக துப்பரவு செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, யன்னல்களைத் துப்பரவு செய்து அதன் பிணைச்சல்களை ஈரலிப்பாக்குங்கள்.
- சுவர்கள், தளம் (Floor), தளபாடம், ஆகியவற்றை Vacuum செய்யுங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, சலவை இயந்திர குழாய்களில் உள்ள வெடிப்புகள், கசிவுகளை பரிசோதியுங்கள். உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி அவசியமெனின் அவற்றை மீள அமையுங்கள்.
- உங்கள் வீட்டுக் கூரைகள், பீலிகள் என்பவற்றில் கசிவு காணப்படுகின்றதா என்பதைப் பரிசோதிக்கவும். திருத்தங்கள் இருந்தால் அதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள.
- வீட்டுக்கூரைகளில் பனியும் உறைபனியும் தொங்கிக் கொண்டிருந்தால் அவற்றை அகற்றுங்கள்
- வீட்டைச் சுற்றி நடைபாதையோரங்களில் பனிக்கட்டி படர்ந்திருந்தால் அவற்றை அகற்றுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# உடுக்கை இழந்தவன் கைபோல..



கே. எஸ். பாலச்சந்திரன்

சிறந்த நட்பினுக்கு உதாரணம் சொல்வதானால் பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர் சொன்ன குறளை விட பொருத்தமானது வேறு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இடுப்பில் இருக்கும் வேட்டி அவிழப்போகும் போது, தானாக எந்தவித எச்சரிக்கையும் இல்லாமலே எங்கள் கை மானத்தை காக்க விரைகின்றதே, அத்தனை விரைவாக நண்பனின் துன்பத்தில் பங்கு கொள்வதோடு தொடர்ந்தும் துணையாக இருப்பவன்தான் உண்மையான நண்பன்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

இந்த நட்பு எங்கள் வாழ்வில் பிள்ளைப் பராயத்தில் இருந்தே வருகின்றது. ஒன்றாக விளையாடிய நண்பர்கள். ஒன்றாகப் படித்தவர்கள். இளமைக்காலத்தில் ஒன்றாகத் திரிந்த நண்பர்கள். ஒன்றாக வேலை பார்த்த நண்பர்கள். இப்படி காலத்துக்காலம் எங்களுக்கு உயிரான நண்பர்கள் என்று கருதிப் பழகியவர்களையெல்லாம் நினைவு வைத்திருக்கிறோமா?

சிலவிதிவிலக்குகள் தவிர இல்லை என்று அனேகமாகச் சொல்லி விடலாம். காலம், இடம் என்று பலகாரணங்கள் உண்டு. அதுவும் புலம்பெயர் சூழல் உருவாகியபின்னர் உறவுகளைப் பேணுவதே சிரமமான காரியம் ஆகி விட்டது. நீர் பட்டுக் கரைந்து போன மங்கலான சித்திரங்களைப்போல எப்பொழுதாவது அரிதாக அவர்கள் நினைவு வருவதோடு சரி.

மனிதர்கள் எப்போதுமே இன்னும் ஒருவரில் ஏதோ ஒரு வகையில் தங்கியிருத்தல் அவசியமாகின்றது. தனித்து ஏகாந்தியாக வாழ்வதென்பது அவ்வளவு சாத்தியமானதாக எனக்குப்படவில்லை. “இனிது இனிது ஏகாந்தம் இனிது” என்று சொல்லியிருக்கிறாள் ஔவைப்பாட்டி. அந்த ஏகாந்தம், புறச்சூழல்களால் பாதிக்கப்படாது மனத்தளவில் தனியனாக இருக்கும் நிலைபற்றிக் கூறுவது.

இப்படி மற்றவர்களில் தங்கியிருத்தல் என்பது நட்பாக மாறினாலும் வெறுமனே சுயலாப நோக்குடையதாக இருப்பின் காலப்போக்கில் அதன் தேவையைப் பொறுத்து தானாகவே அற்றுப்போய்விடும். யாராவது ஒருவரின் நிலை மாற்றமே இந்த நட்புக்கு முடிவு கட்டிவிடும்.



ஆழமான நட்பு என்பது, நம்பிக்கை, துணையாக இருத்தல், கருத்துப் பரிமாற்றம், புரிந்துணர்வு, விசுவாசம், நெருக்கம் என்பவையினால் உருவாக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்பார்கள்.

கிரேக்கசிந்தனையாளரான அரிஸ்டாட்டில் நட்பை மூன்றுவகையாக வகுக்கிறார். முதலாவது சுகபோகங்களுக்காக உருவாக்கிக் கொள்ளும் நட்பு. ஒரு நண்பனிடமிருந்து கிடைக்கக்கூடிய சந்தோசங்களுக்காக அவனோடு வைத்திருக்கும் நட்பு.

இரண்டாவது பயன் கருதி வைத்துக்கொள்ளும் நட்பு. ஒரு வியாபாரத்தில் பங்குதாரராக இணைந்து கொண்டால் அவர்களுக்கு இடையே இத்தகைய நட்பு நிலவலாம்.

மூன்றாவதாக ஒரு மனிதனின் ஒழுக்கம், நேர்மை, நற்பண்புகளின் காரணமாக இணைத்துக்கொள்ளும் நட்பு.

அரிஸ்டாட்டில் மூன்றாவது வகையையே சிறந்ததாக, நிலைத்து நிற்கக்கூடியதான நட்பு என்ற கூறுகின்றார்.

இயந்திர மயமான வாழ்க்கைச் சூழலில் நட்பைப்பேணுவதென்பது மிகுந்த சிரமமான காரியமாகப்படும். ஊரில் வாழ்ந்த காலத்தில் எங்கள் வாழ்வின் வட்டம் மிகப்பரந்ததாக இருந்தது. என் குடும்பம், என் உறவுகள், என் ஊர், என் சமூகம், என் நாடு என்று மற்ற வர்க்காக வாழும் மனப்பாங்கு நிலவியது.

ஆனால் இங்கே எங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போராட்டத்தில் அடுத்த வீட்டில் இருப்பவர் யார் என்று கூட அறிந்து கொள்ளவும் நேரமில்லாமல், அதனால் ஏற்பட்ட உதாசீனப் போக்கினால், ஆண்டுகள் பல கழிந்து போகலாம். இறுதிவரை அவர்களை அறியாமலே போகலாம். உறவை உருவாக்கிக்கொள்வதே உபத்திரவம் ஆகலாம் என்ற அபிப்பிராயம் கூட எம்மிடையே இருக்கிறது.

மொழி, பண்பாடு, கலாச்சாரம் என்பற்றில் உள்ள பேதங்களினால் அடிப்படையான உறவை ஏற்படுத்திக் கொள்வதே பலருக்கு சிரமமானதாக இருக்கலாம். எனவே இங்கே வட்டம் மிகச்சிறியதாகவே இருந்து விடுகிறது.

இந்தச் சிறிய வட்டத்தினுள்ளும் தராதரம், தொழில், வாழ்க்கை நிலை சார்ந்த உறவுகளே அனேகமாகப் வரவேற்கப்படும் தன்மை தெரிகின்றது. அவைகூட “முகநக நட்பதாக”வே செயற்படுகின்றன. வெறும் முகமன் எப்படி ஆழ்ந்த நட்பின் அடையாளமாக இருக்கும்? சமூகத்தின் கட்டாயக் கடமைகளாகவே எங்கள் வைபவங்களும் அமைகின்றன. பள்ளிக்கூடங்களிலே வரவு வைப்பதற்கான ஒரு பதிவேடு இருக்கும். அதை நிரப்பிவிட்டால் போதும். என்ற மாதிரி வைபவங்களிலும், சடங்குகளிலும் பிரசன்னங்கள் பதியப்பட்டு விட்டால் போதும் என்று செயற்பட்டால் உறவுகள் என்பன வெல்லாம் போலியானதாகி விடாதா?

எங்கள் இளையவர்கள் பலருக்கு தெரிந்திராத கிராமிய வாழ்வின் ஒரு சிறப்பு அம்சத்தைக் குறிப்பிடுகிறேன். எங்கள் இளமைக் காலத்தில் வாழ்வியலின் பல அத்தியாவசியங்கள் கிராமத்தின் ஒத்த பங்களிப்புடனேயே நிறைவேறின. எங்கள் மண்வீடுகள் பனை ஓலைகளினால் வேயப்பட்ட காலம். எங்கள் வேலிகள் பூவரசம் கதியால்கள் போட்டு, அலம்பல் (இக்காலத்தில் அலம்பல் என்றால் மேடையில் பேசுபவர்களைப் பற்றிய அடைமொழியாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்) வைத்து அடைத்த காலம். வயல் அறுவடை செய்தது, சூடு மிதித்தது, கிணறு இறைத்தது – எங்கள் நட்புகள், உறவுகள் இணைந்தே இவற்றைச் செய்தன. அதனால் அந்த நட்புகள், உறவுகள் வலுப்பெற்றன.

மீண்டும் கற்காலத்திற்கு சற்று பிந்திய உங்கள் காலத்திற்கு (?) போகச்சொல்கிறீர்களா என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். அது என் விருப்பமுமல்ல. ஆனால் அந்த அனுபவங்கள் எங்களுக்கு கற்றுத்தந்ததை ஏதோ ஒரு வகையில் நீங்களும் பயன்படுத்தலாமே என்ற நப்பாசைதான்.

நட்பு என்பது இருவருக்கும் இடையில் உருவாகும் சங்கதி என்று மட்டுப்படுத்திவிட முடியாது. ஒரு சமூகத்திற்கும் இன்னமொரு சமூகத்திற்கும் இடையில் உருவாகலாம். பரஸ்பரம் நம்பிக்கை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் என்ற அடிப்படையிலே, புலம்பெயர் நாடுகளில் இந்த நட்பு நல்ல பயனைத்தரும்.

கடைசியாக ஒரு குறிப்பு. நட்புக்கு உதாரணமாக மகாபாரதத்தில் துரியோதனனையும், கர்ணனையும் நாம் குறிப்பிடுவதுண்டு. இதற்கு ஒரு அன்பர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.


துரியோதனன் தன் பகைவர்களை வெல்வதற்கு தகுந்தவன் என்ற ரீதியில்தான் கர்ணன் மீது நட்பு பாராட்டினான். இது உண்மையான நட்பன்று என்கிறார். அத்தோடு துரியோதனன் செல்லும் வழி தவறானது என்று கர்ணன் நல்ல நண்பனாக அறிவுரை சொல்லாமல் மேலும் அவனுக்கு உற்சாகம் அளிக்கும் வகையிலே செயற்பட்டு தானும் அழிந்து, துரியோதனனும் அழிந்துபோக காரணமாகினான். அவன் எப்படி நல்ல நண்பனாக முடியும் என்கிறார்.

செய்வது தவறு என்று தெரிந்தாலும் அவமானப்படுத்தப்பட்ட வேளையில் கைகொடுத்த நண்பனுக்காக தன் உயிரை துறந்தவன் கர்ணன். எதிரிகளாக களத்தில் நிற்பவர்கள் தன் உடன்பிறந்தோர் என்று தெரிந்தும் தன் நட்பை பெரிதாகக் கருதியவன் என்ற வகையில் பாராட்டப்படலாம்.

“இடுக்கண் களைவதாம் நட்பு”

■ ■ ■

## துயர் பகிர்வோம்



### திரு. மரியாபிள்ளை மனுவல்பிள்ளை

தாய் வீடு பத்திரிகையின் கட்டுரையாளரும், நாடக, கூத்துக் கலைஞருமான றெஜி மனுவல்பிள்ளையின் தந்தையார் மரியாபிள்ளை மனுவல்பிள்ளை (அருள்ராசா) அவர்கள் 03-02-08 நாவாந்துறையில் காலமானார்.
இவரின் பிரிவுத் துயரில் தாய் வீடும்பங்குகொள்கிறது.

தொடர்புகளுக்கு:
திரு.றெஜி மனுவல்பிள்ளை: 416 843 5832



### திரு.சங்கரப்பிள்ளை முத்துக்குமார்

தாய் வீடு பத்திரிகையின் கட்டுரையாளரும், வீடு விற்பனை முகவருமான மகேன் சிங்கராஜா அவர்களின் மாமனார், திரு.சங்கரப்பிள்ளை முத்துக்குமார் அவர்கள் 31.01.2008 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் அகாலமரணம் அடைந்தார்.
இவரின் பிரிவுத் துயரில் தாய் வீடு பங்குகொள்கிறது.

தொடர்புகளுக்கு:
மகேன் சிங்கராஜா: 416-302-7283



### திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்

தாய் வீடு பத்திரிகையின் கட்டுரையாளரும் வீடு விற்கனை முகவருமான மோகன் சுப்பிரமணியம் (Property Max), அவர்களின் தாயார் திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் அவர்கள் 31.01.2008 கனடாவில் காலமானார்.
இவரின் பிரிவுத் துயரில் தாய் வீடு பங்குகொள்கிறது.

தொடர்புகளுக்கு:
மோகன் சுப்பிரமணியம்: 416-857-1780

OFFICE: 416.321.6969

வீடு, வியாபார நிலையங்கள்

## வாங்க விற்க

ஜூடி
ஞானேந்திரன்



Sales Representative
**CELL: 416.629.9797**

ஞானேந்திரன்
நரசிங்கம்



Sales Representative
**CELL: 416.937.8090**

### RESIDENCIAL PROPERTIES



$599,000

**33 CANDLEBROOK CRES, Warden & Finch**

- Gorgeous 4 Bdrm Home, 2800 sqft
- Two apartments in BSMT
- Close to all amenities
- Rare Opportunity don't miss it.



$399,900

**FINCH & STAINES**

- Spotless 4 Yrs Old,4 Bdrms,3 Baths
- 9' Ceilings.Gleaming Hwd Fl.Open Concept.
- Dream Kit W Stainless Steel Appliances & Breakfast Bar.
- Min To Schools,Ttc& Rouge Park.



$578,800

**BRIMLEY & STEELES**

- Immaculate&Well Maint. "Monarch" Built Executive Hm
- 9' Ceilings & Columns *Over $40K Upgds
- Gorgeous Living Rm W/17'Cathedral Ceilings
- Steps To Park,Ttc,School & All Amenities

### COMMERCIAL PROPERTIES



**"Market East"**
**Markham & Steeles**

Last Phase of 20 Restaurant and Retail Units. Some of the Units are available.

More details **Call Gnani.**

**STRIP PLAZA FOR LEASE ON LAWRENCE ROAD**

Call GNANI

- Fully Renovated 4000 sqft Retail Strip Plaza
- Accross LCBO Store & High Rise Apt. Building.
- Bright, Clean Retail Space With Prominant Exposure.



**"Sitara"**

The largest South Asian Indoor Mall in North America

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED




MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும் (Upgrading)

# Pot Lights


வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -




## வீடும் விடியலும் - 24

வீடுகளுக்கு Pot lights போடுவது ஒரு தனி அழகைக் கொடுக்கும். கடந்த சில வருடங்களாக பல அழகான வடிவங்களில் இத்தகைய மின் விளக்குகள் சந்தைப்படுத்தப்படுவதால் அது பலரது கவனத்தையும் ஈர்த்து இருக்கின்றது. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் கட்டிட அமைப்பாளர்கள் மிக அதிக இலாபம் ஈட்டும் ஒரு கருவியாக இதனைப் பயன்படுத்துகிறார்கள். இன்னும் குறிப்பாகக் கூறுவது என்றால் ஒரு Pot light போடுவதற்கு 250டொலர்களிலிருந்து 275டொலர்வரை வீடு வாங்குபவர்களிடமிருந்து அறவிடுகிறார்கள். ஒரு வீட்டிற்கு 20-50 லைட் வரை சிபார்சு செய்கிறார்கள். எனக்குத் தெரிந்த சிலர் 40 லைட்கள் வரை எடுத்திருக்கிறார்கள். இதற்கு அவர்கள் செலுத்திய தொகை 40x250 = $ 10,000 இதற்கு கட்டிட அமைப்பாளர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய செலவு 500டொலர்களுக்கு உட்படவே இருக்கும். மிக மலிவானவிலையில் கிடைக்கக்கூடிய விளக்குகளைத்தான் அவர்கள் பொருத்துவார்கள். சாதாரணமாக 5டொலரிலிருந்து $30.00 டொலர்வரை பல தரப்பட்ட நிறங்களிலும் வகைகளிலும் பொட் லைற்கள் விற்பனை செய்யப்படுகின்றன. கட்டிட அமைப்பாளர்கள் மிக மலிவானவற் றைப் பொருத்திவிட்டு தமது பொக்கற்றை நிறைத்து விடத் தவறுவதில்லை. நாம் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால் பல ஆயிரம் டொலர்களைச் சேமிக்க வாய்ப்பிருக்கிறது.

பொதுவாக பொட்லைட்கள் Halogen வகையிலான மின் குமிழ்கள் போடக்கூடியதாகவே இருக்கும். ஆனால் அந்த வகையான மின்குமிழ்கள் மின்சாரத்தை மிக அதிக அளவில் உறிஞ்சுவதால் மாதாந்த மின் கட்டணச் செலவை அதிகமாக்கக்கூடிய வகையாக இருக்கும். ஆனால், சாதாரண (energy server) CFL குமிழ்களைப் பாவிக்கக்கூடிய பொட் லைட்களைப் போடுவதுதான் புத்திசாலித்தனமானது. இவை Par20 வகையைச் சார்ந்தவை. GU-10 போன்ற சாதாரண வகையைச் சேர்ந்தவையைவிட இவற்றின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் காலப்போக்கில் இவை அதிகளவு சேமிப்பிற்கு வழிவகுக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

மொத்தத்தில் கட்டிட அமைப்பாளர்களிடமிருந்து பொட்லைற் எடுப்பதை சிபார்சு செய்யவேமாட்டேன். நாமாகவே பொட்லைற் போடுவதற்குப் பல வழிகள் உண்டு.

- நீங்கள் எந்த எந்த இடத்தில் பொட் லைற்களைப் போட விரும்புகிறீர்களோ அந்த இடத்திற்கு ஒவ்வொரு Rough inஐ எடுக்கலாம். அதாவது அந்த இடத்தில் 1 லைற்றுக்குரிய பொருத்து தன்னிச்சையாக சுவிச்சுடன் போடப்படும். இதற்குரிய செலவு 50-75 டொலர்கள் வரை கட்டிட அமைப்பாளரினால் அறவிடப்படும். பின்னர் அந்த பொருத்தில் இருந்து அந்தப் பகுதிக்குரிய பொட்லைற்களை நீங்கள் விரிவுபடுத்திக்கொள்ளலாம். குறிப்பாக சாப்பாட்டறைக்கு 10 லைட்களைப் போடும் எண்ணம் இருந்தால் ஒரு rough in இலிருந்து நீங்கள் அந்தப் பத்தையும் போட்டுக்கொள்ளலாம். நீங்கள் 2,500 டொலர்களுக்குத் தரம் உயர்த்துவதற்குப் பதிலாக, 200-300 டொலருடன் உங்கள் தேவையை உங்கள் விருப்பிற்கு ஏற்றவாறு பூர்த்தி செய்துகொள்ளலாம். புத்திசாலித்தனமாக நடந்தால் மிக அதிகம் சேமிக்கலாம்.
- வீட்டிற்கு மோல்டிங் போடும் எண்ணம் இருந்தால் அதனுடன்சேர்த்து மிக இலகுவாக உரிய வயர்களை மறைத்தும் பொட்லைற்களைப் போடலாம். பல விளம்பரங்களில் மோல்டிங் வாங்கினால் பொட்லைற் இலவசம் அல்லது குறைந்த விலையில் பொட் லைற் என்ற பல விளம்பரங்களைப் பார்த்திருக்கலாம். அதுகூட ஒரு இலாபகரமான வழிதான்.
- நிலக்கீழ் அறை (பேஸ்மென்ற்) பூர்த்தி செய்யாமல் இருக்கும் பட்சத்தில் எங்கு வேண்டுமானாலும் கண்ணுக்குப் புலனாகாத விதத்தில் புதிய மின் விளக்குகளை வெளிப்புறத்திலோ அல்லது மேல் தளங்களிலோ மிகக் கச்சிதமாகப் போடக் கூடியவர்கள் இருக்கவே இருக்கிறார்கள். சில சிரமங்களுக்கு முகம்கொடுக்கத் தயார் என்றால் பல ஆயிரம் டொலர்கள் சேமிக்கவும் வாய்ப்பு இருக்கவே இருக்கிறது. தொழில்நுட்பம் தெரியாதவர்களும் தராதரம் பெறாதவர்களும் இத்தகைய திட்டங்களில் இறங்கி வீட்டிற்குள் இருக்கும் மின்சார இணைப்புகளைக் குழறுபடி செய்யவிடாது பார்த்துக்கொள்ள வேண்டியதும் வீட்டுரிமையாளர்களது முக்கிய கடமை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.


வீட்டிற்குரிய moulding போடுவதும் ஒரு அழகு. பலவித வகைகளிலும் தரங்களிலும் வடிவங்களிலும் mouldings உள்ளன.











Crown Moulding



Crown Moulding

- Plaster Moulding
- MDF Moulding
- Polyurethane Moulding
- Wood Moulding
- Foam Moulding

பொதுவாக கட்டிட அமைப்பாளர்கள் பாவிப்பது பிளாஸ்டர் மோல்டிங். போடப்பட்டிருக்கும் சித்திர வேலைப்பாடுகளை துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக பிளாஸ்ரர் மோல்டிங் இருக்கும். ஏனையவற்றோடு ஒப்பிடும்போது விலையும் சற்று அதிகமாகவே இருக்கும். கட்டிட அமைப்பாளர்கள் வடிவத்திற்கும், பருமனுக்கும் ஏற்றவாறு பல்வேறு பட்ட கட்டணங்களை அறவிடுகிறார்கள். ஆனால் இவற்றைப் பின்னரும் போட முடியும். மலிவாகச் செய்யலாம். ஆனால் வீட்டில் தளபாடம் இல்லாமல் இருக்கவேண்டும். தூசு போன்ற அசௌகரியங்களை சந்திக்கத்தயார் என்றால் அதற்கீடாக அதிகளவு சேமிப்பை ஈட்ட வாய்ப்பு இருக்கின்றது. பிளாஸ்ரர் மோல்டிங் தவிர்ந்த ஏனைய மோல்டிங் வகைகளை வசதியானபோது எப்போதும் போட்டுக்கொள்ளலாம். தற்போது ஹோம் டிப்போ போன்ற கடைகளில் மிக இலகுவாகக் கையாளக்கூடிய விதத்தில் .'.போர்ம் மோல்டிங்குகள் விற்பனைக்கு வந்துள்ளன. அத்துடன் சந்திகளுக்கும் மூலைகளுக்கும் என்று தனிப் பொருத்துகளும் தனியாக விற்கப்படுவதால் அவற்றை நாமாக வெட்டி எடுக்கும் சிரமத்தைத் தவிர்த்து இலகுவாகவே இவற்றைப் பொருத்தலாம். உங்களுக்கு சற்றுத் திறமை இருந்தால் மிகுதியைக் கேட்டறிந்தும், பார்த்துச் செய்தும் பல மடங்கு டொலர்களை சேமித்துக் கொள்ளலாம்.

கட்டிட சிற்பக் கலைகளின் பாரம்பரியங்களைக் கொண்ட நாங்கள், தாயகத்தில் கட்டப்படுவதுபோல் கற்களைக் குடைந்து சிற்பங்களைச் செதுக்காமல் விட்டாலும் நாட்டிற்கும் சூழலுக்கும் ஏற்றவாறு சிற்ப வேலைப்பாடுகள்கொண்ட Crown Moulding, Ceiling Moulding, Base Moulding, Shoe Moulding, Case Moulding, Panel Moulding, Cornice Moulding போன்றவற்றைப் பாவித்து வீடுகளை அழகுபடுத்துவதோடு, அவற்றை ரசித்து வாழவும் வழிவகைகள் இங்கும் உண்டு.

■ ■ ■


Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca
CERTIFIED HOME INSPECTION





RETAIL BUSINESS SPACE FOR LEASE

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட GTA Square (Finch & Middlefield)இன் முதலாவது தளத்தில் (1st floor) இரண்டு Units (அடுத்தடுத்ததாக) வாடகைக்கு கொடுக்கப்பட உள்ளது. நியாயமான வாடகை. எந்தவிதமான தொழிலும் நடத்தலாம். (சில நிபந்தனைகள்)

தொடர்புகளுக்கு:

416 359 0115



**Justin William**
*Broker*
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
*Broker*
**Cell: 416.817.8479**



**Wilton Gnanapragasam**
*Sales Representative*
**Cell: 416.554.4747**

# For All Your Real Estate Needs !




- Well Maintained Condominium
- 3Bedrm W/Ensuite Washrm
- Large Unit w/2 Balconies
- Perfect For First Timers
- Call **Wilton** For Details....




- Less Than 5 Years Old
- Well Kept Semi Detached Hse
- Spacious 4 Bedrooms
- Approx 1865 Sq.ft
- Call **Ravi** For Details....




- Spacious 4 Bedrm House
- Approx 2300 Sq Ft
- Less Than 5 years Old
- Finished Basement
- Call **Wilton** For Details....




- Beautiful Condo Townhouse
- Excellent Location
- Spacious 3+1 Bedrooms
- Close To Schools & Ttc.
- Call **Ravi** For Details....




- 3 Bedroom Detached House
- Corner House
- Stainless Steel Appliances
- Great location
- Call **Ravi** For Details....




- 4 Bedroom Detached House
- Brand New House
- Oakwood Staircase
- Decorative Pillars.
- Call **Wilton** For Details....




- 4+1 Bedroom House
- Well Maintained House
- Finished W/out Basement
- Excellent Neighbourhood
- Call **Justin** For Details....




- Very Profitable Business
- Established Since 1993
- 15 Years At the Same Plaza
- Surrounded By Apt & Houses
- Call **Justin** For Details...




- Spacious Luxury Condominium
- One Bedroom Plus Den
- Approx 1375 Sq. Ft
- Excellent Location
- Call **Wilton** For Details....




- Beautiful Town House
- 3 Bedrooms
- Ideal Starter Home
- Low Maintenance Fee
- Call **Ravi** For Details....




- 3+1 Bedroom House
- Finished Basement
- Approx 1600 Sq Ft
- Recently Renovated
- Call **Justin** For Details...




- Brand New Mattamy Home
- 4 Bedrooms. Approx 2620 Sq.Ft
- Over $ 20,000 in Upgrades
- Close To Schools & Park.
- Call **Justin** For Details....

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

# எமக்கென்று ஒரு தனிக்குழல்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# வீட்டுக் காப்புறுதியினைக் குறைக்க முடியுமா?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

அவசர உலகின் நேரமின்மையையும் பொருட்படுத்தாது உங்கள் வாசிப்பு தாகத்தினைத் தணித்து வரும் இத் 'தாய் வீடு' சஞ்சிகையினை தவறாமல் வாசித்து வரும் எமது வாசகர்களுக்கு நன்றி கலந்த வணக்கங்கள்.

அனேகமான வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது முகவரின் ஆலோசனைப்படியே விலை நிர்ணயம் செய்கிறார்கள். அத்தருணங்களில் மேற்குறிப்பிட்ட சம்பவம் போல் சிலது நிகழ்

இரண்டு வருடங்களில் வீட்டின் வீலை உயர்ந்திருக்கும் எனவே $25,000 கூட்டி $355,000 வீட்டிற்கு நிர்ணயிக்கப்படும் விலை சரிதானே என்று தோன்றுகிறதா? ஆனால் எந்த வீடும் கட்டாயமாக விலை மதிப்புக்கூடும் என்பதற்கு ஆதார பூர்வமாக சான்று கிடையாது. உங்களின் வீடு இன்றைய சந்தையில் எவ்வளவு பெறுமோ அந்த விலையையே நீங்கள் பெற்றுக்கொள்ளலாமே அன்றி ஒன்று இரண்டு ஐந்து அல்லது பத்து வருடங்களின் முந்திய விலையை வைத்து இன்று விலை மதிப்பது தவறான செய்கை.

தேவியின் வீட்டின்விலை சந்தை விலையை விட மிகவும் உயர்வாகஉள்ளதுதான் நான்கு மாதங்களாக விற்பனைக்கு விடப்பட்டு இருந்த பின்னரும் அவரின் வீடு விற்பனையாகாததின் முதன்மைக் காரணம்

### வீட்டின் தராதரம்

வீட்டின் விலை பற்றி ஆராய்ந்து தெளிந்த பின் அடுத்தபடியாகப் பார்க்கப்பட வேண்டியது வீட்டின் நிலை அல்லது தராதரம் எப்படி உள்ளது என்பதே. இந்தக் கேள்விக்கான தேவியின் பதில் 'வீடு நல்ல நிலையிலேயே உள்ளது ஆயினும் பெரிய குடும்பம் என்ற காரணத்தால் வீட்டின் துப்பரவு, சமையல் என்பன சற்றுக் கடினமாக உள்ளன. அத்துடன் வீட்டின் சுவரைப் பூசுதல். 'சந்தை நிலவரம் சூடாக இருப்பதால் எப்படியும் வீடு விற்றுவிடும் என்பதால் சுவரைப் பூசும் செலவைத் தவிர்த்துவிடலாம் என எண்ணியிருந்தோம்' இதைவிடத் தவறான எண்ணம் வேறு எதுவுமே இல்லை. ஏனெனில் வீட்டை வாங்க இருக்கும் எவரும் வீட்டைப் பார்க்க வரும்போது மாதிரி வீட்டைப்போன்ற நிலையையே எதிர்பார்த்து வீடு பார்க்க வருகிறார்கள். வீட்டின் உட்புற வெறிப்புற அழகு வீட்டிலிருக்கும் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் நேர்த்தி, தரைவிரிப்பு போன்றவற்றின் துப்பரவு? வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஏற்படும் புத்துணர்வு என்பவை ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்க்கப்படுகிறது. எந்த ஒரு நுகர்வோரும் வீட்டைவாங்கினால் தாம் அப்படியே அந்த வீட்டில் குடிபுக எண்ணியே வாங்குகிறார்கள். அவர்கள் வீட்டை வாங்கிய பின் எந்தஒரு சிறிய வேலையாயினும் செய்வதைத் தவிர்க்கவே முயல்கிறார்கள். தரை விரிப்புத் துப்புரவு உட்பட.

எனவே தேவியின் வீட்டிற்கு ஒரு முன்

37ம் பக்கம் பார்க்க...

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

**Harry** 416.856.4276
**Kannan** 416.854.6183
**Lingan** 416.830.2700

# COMMERCIAL MORTGAGE

- Commercial Interest starts from 5.5%
- New Business Loans
- Bussiness Loans
- New Plazas

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

- Ist & 2nd Mortgage
- Commercial Mortgage
- Re-Finance to get rid of your loans
- Bridge Financing
- Cottage Properties Financing
- Up to 90% LTV
- Non-Permanent Residents
- Rental Properties Financing
- Self-Employed
- No Money Down Mortgage



**K.N. KANNAN**
Mortgage Consultant
**Tel: 416-854-6183**
**Montréal: 1-514-787-9486**
Office: 416.273.8232
Fax: 416.214.1999
inviskana@gmail.com, www.invis.ca

invis
HSBC The world's local bank
FIRST NATIONAL FINANCIAL LP
INTERBAY FUNDING, LLC

90 Kennedy Rd. S., Unit C, Brampton
701 Evans Ave., Suite 600, Toronto, On M9C 1A3

Head Office:
GTA Square 256 & 257 - 5215 Finch Avenue East, Scarborough, ON. M1P 5H4
Branch: 16 – 2857 Lawrence Avenue East, Scarborough, ON. M1P 2S9

# வீட்டுப் பூந்தோட்டத்தில் அழகிய பூஞ்செடிகள்



சேகரி

பூந்தோட்டத்தில் பூத்துக் கண்களைக் கவரும் பூக்கள் எத்தனையோ உள்ளன. பூந்தோட்டங்கள் அமைத்து, பொழுதினைப் போக்கும் மனிதர் ஒரு சிலரே இருக்கின்றார்கள். பூந்தோட்டங்களில் பலதரப்பட்ட பூத்தாவரங்கள் உண்டாக்கப்பட்ட போதிலும் சிலர் குறிப்பாக அழகிய நிறமுள்ள பெரிய பூக்களைத் தரும் தாவரங்களைத் தெரிவு செய்வார்கள். அந்த வகையில் இப்போது எடுக்கப்படுவது டாலியாஸ் (Dahlias) எனப்படும் ஒரு பூத்தாவரமாகும். இதனைப் பற்றிய தகவல்களை நன்கு அறிவதற்கு, கோடைகால நாட்கள் ஏறக்குறைய நான்கு ஆண்டுவரை வீட்டுப்பூந்தோட்டத்தைப் பயன்படுத்தினேன்.



**பூந்தோட்டத்தில் பல இன டாலியாஸ் (Dahlias) தாவரங்கள்**


அறிமுகம் : டாலியாஸ் (Dahlias), குடும்பம் அஸ்ரெறசி Family Asteraceae யைச் சேர்ந்தது. தாவரம் குளிரில்லாத பிரதேசங்களில் வருடாவருடம் வளர்க்கக்கூடியது. இதன் கிழங்குகள் குளிரைத் தாங்கமாட்டா. தாவரம், கிழங்கிலிருந்து வெப்ப காலங்களில் பயிரிடப்படலாம். பூந்தோட்டத் தாவரங்களிலே, டாலியாஸ் ஒரு எழில்மிக்க அழகு தரும் பூச்செடியாகும். பூக்கள் பல நிறங்களாகவும், வடிவம், பருமன் வேறுபாடாகவும் அமைந்திருப்பது மனதுக்கு கவர்ச்சியைக் கொடுக்கிறது.




**வேறுபட்ட இனங்களின் கிழங்குகள்**

## தாவரத்தை வளர்க்கும் முறை:

கிழங்குகளைப்பற்றிப் பார்க்கும் போது, உணவுகளைச் சேகரித்து வைக்கும் கிழங்கு, தகுந்த சூழ்நிலை வந்ததும் முளைப்பதற்கு ஆயத்தமாகின்றது. தண்டின் அடிப்புறத்திலிருந்து வரும் கிளைவேர்கள் உணவைச் சேமித்து வைத்திருக்கும். இந்தநிலையில் இவ்விசேடமான கிழங்குபோன்றவை, வளரும் முளைக்கு உணவை அளிக்கும். இத் தொகுப்புவேர்கள் தாவரத்தண்டின் அடியோடு இணைக்கப் பட்டிருக்கும். தண்டின் ஒரு பகுதியும் தொகுக்கப்பட்ட வேர்க்கிழங்கின் ஒவ்வொருபகுதியும் சேர்ந்த இடத்தில் காணப்படும் "கண்" (eye) எனப்படும் முளை தான் வளரக்கூடியது. டாலியாஸ்,, வேர்க்கிழங்கிற்கு சிறந்ததோர் உதாரணமாகும்..




**கிழங்கு பதிக்க வேண்டிய குளிகள்**




- குளிகள் பசளை, உரம் போன்றவற்றால் 6அங் நிரப்பட்டிருக்கும்
- நடுவே கண் மேலே இருக்கும் வகையில் கிழங்கு வைக்கப்படவேண்டும்

டாலியாஸ் வளர்வதற்கு மணல் பாங்கான நிலமும், வெப்பமான இடமும் தேவை. காலநிலை அதாவது கனடாவைப் பொறுத்த மட்டில் உறைபனி தவிர்ந்த ஏனைய காலம், சித்திரை முதற்கிழமை உகந்ததாக இருக்கும். மண்ணின் வெப்பநிலை, சாதாரணமாக 58-60பாகை ஆக இருக்கவேண்டும். ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் பங்குனி மாதம் உகந்ததாக இருக்கும். கிழங்குகளை நிலத்தில் உண்டாக்கும் போது, நீங்கள் கவனிக்கவேண்டியவை பின்வருமாறு:

- நிலத்தை நன்கு பண்படுத்தவேண்டும்
- தாவரங்களுக்கிடையில் இருக்கும் இடைவெளியைக் கவனிக்கவேண்டும்
- தாவரங்களின் இனத்தைப் பொறுத்து, இடைவெளிகள் 2-3 அடி தூரம் இருக்க வேண்டும்.
- குளிகள் 1அடி ஆழமும், 6 அங். விட்டமுமாக இருக்கவேண்டும்.
- குளியிலிருந்து மண் எடுக்கப்பட்டதும், 6அங். அளவிற்கு பசளை, இரண்டு மேசைக்கரண்டி எலும்புச்சத்து, ஒரு மேசைக்கரண்டி டொலமைற்று சுண்ணாம்பு (dolomite lime) சேர்த்துக் கொள்ளவேணடும்.
- இதன்மேலே, முளை மேற்பக்கமாக இருக்கும் வகையில் கிழங்கினை வைக்க வேண்டும்.
- பின்னர், கிழங்கை எடுத்த மண்ணினால், 2அங். வரை மூடவேண்டும்.
- வளர்வதற்கு ஏற்ற முறையில், பாதுகாக்கத் தடி ஊன்றுவது நல்லது. தண்ணீர் நன்றாக ஊற்றவேண்டும்.
- முளைவளரும் போது, மிகுதிக் குளியினை கூடிய பசளையினால் மூடவேண்டும்.. முளையானது ஏறக்குறைய 15 நாட்களில் வளரத்தொடங்கும். வளரும் தாவரம் இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். நிலத்திற்கு மேலேயுள்ள பாகம், காம்பு, தண்டு, கிளைகள், இலைகள் ஆகும், நிலத்திற்கு கீழேயுள்ள பாகம் வேர்களையும் கிழங்குகளையும் கொண்டிருக்கும். காம்பு எனப்படுவது கணுக்கள், தொகுதியாக இலைகளையுடைய பகுதி. இதற்கு மேலான பகுதி தண்டாகும்.

**டாலியாஸ் தனித் தாவரம்**



கிளங்குகள் என்று கூறும்போது, தண்டுக் கிழங்கு, வேர்க்கிழங்கு என இவற்றை வேறுபடுத்தலாம். இருவகைக் கிழங்குகளும் நிலக்கீழ் பகுதிகளில் தாவரம் வளர்வதற்காக உணவைச் சேமித்து வைக்கின்றன. டாலியாஸ், வேர்க்கிழங்கு வகைக்கு நல்ல உதாரணமாகின்றது. தண்டிலிருந்து வளரும் வேர்ப்பகுதியிலிருந்தே தாவரம் முளைத்து வருகின்றது. கிழங்குகள் அதிகம் இருப்பதால், அவற்றைப் பக்குவமாக பிரித்தெடுக்கும் முறை தெரிந்தவர்கள், வேறாக்கிப் பல தாவரங்களை உண்டாக்குகிறார்கள். இல்லையேல், கிழங்கை வேறாக்காமல் முழுமையாகவும் நிலத்துக்குள் பதிக்கிறார்கள். இவற்றிலிருந்து, உண்டாகும் தாவரங்கள் பல, எல்லாம் நன்கு செழித்து வருவதைப் பார்க்கலாம்.

**ஒரே நிரையில் பல டாலியாஸ் தாவரங்கள்**



■ ■ ■

தொடரும்...

## ஆலமரம் (Banyan tree)

Family: Moraceae, Botanical Name: Ficus benghalensis) (Eng. Name: Banyan tree)



இலங்கை, இந்தியா நாடுகளில் எல்லாப் பகுதிகளிலும் இயற்கையாக வளரும் மரம். இலங்கையில் இம்மரம், பெரும்பாலும் நிழல் கொடுக்கும் மரமாக, கிளைகள் விட்டு, நிலப்பரப்பினை மிக அடர்த்தியாக்கி வைத்திருக்கும். பறவைகள், இதன் கனிகளைத் தின்று, எச்சங்களூடாக வித்துக்கள், ஏனைய மரங்களின் பட்டைவெடிப்புகளில், அல்லது பாறைகளில், விடப்பட்டு அவ்வவ்விடங்களில் முளைக்கின்றன. இது ஆரம்பத்தில் தொற்றுத் தாவரமாக முளைத்து, பின்னர் வேர்களை விட்டு, வேர்கள் நிலத்தை அடைந்து, தனித்துவ மரமாகின்றது. பின்னர், பெருமரமாகி, கிளைகள் பலவிட்டு, பரந்த மரமாகக் காட்சிதருகின்றது.

கிளைகளிலிருந்து வரும் விழுது போன்ற வேர்கள், கீழ்நோக்கி வளர்ந்து நிலத்தையடைந்து மண்ணில் வேரூன்றுகின்றன. ஊன்றப்பட்ட விழுதுகள் மிகவும் கெட்டியாக இருக்கும்போது இவற்றையும் தனிமரங்களாக நாம் நினைப்பதுண்டு. இலைகள், பட்டைகள், விழுதுகள் பயனுள்ள பகுதிகளாகின்றன. "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்பதற்கிணங்க, ஆலம் விழுதின் சிறு குச்சித் தளிர்களைப் பண்டைய மக்கள் பல் தீட்டுவதற்காகப் பயன்படுத்துவர். இலைகள், ஆடு, மாடு போன்ற வளர்ப்பு மிருகங்களுக்கு உணவாகின்றன. கனிகள் மருத்துவ ரீதியில் மலச்சிக்கலைப் போக்கும். பட்டைகள் நீரழிவுநோயைக் குணப்படுத்தும். ஆலம்பால், மூட்டுவலி, மூலவியாதி நோய்களைக் குணப்படுத்தும். இம்மரத்தை இந்துக்கள் புனிதமரமாகக் கருதினர். "ஆலமரச்செல்வன்; என்பது சிவனுக்குரிய ஒரு பெயர்.

$100,000
லைவ் இன்சூரன்ஸ்
மாதம் $12.42 மட்டுமே
புகை பிடிக்காத 35 வயது ஆணுக்கு, 10 வருட தவணைக் காப்புறுதி


உங்களுக்கான மாதக்கட்டணத்தை அறிய அழையுங்கள்...



KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON

Unity Life of Canada
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

கென் கிருபா
காப்புறுதி முகவர்
416 294 9322
E&OE




Warden & Finch
3 Bed Room, 1Wash Room,

வீடு வாங்க விற்க அல்லது அது
சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

Tel: 416-843-8585
Bus: 416-290-1200



Kuga Raveendrarajah
Broker





"சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு"

Markham & 14th Ave
3 Bed Room,4 Wash Room,

Century 21
Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.

# காசுமேலே காசுவரும் நேரமிது.



பெரி முத்துராமன்
- நிதித்துறை ஆலோசகர் -

வாழ்கையில் எல்லாவற்றிற்கும் சீசன் அல்லது காலம் இருக்கின்றது. இது ஆர்.ஆர்.எஸ்.பி சீசன். ஆர்.ஆர்.எஸ்.பி என்பது கனடாவுக்கு மட்டுமே உரித்தானது. ஓய்வு காலத்திற்கு என சேமிக்க உங்களை இந்தத் திட்டம் தூண்டுகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் நீங்கள் சேமிக்கும் பணம், உங்கள் மொத்த வருமானத்தில் வருமான வரிக்கு ஆளாவதில்லை. எப்போது நீங்கள் அந்தப் பணத்தை எடுக்கிறீர்களோ, அப் போது அது வருமானமாகக் கருதப்பட்டு வருமான வரிக்கு ஆளாகின்றது. வருமான வரியைத் தற்சமயம் குறைத்துக் கொள்ள வும், தள்ளிப்போடவும் இந்த ஆர்.ஆர்.எஸ்.பி திட்டம் உதவுகின்றது. மேலும் வருமானம் கூட வரும் வருடங்களில் வரியைக் குறைத் துக் கொள்ள ஆர்.ஆர்.எஸ்.பி முதலீடு உதவுகின்றது. ஓய்வு பெற்ற காலத்தில் வருமானம் குறைவாகத்தானே இருக்கும். அந்தச்சமயத்தில் ஆர்.ஆர்.எஸ்.பி.யைப் பயன் படுத்திக் கொண்டால் கட்ட வேண்டிய வரி மிகக் குறைவாகவோ, அல்லது வரியே இல்லாமலே கூட அமையலாம்.

ஆர்.ஆர்.எஸ்.பி. என்பது ஒரு பொதுப் பெயர், அந்த திட்டத்தின் கீழ் நீங்கள் பலதரப்பட்ட சேமிப்புக்களை வைத்துக் கொள்ளலாம், பெரும் பாலும் இருவகை சேமிப்புக் களில் தான் பலராலும் பணம் சேமிக்கப் படுகின் றது. ஒன்று ஜி.ஐ.சி (GIC) என்று சொல்லப் படும் வங்கி கால வைப்புக்கள், மற்றொன்று மியுச்சுவல் பண்டுகள், வங்கி வைப்புக்க ளில் அசலும், வட்டியும் உத்ரவாதம் செய்யப்படுகின்றது. மியுச்சுவல் பண்டுகளில் அத்தகைய உத்ரவாதம் இல்லை. ஆனால் 1950லிருந்து கிடைக்கும் புள்ளி விவரங்க- ளின் படி சில தகவல்களைக் கூறலாம்.

- எந்த பத்தாண்டு காலத்தை எடுத்துக் கொண்டாலும் பங்குச் சந்தை லாபத்- தையே தந்து வந்துள்ளது.
- எந்த ஐந்தாண்டு காலத்தை எடுத்துக் கொண்டாலும் 98 சதவீதம் பங்கு சந்தை கடந்த காலத்தில் லாபத்தைத் தந்து வந்துள்ளது.

மியுச்சுவல் பண்டுகளில் போடப்படும் பணம் பங்குச் சந்தையிலேயே முதலீடு செய்யப் படுகின்றது. எத்தகைய பங்குகளில் முதலீடு செய்யப் பட்டுள்ளதோ, அப்பங்குகளில் விலை ஏற்ற இறக்கத்தைப் பொறுத்து, ஒரு குறிப்பிட்ட மியுச்சுவல் பண்டின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி அமையும்.

பொதுவில் ஆராய்ந்து உங்களுக்கு ஏற்ற மியுச்சுவல் பண்டில் சேமிக்கும் போது ஐந்து முதல் பத்தாண்டு கால அளவில் வங்கி வைப்புகளை விட கூடுதல் லாபம் பெற வாய்ப்பு உள்ளது.

நீண்ட காலத்திற்கான சேமிப்பையே மியுச்சு வல் பண்டில் போட வேண்டும். பங்குச் சந்தை என்பது காசினோ டேபிள் என்றோ, சூதாட்டக் களம் என்றோ கருதக் கூடாது. உங்கள் நீண்ட காலச் சேமிப்புக்கு என்று நல்லதோர் நிதித் திட்டத்தை வைத்திருக்க வேண்டும். ஒரு நல்ல நிதி ஆலோசகர் உங்களுக்கு அதைச் செய்து தரக் கூடும். நிதித்திட்டத்தைத் தயாரித்துச் செயல் படுத்தியப் பிறகு ஆண்டுக்கு ஒருமுறை நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். அதை விட்டு விட்டுத் தினம் ஏற்படும் சந்தை ஏற்ற இறக்கங்களால் துக்கமோ, மகிழ்சியோ அடைந்து கொண்டி- ருக்கக் கூடாது.



ஜனவரி 15, 16. 17 ஆகிய மூன்று தினங்க- ளில் டொரோண்டோ பங்குசந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி 2007ல் பங்குச் சந்தையில் கிடைத்த முழு லாபத்தையும் இல்லாமல் செய்து விட்டது. இத்தகைய வீழ்ச்சி நீண்ட கால முதலீட்டாளரைப் பாதிப்ப தில்லை. ஏறுவது இறங்கும். இறங்குவது ஏறும், இது காலம் காலமாக நடந்து கொண்டே இருக்கின்றது. நம்முடைய நிதித்திட்டத்தைக் கவனத்தில் கொண்டு இத்தகைய குறுகிய கால ஏற்ற இறக்கங் களால் பாதிக்கப் படாமல் முதலீடு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். சந்தையில் தொடர்ந்து முதலீடு செய்து கொண்டு வரும் போது, அந்த ஏற்ற இறக்கங்கள் இயல் பாகவே சரி செய்யப்பட்டு சராசரி லாபம் கிடைக்கின்றது. மேலும் எத்தகைய இனங் களில் நாம் முதலீடு செய்கின்றோம் என்ப தைப் பொறுத்தும் குறகிய நீண்ட கால வளர்ச்சி மாறும்.

முதலீடு செய்யச் சரியான நேரத்தைத் துல்லியமாகக் கணித்தவர் இது வரை யாருமில்லை. இனியும் யாரும் இருப்பார் கள் என்று தெரியவில்லை. தற்சமயம் பங்குச் சந்தையில் விலைகள் "சேல் அல்லது விற்பனையில்" இருப்பதாகவே தோன்றுகின்றது.

நல்லதோர் நிதிதிட்டத்துடன் உங்கள் சேமிப்புக்களை மியுச்சுவல் பண்டில் ஆரம்- பிக்க இது நல்ல நேரம், ஏற்கெனவே முதலீடு செய்திருப்பவர்கள் தங்கள் முதலீடுகளின் தன்மையை மற்றொரு நிதி ஆலோசகரிடம் காட்டி ஆலோசனை பெறவும். இது சிறந்த நேரமே.

இந்த வருடம் ஆர்.ஆர்.எஸ்.பி. யில் பணம் போட கடைசி நாள் பிப்ரவரி 29, மார்ச் 1 அல்ல. கடைசி நாள் வரை காத்திராமல் சிந்தித்துச் செயல் படுங்கள்.

■ ■ ■

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசகர்
நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை
Scotiabank™
Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Senior Personal Banking Officer
Financial Advisor
Direct Line: 416.439-3040 x: 2010

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



வீடுகள்
தொடர்மாடி வீடுகள்
தொழிற்சாலைகள்
வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997

**PAID**
**JAN. 31.2008** திகதிக்கு முன்
வீடு, வியாபார நிலையம் வாங்குபவர்கட்கு
சட்டத்தரணிக்கான **FEE** இலவசம்.

HOMELIFE HIGHER STANDARDS


**HomeLife/ Future Realty Inc.,** *Brokerage*
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com

# 416-399-8093

நட்பான சேவைக்கும்
உங்கள் மனம் நிறைய
வீடு, வியாபார நிலையம்
வாங்க, விற்க...





**Magill/Sullivan**
4 Bedrooms
3 Full washrooms
Close to shopping, bank, schools & TTC




**Neilson/Mclevin**
2 Bedrooms
2 Full washrooms
Close to shopping, bank, schools & TTC




**Morningside/Finch**
3 Bedrooms, 3 Washrooms
Finished Basement,
Close to School, TTC , HWY 401




**Steeles/Staines**
3 Bedrooms, 3 washrooms
Apx Sqft : 2000-2500
Apx Age: 0-5
Close to school




**Bovaird/Sunny Meadow**
4+2 Bedrooms, 4 washrooms
Apx Sqft: 2500-3000




**Finch/Staines**
4+2 Bedrooms, 3 washrooms
Sep. Entrance, 9 ft Celling
ork stairs Apx Sqft: 2000-2500
Close to shopping, schools & TTC



**Pirabaa Nallathamby (BABU)**
*Sales Representative*

**GTA SQUARE LEASE**

**2 Bedrooms Condo For Sale McCowan & Finch $178,000**

**2 Bedrooms Condo For Sale McCowan & Eglinton $135,000**






சிகையலங்காரம் உங்களை
மெருகூட்டுகிறது,
எமது அலங்காரம் உங்கள்
இல்லத்தை உருமாற்றுகிறது!

visit or call
**www.4168316397.com**

digi Media

அயலவரையும் ஆச்சரியப்படுத்த அழையுங்கள்...

# Best Way
**BLINDS & SHUTTERS**
DISCOVER THE WORLD FROM YOUR WINDOW

www. bestwayblinds.com
bestwayblinds@yahoo.ca

**FREE ESTIMATE**

8 Shaddock Cres, Toronto, ON
**416.831.6397, 416.269.6117**

# கடன்காரரர்கள்: துரத்தவும், தப்பவும்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

- Property Damages (ஏதாவது பொருட்கள் சொத்துக்களில் ஏற்படும் பாதிப்புகள்)
- Personal injuries (உடல் காயங்கள்)
- Breach of Contract (ஒப்பந்தங்களை மீறு-வோர்)

## ஆரம்ப நிலையில் எப்படி இந்த வழக்கு தாக்கல் செய்வதனை முன் எடுப்பது?

"வழக்குத் தொடுநர் விண்ணப்பப் பத்திரம்" (Plaintiff's Claim Form) நீதிமன்ற அலுவலகத்தில் அல்லது மின்கணணி தகவல் மையத்தினூடாக எடுத்து, பூரணமாக நிரப்பிக் கொடுத்தல் வேண்டும். அதில் கடன் தரவேண்டிய எதிர்தரப்பினரின் பெயர், விலாசங்கள் சரியாகக் குறிப்பிட வேண்டும். இங்கு ஒரே வழக்கு இலக்கத்தில் ஒருவர் பலருக்கு எதிராகவோ, அல்லது பலர் ஒருவருக்கு எதிராகவோ அல்லது கம்பனி ஒன்றுக்கு எதிராகவோ வழக்குத் தாக்கல் செய்யவேண்டுமானால் மேலதிக பத்திரங்கள் நிரப்பி வழங்குதல் வேண்டும். விண்ணப்பங்களுடன் கடன் தொடர்பான ஆதாரங்கள், சாட்சிகளின் விபரங்கள் என்பன சமர்ப்பித்தல் வேண்டும். (இதற்கு மனுசெய்யும் கட்டணம் 75.00 டொலர்கள் ஆகும்) பதினெட்டு வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் சேர்ந்து 500.00 டொலர் வரையான கடன்களை வசூலிக்க மனுச்செய்யலாம். அதற்கு மேலாக இருந்தால் பிரத்தியேகமான விண்ணப்பப்படிவம் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் சேர்ந்து கைச்சாத்திட்டு மனுச் செய்ய வேண்டும்.

வழக்கு மனுக்களைப் பெற்றுக்கொண்ட நீதிமன்ற உத்தியோகத்தர், இவற்றினை ஒரு குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் பதிவுசெய்து, அதன் பிரதிகளை "சீல்" பண்ணித் தருவார். அப்பத்திரங்கள், ஆதாரப் பத்திரங்கள் யாவற்றினையும் பிரதிகள் எடுத்து, வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களை எப்படியோ ஆறு மாதத்திற்கு இடையில் கடன்பட்ட எதிர் தரப்பினரின் கைக்குச் சேர்த்துவிடல் வேண்டும். இதனை வக்கீல் மூலமோ அல்லது தனியார் தபால் முகவர் மூலமோ அனுப்பி, கடன்பட்ட எதிர்த்தரப்பினர் கைக்குச் சேர்த்து விடுவது கடன் கொடுத்தோரின் கடமை யாகும். நீதிமன்றம் இதனை அனுப்பும் வேலைக்குப் பொறுப்பு எடுக்காது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விபரம் எதிர்தரப்பு கடன்பட்டவருக்குச் சமர்ப்பிக்கப் பட்டுவிட்டால். அது கிடைக்கவில்லை என அவர் உதாசீனம் செய்வாராக இருந்தால், இது எவ்வாறு? எவர்மூலம்? அனுப்பி வைக்கப்பட்டது என்பதனை தேவையாயின் ஒரு விண்ணப்பம் மூலம் (Affidavit for Service Form) நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு இலக்கத்தின் கீழ் மனுச்செய்து வைத்தால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு உதவியாக இருக்கும்.

## கடன் தொகையினை வசூலிக்கும் நோக்கில் தமக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருக்கின்ற அறிவிப்பு வந்ததும், கடன்பட்டவர் செய்யவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

இருபது நாட்களுக்கு இடையில் தமது பக்கத்து நியாயத்தை, பதில் தெரிவிக்கும் மனுவினை – (Defence form) கடன்பட்டவர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இதற்கு மனுவுடன் கடன்பட்டவர் 75.00 டொலர் பணம் செலுத்த வேண்டும்.) கடன் கொடுத்தவரின் இந்நீதிமன்ற வழக்கினை ஏற்கமுடியாது அதில் தப்பு உள்ளது என்றால் அதனை கடன் பட்டவர் சரியாக நிரூபிக்க வேண்டும். சரி! ஏற்றுக்கொண்டாலும் அதனைத் திருப்பிச் செலுத்த ஒரு உடன்பாட்டுக்கு வரலாம். வங்குரோத்து (Bankruptcy) நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டால் அதனை நிருபித்து கையும் விரிக்கலாம். ஆனால், வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் போது கடன் கொடுத்தே ஆகவேண்டும் என்ற நிலைமை உருவாகலாம்.

## கடன்பட்டவர் தமது பதில் மனுவினை வழங்கிய பின்னர் அடுத்த கட்டம் என்ன?

கடன்பட்டவரின் பதில் மனு கிடைத்து 90 நாட்களுக்கு இடையில் ஒரு திகதி குறிப்பிட்டு, இரு பகுதியினையும் சமாதானமாகத் தீர்ப்பதற்கு அல்லது அது சரிவராவிட்டால் நீதிபதியின் முன்பு வழக்கு விசாரணைக்காக நீதிமன்ற அலுவலகத்திற்கு அழைப்பார்கள். இதனை ஆங்கிலத்தில் "settlement conference" என அழைக்கப்படும் இவ் விசாரணையில் "கடன் கொடுத்தவர்" தமது கடன் வருமதி பற்றிய நிரூபணமும் "கடன் பட்டவர்" தமது பக்கத்தில் ஏதாவது நிருபணங்கள் இருந்தால் அதனையும் இங்கு சமர்ப்பிக்க வேண்டும். இங்கு சமாதானமாகத் தீர்த்துவைக்க முயற்சிக்கப்படும். இச் சமாதானத் தீர்வில் இரு பகுதியினரும் உடன்பட்டால் இரு பகுதியினரும் தங்களின் கொடுக்கல் வாங்கல்களை முடிவுக்குக் கொண்டுவரும் உடன்படிக்கை விண்ணப்பத்தில் (Term of settlement form) கைச்சாத்திட்டு அதனைக் கொடுத்து தீர்த்துக்கொள்ளலாம்.

உடன்படிக்கைப்படி கடன் கொடுப்பனவு முடிவுக்கு வரவில்லையானால், கடன் கொடுத்தவர் நீதிமன்ற விசாரணைக்குத் திகதி கேட்டு மனுச்செய்தல் வேண்டும். (இதற்கு மனுச்செய்யும் கட்டணம் 100டொலர்களாகும்.) நீதிமன்ற விசாரணையில் உறுதியான தீர்ப்பு வழங்கப்படும்.

## கடன்பட்டவர் ஒருவர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஆணையினை உதாசீனம் செய்தால் என்ன நடக்கும்?

கடன்பட்ட ஒருவர் நீதிமன்ற அழைப்புகளை உதாசீனம் செய்வாராக இருந்தால், தீர்ப்பு அவருக்கு எதிராகவே போய்விடும். இதே போல் கடன் கொடுத்தவர் விசாரணைக்குச் சமுகம் அளிக்கத் தவறி வழக்கில் எதுவித மான அக்கறை காட்டாது விட்டால் அவரது கோரிக்கை (வழக்கு) நிராகரிக்கப்பட்டு விடும்.

"சமாதான தீர்வு விசாரணைக்கு" கடன் பட்டவர் வரவில்லையானால் கடன்கொடுத்தவர் நீதிமன்ற விசாரணைக்கு மனுச் செய்யலாம். அதற்கும் வரவில்லையானால் தீர்ப்பு கடன்பட்டவருக்குப் பாதகமாகப் போய்விடும். அதாவது கடன் பணம் கொடுத்தே ஆகவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டு விடும். பின்னர் தீர்ப்பின்படி கடனைக் கொடுத்து தீர்க்கவில்லையானால், அதற்கு எதிராக கடன்கொடுத்தவர் மனுச் செய்து வழக்கினை முன் எடுக்கும்போது, கடன்பட்டவருக்கு வருமானம் சொத்து ஏதாவது இருந்தால் அல்லது அது இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் செத்துகள் வருமானம் என்பன வருமானால் - கடன் கொடுத்தவரும் நீதித்துறையின் உதவியுடன் கடன்பட்டவர் பின்னால் தொடர்ந்தால் தப்பவே முடியாது.

## நீதிமன்றத்தின் தீர்ப்பு கடன் பணத்தினைக் கொடுக்க வேண்டும் என வழங்கப்பட்டால் கடன்கொடுத்தவர் பணத்தினை எப்படி அறவிடுவது?



நீதிமன்றம் தீர்ப்பினை வழங்குமே தவிர, பணத்தினை உடனடியாக வாங்கிக் கொடுக்கமாட்டாது. நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் கடன்பட்டவர் கடனைத் திருப்பிக் கொடுக்கா விட்டால், கடன் கொடுத்தவர் அடுத்தகட்ட நடவடிக்கையாக இத்தீர்ப்பினை அடிப்படையாக வைத்து, பணத்தினை அறவிடுவதற்கு இன்னொரு வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

முதலில் தீர்ப்பு வழங்கிய நீதிமன்ற ஆவணத்தினை வைத்து (Certificate of judgment என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இவ் ஆவணம் நீதிமன்றத்தில் 19.00டொலர் பணம் செலுத்திப் பெறப்பட வேண்டும்.) ஒரு கடிதம் மூலம் பணத்தினை கடன் பட்டவரிடமிருந்து கோரலாம். பிரச்சினை யில்லாது பணம் கொடுத்து தீர்க்கப்படவில்லையானால், அடுத்த கட்டமாக கடன் பட்டவருக்கு எதிராக "பரிசீலனை விசாரணை" (Examination Hearing) என்னும் விண்ணப்பப் படிவத்தினை எடுத்து நிரப்பி, தீர்ப்பு வழங்கிய ஆவணத்துடன் சேர்த்து கடன்கொடுத்தவர் தீர்ப்பினை நிறைவேற்றும் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்யவேண்டும். இப் "பரிசீலனை விசாரணை"யில் கடன்பட்டவரின் தொழில், வருமானம், வைத்திருக்கும் வாகனங்கள், வீடுகள், சொத்துகள் யாவும் நீதிமன்றத்தினால் பரிசீலனை செய்யப்பட்டு, ஒரு அட்டவணை தயாரிக்கப் படும். இப்பரிசீலனை விசாரணைக்குத் தகவல்கள் பெறுவதற்கு வழக்குத் தாக்கல் செய்த கடன் கொடுத்தவரும், கடன்பட்டவரின் தகவல்களை தேடி எடுத்துக் கொடுத்து, ஒத்துழைத்தால் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு உதவியாக இருக்கும்.

கடன்பட்டவருக்குக் கடனைத் திருப்பிக் கொடுக்க வசதி உள்ளது என இங்கு கண்டு பிடிக்கப்பட்டால் படிப்படியாக கடனைக் கொடுக்குமாறு தீர்ப்பு வழங்கலாம்.

"பரிசீலனை விசாரணைக்கு" கடன் பட்டவர் சமுகம் அளிக்கத் தவறினால், அல்லது கடன் பட்டவர் "பரிசீலனை விசாரணையில்" ஒத்துழைக்கத் தவறினால் கடன் பட்டவருக்கு எதிராக அவரை நீதி மன்றம் "நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை" (Contempt Hearing) என்னும் விசாரணைக்கு அழைக்கும். இவ் அவமதிப்பு விசாரணை வழக்கில் கடன்பட்டவர் விளக்கம் அளிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். இதில் நாற்பது நாட்கள் வரை சிறைத் தண்டனை வழங்கப் படும் அதிகாரமும் இவ் விசாரணைக்குச் சமூகம் அளிக்கத் தவறினால் "கைது ஆணை" பிறப்பிக்கும் அதிகாரமும் நீதிபதிக்கு உண்டு.

## தொடர்ந்து பணத்தினை அறவிட கடன் கொடுத்தவர் அடுத்த கட்டமாக பின்வரும் மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்:

- கோரிக்கைகளை நிறைவேற்றும் சத்தியக் கடதாசியுடன் கடன்பட்டவரின் சம்பளம், வங்கியில் உள்ள பணத்தினை முடக்கும் நீதிமன்ற ஆணை. (Affidavit for Enforcement & Notice of Garnishment) (இது வேலையில் இருந்து பெறும் மாதச் சம்பளத்தில் இருந்து அல்லது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தில் இருந்தோ படிப்படியாக அறவிடும் நீதிமன்ற ஆணை ஆகும்).

- கடன்பட்டவரிடம் உள்ள சொத்துக்களைப் பறிமுதல்செய்து விற்பனை செய்து பணத்தினை அறவிடும் ஆணை.

Writ of seizure and sale of personal property - கடன்பட்டவரின் சொத்துக்கள், உடமைகள் சட்டரீதியாக பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு, பின்னர் அந்த பணத்தினைக் கடன் கொடுத்தவர் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், இதனை நிறைவேற்றுவதற்குரிய செலவினை கடன் கொடுத்தவரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (விரும்பினால் இந்த செலவுகளை பின்னர் அறவிட இன்னொரு மனு தாக்கல் செய்யலாம்.) ஆனால், இது நிறைவேற்றி முடிய பொதுவாக ஆறு வருடங்கள் எடுக்கலாம்.

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# வீடு உங்கள் மாளிகை

- செந்தூரன் புனிதவேல் -

அனர்த்தங்களின் ஒரு பொதுத்தன்மை அது எப்போதும் இடம் பெறலாம்! அப்படி ஒரு அனர்தம் உங்கள் வீட்டிற்கு ஏற்படின் அதன் தாக்கம் சிறு அசௌகரியமல்லாமல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். உங்கள் அமைதியான வாழ்க்கையின் ஆணிவேரையே ஆட்டிவைக்கக்கூடும். மிகப்பாரிய விளைவாக காப்புறுதி செய்யாத திருத்தங்கள் மீள் செய்வதற்கு பெரும் பொருட் சேதமாகலாம். மிகப்பெரிய அனர்த்தமானால் முழுவீடுமே இழக்க நேரிடலாம். அதிர்ஸ்டவசமாக சில சிறு விடயங்களை கவணித்து வீட்டுக் காப்புறுதியை பெறுவதால் இத்தகைய இழப்புகளை தவிர்க்கலாம்.



முதன் முதலாக ஒரு விடயத்தை அறிந்திருப்பது அவசியம். அதாவது அடமானம் செய்யப்பட்ட வீடானால் அதற்கு காப்புறுதி வைத்திருப்பது மிகஅவசியம். வீட்டு அடமானப் பத்திரத்தில் இந்த நிபந்தனை கட்டயமாக இருக்கும். அப்படி காப்புறுதி இல்லாத பட்சத்தில் கடன்தந்த நிதிஸ்தாபணம் தாமாக ஒரு காப்புறுதியை வைத்து அதற்கான செலவினை கடன் பெற்றவரிடமிருந்து அறவிடுவார்கள். அப்படியான ஒரு அடமானம் இல்லாத வேளையில் அல்லது அடமானம் அடைக்கப்பட்டு முடிந்து விட்டாலும் வீட்டிற்கு காப்புறுதி வைத்திருப்பது அறிவுடமையாகும்.

ஆனால் காப்புறுதி செய்யும் வேளைகளில் பல இடங்களில் விசாரித்து பெறுவதுதான் அறிவான செயலாகும். காரணம் காப்புறுதி செய்யும் அமைப்புக்களின் கட்டணமும் காப்புறுதி செய்யப்படும் அனர்த்தங்களுக்கும் வேறுபாடு இருக்கும்.

காப்புறுதி செய்யும் வேளையில் உங்கள் அவதானம் அத்தனையும் கட்டணத்தில் செலுத்துவது தவறு! கட்டணங்களை குறைப்பதற்காகவே பல கம்பெனிகளில் விசாரித்தாலும் வேறு காரணங்களைக் கவனிப்பதவசியம். உதாரணமாக கழிவுத்தொகையையும் கவனிப்பதவசியம். அதாவது ஒரு அனர்த்தம் ஏற்படும் வேளையில் நட்டஈடு தரும் வேளையில் நீங்கள் தரவேண்டிய தொகையே கழிவுப் பணம் எனப்படும். அதாவது ஏற்படும் நட்டத்தில் நீங்கள் தரும் கொடுப்பனவு அதுவாகும். நீங்கள் கொடுக்கும் தொகை அதிகரிக்கும் வேளையில் உங்கள் கட்டணம் குறையும்.

### காப்புறுதி பற்றிய விளக்கங்களை தெளிவாக அறிந்திருங்கள்.

நீங்கள் பெறும் காப்புறுதி ஒரு தொடர்மாடி வாடகை வதிப்பாளர், தொடர்மாடி உரிமையாளர், வீடு அல்லது வாடகைக்கு விடப்படும் வீடு, என பலவகையில் வேறுபடும் வீட்டு காப்புறுதிகள் உண்டு. இவை அனைத்துமே தீக்காப்புறுதி (Fire Insurance) எனும் பொதுவான பெயரால் குறிப்பிடுவர். இவை பற்றி தெளிவான விளக்கத்தைப் பெறுவது அவசியம். அதற்காக துருவிப் பல கேள்விகளை கேட்டு விளக்கத்தை பெறுவது சிறப்பு.

வீட்டு உரிமையாளருக்கான பல வகையான காப்புறுதிகள் உள்ளன. சில குறிப்பிட்ட அனர்த்தனங்ளை அதாவது தீ, திருட்டு, சில வகையான நீரால் ஏற்படும் நஸ்டங்கள், புகையால் ஏற்படும் அனர்த்தனம் என அமையும். இத்தகைய திட்டங்களில் அதில் குறிப்பிட்ட அனர்த்தனங்களுக்கு மட்டுமே காப்புறுதி நஸ்ட ஈட்டினை தரும். இவை குறிப்பிட்ட அனர்த்தத் திட்டம் (Named price policy) என அழைக்கப்படும். அடுத்தது (Comprehensive Policy) முழுமையான திட்டம் என அமையும். இதில்குறிப்பிட்ட அனர்த்தனங்களை தவிர்த்து மற்ற எல்ல அனர்த் தனங்களுக்கும் நட்ட ஈடு தரப்படும். அனேகமாக முழுமையான திட்டங்கள் ஒத்ததாக இருப்பினும் சிறு சிறு வித்தியாசங்கள் உடையதாய் இருக்கும்.

### விலக்கப்பட்டவைகளை குறித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் காப்புறுதி வீட்டையும், அதில் உள்ள அனைத்துப் பொருட்களையும் எல்லா அனர்த்தனங்களுக்கும் காப்புறுதி செய்து சில அனர்த்தனங்களை விலக்கி இருக்கலாம். இந்நிலையில் உங்கள் காப்புறுதி முகவரிடம் அவர்களால் விலக்கப்பட்ட அனர்த்தனங்கள் என்ன என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் எல்லா முழுமையான திட்டத்திலும் விலக்கப்பட்ட சில அனர்த்தனங்கள் இருக்கவே செய்யும். இவற்றை அறிந்திருப்பது மிக அவசியம்.

### விலக்கப்பட்டவற்றை அறிந்து கொள்ளுங்கள்

உங்கள் காப்புறுதி வீட்டையும் அதில் உள்ள பொருட்களையும் எல்லா அனர்த்தங்களிலும் காப்புறுதி செய்யினும் சிலவற்றை விலக்கி இருக்கும். உங்கள் காப்புறுதி முகவரிடம் எவையெவை விலக்கப் பட்டுள்ளது என கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இப்படி தெளிவான அறிவில்லாவிடில் கஸ்டம் வந்தபின் தான் ஞானம் பிறப்பது போல் அறிவு வரும். இது எரியும் கொள்ளியை ஏறத்தள்ளுவது போல் வேதனையை அதிகரிக்ச்செய்யும்.

இன்னும் ஒரு முக்கிய விடயம் பல பொருட்கள் குறிப்பிட்ட பெறுமதி வரையும் தான் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும். உதாரண



மாக வீட்டில் உள்ள பொருட்கள் $250,000 வரைக்கும் காப்புறுதி செய்யப் பட்டிருந்தாலும் நகைகள் ஒரு குறிப்பிட்ட தொதைக்கு மட்டுமே காப்புறுதி நஸ்டஈட்டை தரும். இப்படியான தொகையிலுள்ள கட்டுமானங்களை அறிந்திருப்பது அவசியம். உதாரணமாக நகைகள் $5000 வரைதான் காப்புறுதி செய்யப்படும் ஆனால் வீட்டில்உள்ள மொத்த தொகையில் கனிசமான பங்கு நகையாக இருப்பது யாவரும் அறிந்ததே.

விலக்கப்பட்டுள்ளதை தெளிவாக அறிந்திருக்கும் வேளையில் எவையெவை காப்புறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக அறிந்திருப்பதவசியம். காப்புறுதிகளில் Fine Print எனக்குறிப்பிடப்படும் சில நிபந்தனைகள் இருப்பது வழமை. இவற்றில் மிகக் கவனமாக இருப்பதவசியம். பொதுவாக நீரால் வரும் அனர்த்னங்கள் காப்புறுதியில் ஈடு செய்யப்படும் என்று நினைக்கலாம்.ஆனால் இதிலும் பல நிபந்தனைகள் உண்டு என்றால் யாரும் வியப்புறுவர். குழாய் வெடித்து நீர் வந்து ஏற்படும் நட்டங்களை ஈடு செய்வார்கள். ஆனால் அதெவேளை வீட்டில் யாரும் வதியாவிடில ஈடு செய்யமாட்டார்கள். குழாய் வெடித்து வரும் நீரால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்தாலும் வெள்ளத்தால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய மாட்டார்கள்.

■ ■ ■

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

பாரதி கலைக்கோயில் பெருமிதத்தோடு முன்னெடுக்கும்
"அன்பின் பணி"
24 மணிநேர இசை நிகழ்ச்சிக்கு அனுமதி இலவசம்.
பெப்ரவரி 16ம் திகதி மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி
17ம் திகதி மதியம் 12 மணிக்கு நிறைவுபெறும்.
இடம் - ஐயப்பன் கலை மண்டபம்.
635 Middlefield Ave. Scarborough
(Middlefield & Finch)
416-529 2821, 416-457 8424

# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



**Life RESP RRSP Non Medical Critical Illness**



**Insurance Broker**

# Guna Selliah

**416.371.7776**

digi Media

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com


"The Home Team"
Shan Thayaparan
Sales Representative
Direct: 416.567.7675
"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"
Your peace of mind is our goal
Call Us First!
Kumar Muthusamy
Sales Representative
Direct: 416.518.0118
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
Gas Sta./Con. Store
SOLD
Over 2.6Mil. Litr. Coffee, Conv. Store, 2 Bay Car Wash, Possible liqueur Store with 4 Acres land. 2 Min. form 401. Only one hour drive from Toronto. Huge potentials.
$439,000
PLAZA
TIMHORTONS & ESSO
EXCLUSIVE
VERY PROFITABLE PLAZA WITH TIMHORTONS, ESSO, AND NINE OTHER BUSINESS WITH LONG TERM LEASES.8%CAP RATE.
$3,750,000
14th/9th Line
$469,900
Brand New House. Never Lived In. Hardwood Floor Throughout
14th/9th Line
$379,900
Location! Access To Public Transportation, Schools, New Plaza; Lots Of $$$ Spent On Upgrades
Markham & Steeles
$408,000
Back Onto Forest. Pie Shape Lot. W/O Basement, 3 Years New. First Floor HW Floor New Fence; Upg Deck
Mclaughlin/Sandalwood
$356,789
Gorgeous Open Concept, Well mainained!. 4 Br Home
Freshly Painted, Looks Immaculate!!
Fletherscrk/Williams
$359,000
Beautiful Home With Many Upgrades. Mn Floor Den. B/R With Sitting Area. Master With 4 Pc Ensuite Nicely Landscaped Front And Back.
Warden/St.Clair
$269,900
Location! 3 Bed Rooms Close to Subway, Schl, Shp.
Brock & Kingston Rd
$359,800
Well Maintained Spacious 4 B/R Home Approx 2Yrs old; Close To All Amenities - Pickering Town Centre
Sandlewood/Sunnyvieway
$359,900
Beautiful Home On Quiet Cres., Over $35K on Upg., Interlock W/way, Upg. Decor Switches & Lighting
Markham & Steeles
$369,000
Beautiful Corner Home W/ L-Shaped Porch, Cls To Shop. Centres, School,Ttc; Mn Flr&Bsmt,Paved Driveway
McCowan & Bur Oak
$378,000
Bright & Spacious! 4 Bdrm Model! Open Concept W/Decor Column! Steps To Go/Public Transit,Forest Setting, Parks, Rec. Centre,Schools
We will help you to get financing for your Business or Home
Visit Us @ www.shan123.com
HOMELIFE
GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
HomeLife GTA
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is independently owned and oprerated.

# சக்தியையும் பணத்தையும் சேமிப்போம்

சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடுவிற்பனைப் பிரதிநிதி -



அதிகரித்து வரும் வீட்டுச் செலவுகள் வீடு வாங்குபவர்களை அச்சுறுத்துவதாக அமைகிறன்றது. 'வீட்டுக்குக் கட்டும் மோர்கேஜை விட Utilities அதிகமாக உள்ளது.' என பலரும் புலம்புவது புரிகின்றது. ஓரளவுக்கேனும் சக்தி சேமிப்புக் குறித்த அறிவினைப் பெறாவிடில் மாதாந்தம் வீணாக சக்திக்கான செலவுகள் அதிகரிக்கவே செய்யும். சக்தி சேமிப்பு என்பது வெறுமனே பணத்தை மட்டும் சேகரிக்க உதவும் ஒன்றல்ல. சூழலையும் சக்தியையும் பேண உதவும் ஒரு செயலாகும். சிறந்த சக்திப்பயன்பாடுள்ள (Energy Efficiency) மின் குமிழ்கள், மின் உபகரணங்கள் என்பவற்றை பாவிப்பதன் மூலம் பெருமளவு சக்தியை சேமிக்கலாம்.

பழைய திருத்தப்படாத வீடுகளில் சக்தி சேமிப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சக்திச் செலவில் சுமார் 40% சதவீதத்தைச் சேமிக்க முடியும். Natural Resources Canada (NRC)இன் தகவலடிப்படையில் 2/3 வீட்டு உரிமையாளர்கள் Energy Guide ஆல் வலியுறுத்தப்பட்ட சக்தி சேமிப்பு நடவடிக்கைகளை பின்பற்றி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உணர்ந்துள்ளனர் என அறியப்படுகின்றது. அவர்களுள் அரைப்பங்கினருக்கு அதிகமானோரின் கருத்துக் கணிப்பீட்டின்படி இவ்வாறான நடவடிக்கைகளை பின்பற்றியதனால் அவர்களின் வீட்டின் பெறுமதி அதிகரித்துள்ளமையும் அறியப்படுகின்றது.

அத்துடன் இந்நடவடிக்கைகளின் பின் வீட்டில் காற்றின் தரம் உயர்ந்திருப்பதையும் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதுவும் சக்திச் செலவைக் குறைக்க உதவும் ஒரு காரணியாக அமைகின்றது.

வீட்டைத் திருத்தியமைக்கும் எண்ணமிருப்பவர்கள் Canada Mortgage and Housing Corporationம் NRCம் தரும் தகவல்களைப் பின்பற்றி உங்கள் வீட்டின் வசதியையும், சுகாதாரத்தையும், நீடிப்புத்திறனையும் அதிகரிக்க முயல்வதோடு மாதாந்த சக்திக்கான கட்டணங்களையும் குறைக்க முயல்வது நற்பயனைத் தரும்.

### சக்தி சேமிப்பு குறிப்புகள் சில

- உங்கள் வீட்டை திருத்துமுன்பாக Energy guide for Houses என அழைக்கப்படும் வீட்டின் சக்தி சேமிப்புக்கு வழிமுறைகளை கூறுபவர்களை அழைத்து உங்கள் வீட்டை முழுமையாக பார்வையிட்டு சக்தி விரயம் குறித்த மதிப்பீடுகளை செய்யுமாறு வேண்டிக் கொள்ளவும். எத்தகைய செயற்பாட்டுத்திறனில் உங்கள் வீட்டில் சக்தி பயன்படுத்தப்படுகின்றது. வீட்டிலுள்ள சக்தியை விரயமாக்கும் விடயங்கள் யாவை? அவற்றை எவ்வாறு எவ்வகையில் நிவர்த்தி செய்வது? என்பன போன்ற வழிமுறைகளை கேட்டறியுங்கள். சில பழைய வீடுகளில் காற்றிறுக்கத்தைக் குறைத்து 25%வரையான வெப்பத்துக்காக செலவிடும் சக்தியைக் குறைக்கலாம்.
- Furnaces பொதுவாக 15லிருந்து 20 வருடங்கள்வரை பயன்பட வல்லன. உங்கள் furnaceஐ நீங்கள் மாற்றும் காலம் வந்து மாற்றவுள்ளீர்களானால் புதிதாக பிரதியீடு செய்யும் furnace ஆனது high energy-efficient energy star தகைமையுள்ள modelஆக பார்த்து மாற்றுங்கள். இத்தகைய furnaceகள் உங்கள் heating billகளில் 20%ஐ குறைக்க உதவுகின்றன.
- உங்கள் heating systemஐ தவறாமல் ஒழுங்காக பராமரிக்கவும் பராமரிக்கப்படாத filtersம் பாகங்களும் சக்தி சேமிப்பினைக் கோட்டை விடுவதோடு நீண்டகால பாவனையையும் மட்டுப்படுத்துகின்றது.
- வீட்டில் Ventilation Systemஐ தொடர்ச்சியாக பயன் படுத்துகின்றீர்களேயானால் அதற்கு பதிலாக HRV என அழைக்கப்படும் Heat Recovery Ventilationஐ பிரதியீடு செய்யவும். இது ஆரோக்கியத்துக்கு துணைபுரிகின்றது. அதே வேளை அதை இயக்குவதற்கு செலவும் குறைவாக இருக்கும்.
- வீட்டிலுள்ள மின் உபகரணங்கள் யாவற்றையும் High Energy-Consuming Appliances என கூறப்படும் சக்தி சேமிப்புக்காக சிறப்புற தயாரிக்கப்பட்ட உபகரணங்களாக மாற்றுங்கள்.

உதாரணமாக வீட்டில் உள்ளே குளிர்சாதனப் பெட்டியை சக்திசேமிப்பு உபகரணமாக வாங்கிப் பாவிக்கும்போது மட்டுமே வருடமொன்றிற்கு $200 டொலர்களை சேமிக்க முடியும். சக்தி சேமிப்பு யுக்திகள் இது போன்று பல உள்ளன. வீட்டைத் திருத்தவுள்ளவர்கள் முதலில் இது குறித்த அறிவுறுத்தல்களை அறிந்து செயற்படுவது நன்மை பயக்கும். இதுகுறித்த மேலதிக விடயங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ள CMHC யுடன் 1-800-668-2642 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்தோ www.cmhc.ca என்ற இணையத்தளத்திலோ பெறலாம். இல்லையேல் மேலதிகமாக EnerGuide தகவல்களைஅறிய NRCயுடன் 1-800-387-2000 என்ற தொலைபேசியில் அழைத்தோ அல்லது www.oee.nrcan.gc.ca என்ற இணையத்தளத்திலோ பெறலாம்.

கோடைகாலத்தில் புல்லைப் பச்சைப் பசேலாக வைத்திருக்கவும் பூந்தோட்டங்களை குளிர்மையாக வைத்திருக்கவும் அதிகமாக நீரை பயன்படுத்துவது வழமை. வாகனங்களை கழுவுதல், நீச்சல் குளங்களைப் பேணல் என நீர் விரயம் கோடை காலத்தில் அதிகமாக இருக்கும். இவ்வாறாக நீர்ப் பாவனையானது இருமடங்கை விட அதிகரிப்பதால் கனடிய நகரங்கள் பலவற்றினதும் Municipal Water Systemகள் மேலதிக அழுத்தங்களை எதிர் நோக்குகின்றன. இதனால் நீர்ப் பாவனையை மட்டுப்படுத்தும் தேவை உருவாகிறது. இதனால் Municipal யால் நீருக்கான செலவு அதிகமாக எம்மிடமிருந்து அறவிடப்படுகின்றது. இதனால் வரி செலுத்துபவர்களுக்கும் நீர் பாவிப்பவர்களுக்கும் செலவுகள், அதிகரிக்கின்றன. CMHCயானது நீர்ப்பாவனையை குறைக்கவும் பல வழிமுறைகளை முன்வைக்கின்றன. அவற்றில் சில:

- பூந்தோட்டங்கள் வைக்கின்ற பொழுது குறைந்த நீரைப்பெற்று சூரிய ஒளியிலும் மண்வளத்திலும் அதிகமாக தங்கியுள்ள தாவரங்களை நாட்டவும்.
- நீர் வார்க்க முன்பாக கடந்த சில நாட்களில் இயற்கை வழங்கிய நீரின் அளவை மனதில்க் கொண்டு வார்க்கவும். இதற்காக மழையின் அளவை அளவிட ஒரு அளவுச்சாடியை தோட்டத்தில் வைக்கலாம். வாராந்தம் சேகரிக்கப்படும் மழையின் அளவைப் பொறுத்து நீரை வார்க்கலாம்.
- முறையான சிறப்புப்பயன் தரவல்ல நீர்ப்பாய்ச்சல் முறையை பின்பற்றவும். உதாரணமாக தாவரப் பாத்திகளுக்கும் தோட்டத்திற்கும் Soaker hoseஐ நிலத்தில் வைக்கவும். இல்லாவிடில் நேரடியாக மண்ணிற்கு நீர் பாய்ச்சப்படாமல் இவை கள்மீது பாய்ச்சப்படும். இதனால் நீர் விரைவில் ஆவியாகி இழக்க நேரிடும்.
- புற்களுக்கு தினமும் நீரூற்ற வேண்டிய தில்லை. 2.5cm நீர் மட்டும் ஊற்றினால் போதும். வாரத்திற்கு ஒரு முறைக்கு மேல் நீரூற்றத் தேவையில்லை. மழை இடையில் பெய்தால் ஒரு வாரத்தை விட்டு மறு வாரம் நீர் வார்க்கலாம். (2.5cm என்பதை எவ்வாறு அளவிடுவது? ஒரு Tuna tin ஒன்றை புற்தரையில் வைத்துவிட்டு புற்றரைக்கு நீர்வார்க்க வேண்டும் இந்த tin நிரம்பும் வரை).
- Sprinklerஐ செயல்படுத்தும் பொழுது இவ்வாறாக கொள்கலன் 2.5cm நிறைவதற்கு எடுக்கும் நேரத்தை ஒருமுறை கணித்துக் கொண்டு அதன்பின் அதே நேரத்திற்கு தானாக இயங்கும் வகையில் செயற்படுத்தி விடலாம்.
- Sprinklerஐ அல்லது hoseஐ சரி செய்கையில் புற்தரையில்லாத இடங்களில் நீர் வீணாக்கப்படாமல் பார்க்கவும்.
- நீர் ஆவியாகி வீணாவதை தவிர்ப்பதற்கு புற்தரைக்கும் தாவரங்களுக்கும் காலை 9மணிக்கு முதல் நீர் பாய்ச்சவும். அல்லது வெப்பம் குறைந்த நேரங்களில் நீர் பாய்ச்சவும்.
- நீரை மெதுவாக, நன்றாக, வீணடிக்காமல் மண் உறிஞ்சும் வகையில் பாய்ச்சவும்.
- Hoseஇல் அல்லது நீர்பாய்ச்சும் உபகரணத்திலுள்ள ஒழுக்குகள் அடைப்புகளை அவ்வப்போது சோதித்துத் திருத்த வேண்டும்.
- புல்லு வெட்டும்போது 6-8cmக்கு குறையாமல் வெட்ட வேண்டும். ஏனனில் வேர்கள் இறுக்கமாக நீரைத் தேக்கி வைத்திருக்க போதுமானதாக இருக்கும். வேர்களுக்கு நிழல் கிடைக்கும்.

இவை போன்று ஒவ்வொரு விடயத்திலும் பல வழிமுறைகளில் சக்தியை சேமிக்கலாம். அவற்றை அறிந்து தெரிந்து பின்பற்றுவதன் மூலம் சக்தி சேமிப்பில் நாமும் வெற்றிகரமாக பங்குபற்றுவதோடு சக்திக்கான செலவு நீருக்கான செலவுகளையும் மிச்சப்படுத்தலாம். சிறுதுளி பெருவெள்ளம் இல்லையா?... எம்மாலான சேமிப்பை நாம் செய்து நாட்டுக்கும் நமக்கும் பயனளிப்போம். அடுத்தவர் பார்க்கட்டும், எமக்கெதுக்கு கவலை... என நாம் இருந்தால் அதன்பின் நீர்ப் பற்றாக்குறை சக்திப் பற்றாக்குறை எனப் பல பிரச்சனைகளை கனடா எதிர் நோக்க நேரிடும். துளித்துளியாக நாம் சேமிப்போம் பெருவெள்ளமாக அது பயன்தரட்டும்.

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors).
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# Open Houseக்குத் தயாராவது எப்படி?



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

ஒரு வீட்டைப் பார்வைக்கு விடும்போது, அதில் உள்ள சகல நல்ல அம்சங்களை வெளிப்படுத்துவது முக்கியமாகும். அதனால்




தான் Multiple Listing Service (MLS) ஊடாக வீட்டின் முழு விபரத்தையும் எல்லா வீடு விற்பனையாளர்களிடமும் தெரியப்படுத்தி பல விதமான வீடு வாங்குபவர்களுக்கும் அறிமுகப்படுத்த உதவியாக இருக்கும்.

அடுத்ததாக, உங்கள் வீட்டு விற்பனையாளர் இருவிதமான Open House ஐ உங்களுக்கு அறிமுகப்படுத்துவார். அதாவது, முதலாவது Open house for Realtors only. அப்படியாக உங்களது வீட்டை அறிமுகப்படுத்தும் போது, உங்களது வீடு நல்ல அம்சங்களை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தால் அந்த விடு விற்பனையாளர்கள் தங்களது clientsஐ அழைத்துவந்து வீட்டை விற்பனை செய்வ-தற்கு உதவி செய்வார்கள்.

அதேநேரத்தில் உங்களது வீடு விற்பனையா-ளர், வீட்டை Genaral publicற்கு open house போடுவதற்கு recommendation செய்வார்கள். அத்தருணத்தில் வீட்டைப் பார்த்துக்கொண்டு செல்பவர்களுக்கு ஒரு attention வரக்கூடிய தாக வீடு நல்ல துப்பரவாகவும், attractive ஆகவும் சரியான விலையிலும் ஏதாவது பழுதுகள் ஏற்பட்டிருந்தால் அதைச் சரியான திருத்தமும் செய்து வைத்துக்கொண்டால், பல வீடுகளைப் பார்த்து வாங்குவதற்குத் திரிபவர்களுக்கு எமது வீட்டை விற்பதற்கு உதவியாக இருக்கும்.
கூடுதலாக "பப்ளிக் ஓபன் ஹவுஸ்", வாரக் கடைசியில் மாலைவேளையில் செய்தால், வீடு வாங்கப் பார்த்துத் திரிபவர்களுக்கு இலகுவாக இருக்கும். அதே நேரத்தில், உங்களிடம் ஏதாவது வளர்ப்புப் பிராணிகள் இருந்தால் அவற்றை வீட்டில் விடாது இருப்பது வீடு வாங்குபவர்களின் கவனத்தை வீட்டில் மட்டும் செலுத்துவதற்கு உதவியாக இருக்கும். அதே நேரத்தில் உங்களது வீடு விற்பனை முகவர் உங்கள் வீட்டில் உள்ள-வர்களையும் வெளியே சென்றால் நல்லது எனக் கேட்டுக்கொள்வார்கள். நீங்கள் வீட்டில் இருந்தால் வீடு பார்க்க வருபவர்கள், வீட்டை அவசரமாகப் பார்த்துவிட்டுச் செல்லவும் எத்தனிக்கலாம். அதுவே அவர்களுக்கு ஏதாவது அபிப்பிராயம் இருந்தால் அதை உங்களது வீட்டு விற்பனையாளரிடம் சொல் வதற்கும் தயக்கம் காட்டலாம். வீடு வாங்கு பவர்களின் அபிப்பிராயம் வீட்டில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு உதவி யாக இருக்கும்.

அடுத்ததாக உங்களது வீடு விற்பனை முகாமையாளர் உங்களிடம் சிலவற்றை சிபாரிசு செய்யலாம். அதாவது உங்கள் வீட்டை பாதுகாப்பாகவும், பார்க்க வருபவர்-கள் அதை ரசிக்கக் கூடியதாகவும் செய்வ தற்கு சில முக்கிய தகவல்களைத் தரலாம். அதே நேரத்தில் உங்களது வீட்டு விற்பனை முகவர் வீட்டைப் பார்க்க வருபவர்களின் பெயர், தொலைபேசி இலக்கங்கள் போன்ற-வற்றைச் சேகரிப்பதால் உங்கள் வீட்டினுள் வந்து போனவர்களின் விபரங்களை அறிந்து வைத்திருக்கலாம். அதே நேரத்தில் வீட்டைப் பார்க்க வருபவர்களை வீடு விற்பனை முகாமையாளர் கூட்டிச்செல்வது ஒரு நல்ல வழக்கமாக இருக்கும்.

கீழே எப்படியான தகவல் உங்களது ஓப்பன் ஹவுஸிற்கு உதவியாக இருக்கும் எனப் பார்ப்போம்.

- ஏதாவது உடையும் பொருட்கள், வழுக்கும் நிலங்கள், sharp counter tops corners இருந்தால் அவற்றைக் கவனித்து அதற்-கான பாதுகாப்பைச் செய்தல் வேண்டும்.
- வீட்டில் உள்ள நகைகள், கமெரா, காசு என்பவற்றைப் பூட்டி வைத்தல் நல்லது.
- மணக்கும் சமையல்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. நல்ல மணம் வரும் காப்பி, குக்கீஸ் போன்றவை வீட்டிற்கு நல்ல மணத்தைத் தரலாம்.
- குளிர்காலத்தில் warm fire வீட்டினுள் வருபவர்களுக்கு ஒரு நல்ல வரவேற்பு உணர்வைக் கொடுக்கும்.
- சுவர்களில் சிறிய கையடையாளங்களோ அல்லது கதவு திறக்கும்போது வரும் சிறிய சத்தம் கூட வீட்டைப் பார்க்க வருபவர்-களுக்கு ஒரு இடைஞ்சலாக இருக்கலாம்.
- எல்லா இடங்களையும் vacuum செய்து துப்பரவு செய்தல்.
- அதிகமான வீட்டுத் தளபாடங்களை வேறு இடங்களில் மறைத்து வைப்பதால் வீடு ஒரு நெருக்கமாகத் தோற்றமளிக்க மாட்டாது.
- வீட்டில் உள்ள புத்தகங்கள், விளையாட் டுச் சாமான்கள், துணிகள் என்பவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்துக்கொள்ளல்.
- கண்ணாடிகளைத் துடைத்து வைத்திருங் கள்.
- யன்னல்களின் துணிகள், மறைப்புகளைத் திறந்து வைத்துக்கொள்ளுதல்.
- வீட்டின் நிலத்தில் உள்ள ஊத்தை களைத் துப்புரவு செய்தல்.
- Lighting - ஒழுங்காக எல்லா lightsம் வேலை செய்கின்றனவா எனப் பார்த்துக் கொள்ளுதல்.
- வீட்டு வளர்ப்புப் பிராணிகள் இருக்கும் இடத்தைத் துப்புரவாக வைத்திருத்தல்.

அத்துடன் வீட்டின் வெளிப்பகுதிகள் துப்புர வாகவும் சரியான முறையில் பல்ப்புகள் வேலைசெய்கின்றனவா எனவும் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆகவே நாம் எமது வீட்டைச் சரியான விலைக்கு விற்கவேண்டு மாயின் எமது முழு ஒத்துழைப்பும் உங்க ளது வீட்டு விற்பனையாளர்களுக்கு வழங்கு வதால் இலகுவாக எமது நோக்கத்தை நிறைவுசெய்யலாம்.

■ ■ ■


தாய் வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

வீடு வாங்க விற்க



Sutton



Alen Sivasambu
Sales Representative
Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617
alen@sutton.com




A TEAM Towing
"Affortable and Trusted Services"
Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars
Call Esan or Donald
Direct: 416-835-1700
525 Bloor St W
Toronto, ON , M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

# கலை பண்பாட்டு விழுமியங்களும் புதிய தலைமுறையின் தேடல்களும்



பொன்னையா விவேகானந்தன்

கலை பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டு திகழும் ஒரு மனிதக் கூட்டமானது, ஒரு இனமாக வரையறுக்கப்படும்.'' இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் ஒன்று குறிப்பிடுகின்றது.

மேற்குறித்த இலக்கணத்திற்கியைந்த இனங்களில் தமிழினமும் ஒன்று என்பதைக் குறிப்பிடவேண்டியதில்லை. தாய்நாடு விட்டகன்று அந்நிய மண்ணில் நிரந்தர வாழ்களத்தை அமைக்க முயன்று கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகக் குழுமங்களின் எதிர்காலம் குறிப்பிட்ட இலக்கணத்திற்கமையுமா? என்பது ஐயத்துக்குள்ளாலாம்.

ஆளுமை மிக்க பொதுமொழியினைக் கொண்ட ஒரு நாட்டில், பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாக்க கொண்ட மக்கள் கூடி வாழ்கின்ற போது சூழல் பரிமாற்ற மொழியாக அப் பொதுமொழியே ஆதிக்கம் பெறுகின்றது. இந்நிலையில் கருத்துப் பரிமாற்றச் செல்வாக்கினை மெல்ல இழக்கும் தாய்மொழி, வீட்டுக்குக்குள் மட்டும் காக்கப்படுகின்ற பண்பாட்டு மொழியாக தங்கி நிற்கும். இனத்தின் ஆளுமைக்கமைய இந்நிலையை எட்டுவதற்கான காலம் கூடிக் குறையலாம். ஆனால் கலை பண்பாட்டு பேணல்கள் மொழியில் இருந்து மாறுபட்டவை. தாய்மொழியில் இருப்பதைப் போன்ற சிறப்பு இல்லையெனினும், பேசப்படுகின்ற பிற மொழிகளாலும் கலை பண்பாட்டினை எடுத்துச் செல்ல முடியும்.

நம் வாழ்களமானது, தொடர்ச்சியான வாழ்க்கைப் போராட்டத்தில் வழிநெடுகிலும் பெரும் அசதியை ஏற்படுத்தவல்லதாகும். இப் புதிய சூழலில் வாழத்தலைப்பட்டு பிறரால் அடையாளப்படுத்தக்கூடிய தனிப்பண்புகயோடு பொருளாதார வெற்றிகளின் பாதையில் வளர்ந்துசெல்லும் இனமாகவே தமிழினம் இனங்காணப்படுகின்றது. அதே சமயம் இனத்தின் பாரம்பரிய தன்னியல்புகளைப் பேணுவதில் பெரும் பங்காற்றும் கலை பண்பாட்டுச் செயற்பாடுகளானது, பெறப்படுகின்ற பொருளாதார வெற்றிகளுக்குச் சமாந்தரமாக எடுத்துச் செல்லப்படவில்லை என்பதானது இனப்பற்றாளர்களுக்கு வேதனை தரக்கூடியதொன்றாகும்.

நமது கலை பண்பாட்டுப் பேணல்கள் நமது தலைமுறைக்கானது அல்ல, வரப்போகும் சந்ததியினருக்கானது என்பதில் நாம் தெளிவு கொண்டவர்களாக இருக்கவேண்டும். நமது பாரம்பரிய தாய்ப்புலத்திலேயே காலத்திற்குக் காலம் மரபுகளைப்பேணுகின்ற வடிவங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. மரபுகளும் மாற்றங்கைள உள்வாங்கியிருக்கின்றன. இந்நிலையில் தகவல், தொழில்நுட்பங்களில் அதியுயர் வளர்ச்சி பெற்றதும், ஓப்பீடு செய்ய வல்ல மாற்றின கலை, பண்பாட்டுச் செயற்றிறன் மிக்கதுமான வாழ்களத்தில் நின்றபடி மாற்றங்களை ஏற்க மறுப்பது பொருத்தமான ஒன்றல்ல. அதேவேளை அடுத்த தலைமுறையை



ஈர்க்கும் வகையில் மரபுகள் சிதையா வண்ணம் கலைவடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதும் எமது கடமையாகும்.

கலைவடிவங்கள் சூழலுக்கேற்ப மாற்றங் கொண்டாக வேண்டும் என்ற உண்மை உணரப்படும் அதே வேளையில், பல்லினப் பண்பாட்டுச் சூழல் ஏற்படுத்தும் தாக்கங்களையும், எதிர்விளைவுகளையும் கணித்து,

38ம் பக்கம் பார்க்க...


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial



RESP SPECIAL!
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

தனா
மாணிக்கவாசகர்
*Broker*


Life Insurance
Critical Illness Insurance

Home Equity Line of Credit
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)



INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# தேமதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்!



பாலா
இராஜேந்திரன்

பாட்டுக்கொரு பாரதி – அந்தப் பாரதியார் தான் தேமதுரத் தமிழோசை உலமெல்லாம் பரவும் வகைசெய்வோம் என்று கூறினார். அது எவ்வளவு தீர்க்க தரிசனமாயிருந்தது பார்த்தீர்களா? இன்று உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ் இன்று பல நாடுகளில் பேசப்படுகின்றது. தமிழ் வானொலிகள், தொலைக்காட்சிகள் உலகம் முழுவதும் ஒலி, ஒளியைப் பரப்புகின்றன. 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்துடன் இலட்சக்கணக்கான தமிழர்கள் புலம் பெயர்ந்தனர். பாதுகாப்புக்காகவும், உழைப்புக்காகவும், பிள்ளைகளின் கல்விக்காகவும் புலம் பெயர்ந்தனர். முற்றிலும் மாறுபட்ட காலநிலையைக் கொண்ட நாடுகளுக்கு அவர்கள் புலம்பெயர்ந்தனர்.



ஐரோப்பாவில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, டென்மார்க், சுவிடன், இத்தாலி, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா. நியூசிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியர்கள் - முக்கியமாகத் தமிழர்கள் - தேயிலைத் தோட்டங்கள், றப்பர் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள், காப்பித் தோட்டங்கள் என்பவற்றில் குறைந்த சம்பளத்திற்கு குறைந்த சலுகைகளுடன் வேலை செய்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து இலங்கை, மலேசியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், கயானா போன்ற ஆங்கிலேயர்கள் ஆட்சிசெய்த நாடுகளுக்கு ஆங்கிலேயரால் குடும்பம் குடும்பமாகக் கொண்டுவரப்பட்டார்கள். இந்த இரண்டு தமிழர் குடியகல்வுகளுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு. ஆங்கிலேய சாம்ராச்சியம் உலகம் முழுவதும் பரவியிருந்தபோது கொண்டுவரப்பட்ட தமிழர்கள் தமது தாய்நாட்டுடன் தொடர்பை வளர்க்கவில்லை. காரணம் அப்போது போக்குவரத்து வசதி மிகக் குறைவு. கடிதத் தொடர்பும் அதிக நாட்கள் எடுக்கும். மேலும் அக்காலப்பகுதியில் தமிழ் பத்திரிகைகளோ, வானொலி, தொலைக் காட்சியோ சினிமாப் படங்களோ இருக்கவில்லை. அவர்கள் சென்ற நாடுகளில் தமிழ் படிக்கக்கூடிய வசதிகளும் இருக்கவில்லை. எனவே, அவர்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழை மறந்துவிட்டார்கள். ஆனால், இன்றும் தமிழ், இந்துப் பெயர்களையே தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுகிறார்கள்.

உதாரணமாக. கணேஷ், விஷ்ணு, சரஸ்வதி, ராஜா, சிவா, வாணி என்ற பெயர்கள் அவர்கள் மத்தியில் உள்ளன. ஆனால், பெயரைப் பதிவுசெய்துகொள்ளும் அலுவலர்கள், தமிழரோ இந்துக்களோ அல்லாதபடியால் அவர்கள் விரும்பியவாறு பெயர்களை எழுதினார்கள். எனவே, பெயர்கள் மாற்றமடைந்து காணப்படுகின்றன. இப்போது அவர்கள் தமிழ் கற்க ஆர்வம் காட்டுகிறார்கள். முக்கியமாகக் கனடாவில் வாழும் கயானாத் தமிழர்கள் இப்போது அவர்களால் நடாத்தப்படும் காளிகோவிலில் தமிழ் படிக்கிறார்கள். என்னிடம் இரண்டு கயனிஸ் பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்கள். அவர்கள் தமிழைப் படிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்து சமயத்தைப்பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறார்கள். இப்படி 150 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டிலிருந்து வந்தாலும் 7, 8 சந்ததி கடந்தாலும் தமிழ் கற்க ஆவலாயுள்ளார்கள்.

தமிழீழத்திலிருந்து இனப்படுகொலைக்குப் பயந்து ஓடிவந்த எம்மவர் இப்போதே தமிழ், இந்துப் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்கு வைக்க விரும்புகிறார்கள் இல்லை. அவர்கள் சோதிடத்தையும் எண்கணித சாஸ்திரத்தையும் நம்பி, அவர்கள் கூறுவதற்கேற்ப பெயர்களை வைக்கிறார்கள். அந்தப் பெயரிலிருந்து ஒருவர் தமிழர் என்று அறிந்து கொள்வது மிகவும் கடினம். நாம் இதுவரை கேட்டறியாத பெயர்கள் உள்ளன. சிறு பெயர்கள் வேண்டுமானால் எத்தனையோ அழகிய தமிழ்ப் பெயர்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைத் தமது பிள்ளைகளுக்கு வைக்கலாமே!

நாம், வீட்டில் எமது பிள்ளைகள் உறவினருடன் தமிழில் பேசவேண்டும். தமிழில் பேசுவதைக் கட்டாயப்படுத்த வேண்டும். எந்த ஒரு தமிழரைச் சந்தித்தாலும் தமிழிலேயே உரையாட வேண்டும். தமிழை எம் சிறாருக்கு நாமே கற்றுக்கொடுக்கலாம். தமிழ் வகுப்புகளுக்கு எமது குழந்தைகளை அனுப்ப முடியுமானால், மிகவும் நன்று. தமிழ் வகுப்புகளுக்குப் போக உண்மையிலேயே முடியாவிடின், அதிக தூரம் பிள்ளைகளை அழைத்துச் சென்றுவர முடியாமல் உங்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் வேலை இருக்குமானால், வேறு மாற்றுவழிகளும் சரிவரவில்லையானால் நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக்கொடுங்கள். தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொடுங்கள். அதன்பின் உறவு முறைகளையும், பறவைகள், மிருகங்கள், பூக்கள், பழங்கள், உற்றார் உறவினர் பெயர்கள் என்று எல்லாவற்றையும் எழுதவும் வாசிக்கவும் சொல்லிக் கொடுங்கள். சனி, ஞாயிறு இரு தினமும் காலையில் அரை மணி நேரமாவது தமிழ் மொழியைக் கற்பிக்க ஒதுக்குங்கள். பிள்ளைகளுடன தமிழில் மட்டுமே உரையாட வேண்டும். தமிழ் கற்கும் உங்கள் பிள்ளைகளை ஊக்கப் பரிசுகள் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள். அவர்களுக்குத் தமிழில் பழமொழிகள், திருக்குறள், தேவாரம், செபம் முதலியன சொல்லிக் கொடுங்கள். யாராவது நல்ல தமிழ் அறிவுள்ள உங்கள் உறவினரையோ நண்பரையோ மாதம் ஒருமுறை நேரிலோ தொலைபேசியிலோ உங்கள் குழந்தைகளுக்கு தமிழ் இலக்கணத்தில் ஏற்படும் ஐயங்களைக் களைய உதவிசெய்யும்படி ஏற்பாடு பண்ணுங்கள்.

உங்கள் பிள்ளைகளை நீச்சல் வகுப்பு, நடன வகுப்பு, சங்கீத வகுப்பு, கராட்டி, பரீட்சை, கோடை நிகழ்ச்சி என்று எவ்வளவு நேரத்தையும் பணத்தையும் செலவுசெய்கிறீர்கள். அதேபோன்றே இதற்கும் செய்ய வேண்டும்.

■ ■ ■





VIEW TECH WINDOWS
INC.
•Industrail •Commercial • Residential
• Storm Doors
• French Doors
• Patio Doors
• Porch Enclosures
• Thermal Windows
• Vinyl Windows
• Aluminum Windows
• Glass & Screen
All work Guaranteed
Vinyl and Aluminum Replacement Windows
FREE ESTIMATE



6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON
KARUNA 905•796•9292/ 416•892•7070




MEGA CARPET & DUCT CLEANING LTD.
உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை
• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents
NATHAN: Dir: 416.893.8363, Tel: 416.286.2416, www.megaduct.com

# வீடு விற்பனையை பாதிக்கும்...

23ம் பக்கத் தொடர்ச்சி...

வழங்கல்ப் பத்திரம் வந்திருந்தால்க் கூட வீட்டின் நிலை சந்தை நிலையைவிடக் குறைந்த ஒரு முன்வழங்கல்ப் பத்திரத்தையே இந்த வீட்டிற்கு வழங்கியிருக்கும். தேவி தன் வீட்டை சந்தையில் இருந்து அகற்றி சுவர்ப்பூச்சுடன் தரைவிரிப்பு முதல் யன்னல், மின்குமிழ் பொருத்துகள் வரை யாவற்றையும் துப்புரவு செய்வது மிகவும் அவசியம்.

எப்போதும் நாம் ஒருவீட்டில் எதை எதிர் பார்ப்போமோ அவ்வண்ணமே எனது வீட்டை மற்றவர்கள் முன்வைக்க முயலவேண்டும். எமது வீட்டை நாமே ஆராய்வது கடினம் எனத் தோன்றும் பட்சத்தில் அத்துறையில் வல்ல வீட்டு அலங்கார நிபுணர் ஒருவரைப் பயன்படுத்தலாம். தேவி மேற்குறிப்பிட்ட வகையில் வீட்டைத் தயார்ப்படுத்தியபின் அடுத்தபடியாக முதலில் தான் பேசிய மூன்று முகவர்களையும் மீண்டும் ஒரு தடைவ வீட்டிற்கு வருகை தந்து மதிப்பிடும்படி அழைக்கலாம். அத்துடன் விருப்பமெனில் வீடு சந்தையில் இருக்கும் காலத்தில் யாராவது முகவர்கள் தேவியைக் கவர்ந்திருந்தால் அவர்களிடமும் விலை மதிப்பீட்டைக் கேட்கலாம்.

அத்துடன் வீட்டின் செல்லப்பிராணிகள் பற்றிய கேள்வி பலருக்கும் எழுவதுண்டு. ஒரு வீட்டில் நாய் வளர்க்கிறார்கள் எனில் பல முகவர்கள் அந்த பார்வையிடலை நிறுத்துவதும் உண்டு. உங்கள் செல்லப் பிராணி உங்களிடம் மட்டுமே அன்பாயிருக்கலாம். அதற்குத் தொந்தரவு செய்யும் புதிதாக வீடிற்கு வந்து வீட்டினைச் சுற்றிப்பார்க்கும் சிறுவன் மீது உங்கள் நாய் அன்பாயிருக்க வேண்டும் என யாரும் எதிர்பார்க்க முடியாது. அதுவும் அந்தப் பையன் உங்கள் நாயின் வாலிலேயே குறியாக இரு(ழு)க்கும்போது. எனவே பல விதமான அசௌகரியங்கள் சட்டச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, உங்கள் வீட்டின் ஒருவரான உங்கள் செல்லப்பிராணியை விடுமுறையைக் கழிக்க அனுப்புவதாக எண்ணி யாராவது உறவினர்களிடம் அனுப்பிவைப்பதே உத்தமமானது. உங்கள் வீட்டின் வேண்டாத மணங்களை அகற்றவும் இது உதவும்.

## வீடு அமைந்திருக்கும் இடம்

மூன்றாவது சிறந்த காரணம். உங்கள் வீடு இருக்கும் அமைவிடம். பல காரணங்களால் உங்கள் வீட்டின் அமைவிடம் விரும்பத்தகாததாக ஆகியிருக்கும்.

தேவியின் வீட்டில் அமைவிடம் நன்றாகவேயுள்ளது. ஆனால் அமைவிடம் சரியில்லை என்றால் வீடு விற்பதற்கு என்ன மாற்றுவழி? வீட்டின் அதாவது அதே மாதிரியான நல்ல அமைவிடத்தில் அமைந்துள்ள வீடுகளை விட இந்தவீட்டின் விலையைக் குறைத்து சந்தைப்படுத்துவதே. அதைத்தவிரவும் பல்வேறு உத்திகளையும் பயன்படுத்தலாம். ஒரு நல்ல முகவர் அவ்வாறான உத்திகளை உங்களுக்கு எடுத்துக் கூறுவார்.

## விற்பனை முகவரின் தரம்

ஒரு சூடான சந்தையில் அதுவும் குறிப்பிட்ட பொருளுக்கு மிகவும் கிராக்கியிருக்கும் இடத்தில் அந்தப் பொருள் விற்பனை ஆகவில்லை எனில் அந்தப் பொருளின் விற்பனைப் பிரதிநிதியின் தன்மை ஒரு காரணமாக இருக்கலாம். சீறிச்சினக்கும் விற்பனைப் பிரதிநிதியையா அல்லது சிரித்துப்பேசி சினேகிதமாக நடத்தும் பிரதிநிதியையா நீங்கள் தேடிப்போவீர்கள்? அது போலவே, உங்கள் விற்பனை முகவர் தமது முன்பின் யோசியா நடத்தையால் மற்ற முகவர்களுடன் அவர் கொண்டுள்ள பிரபல்யமற்ற தன்மையால் உங்கள் வீட்டின் விற்பனை முடங்கிப் போகலாம். யாரும் தாம் பேசிப் புரிந்து வியாபாரம் செய்வதையே விரும்புவார்கள். தடாலடியாகமுகம் முறிக்கும் இயல்பு கொண்ட முகவர்களுடனான பேச்சு வார்த்தையை சாதாரணமாக எந்த முகவரும் தவிர்க்கவே முயல்வார்கள். இனி வேறு வழியில்லை என்ற சந்தர்ப்பத்தில் மட்டுமே அப்படியான முகவர்களின் விற்பனைப்பட்டியலை தமது வாடிக்கையாளருக்குக் காட்டுவார்கள். உங்கள் பகுதியில் ஒருவர் நல்ல முன்னிலை முகவராக இருந்தால் மட்டும் போதாது. மற்ற முகவர்களுடன் இனிமையாகப் பேசிப்பழகும் இயல்பு அவருக்கு உள்ளதா என்பதையும் நீங்கள் ஆராய வேண்டும்.

## உங்கள் வீட்டின் சந்தைப்படுத்தல்

சரியாக நிர்ணயிக்கப்பட்ட விலை, நல்ல தரமான வீடு, நல்ல அமைவிடம், அனுசரித்துப் போகும் நட்பான முகவர் ஆயினும் வீடு விற்கவில்லை, முறையாக சந்தைப் படுத்தப்படவில்லை எனவே வீடுவிற்கவில்லை. உங்கள் வீட்டின் முன் முகவர் 'வீடு விற்பனைக்கு' விளம்பரப்பலகையைப் போட வேண்டியது. MLSல் விற்பனைக்கு நிரல் படுத்த வேண்டியது. முன்வழங்கல்ப் பத்திரத்திற்காகக் காத்திருப்பது போன்றவை கடந்து விட்ட காலங்கள். ஒரு நல்ல முகவர் ஆயிரக்கணக்கான டொலர்களை சந்தைப் படுத்தலில் செலவழிக்க முயல்கிறார். ஆனால் அவர்கள் வேலைக்கு நீங்கள் மதிக்கும் தரகு குறையும் போது உங்கள் சந்தைப் படுத்தல் தரம் குறைகிறது. தமது பணத்தைச் செலவு செய்து உங்கள் வீட்டை ஒரு முகவர் விற்கவேண்டிய அவசியம் என்ன? வீடு உங்களது சிறந்த விலை வேண்டுமா சிறந்த முகவரின் சேவை வேண்டுமா எதற்கும் அதனதன் தரத்தைப் பொறுத்தே அதனது விலையும் அமையும்.

'Lock Box for Easy Showing என MLSல் போட்டுவிடுவார் முகவர். அந்த ஒரு வரி செய்யும் மாஎம் பல வேளைகளில் வேறு எதுவும் செய்வதில்லை. பல வேளைகளில் திறப்புப் பெட்டி அந்த வீடுகளுக்கு பார்வை நேரம் எடுக்க முயலும்போது நாம் 12:30-1:30 மணிவரை கேட்டால் அவர்கள் அந்த நேரம் வசதிப்படாது 2 மணிக்குமேல் வாருங்கள் எனக் கூறுவார்கள். வீடு வாங்கவரும் எல்லோருக்கும் அல்லது முகவர்களுக்கு அவ்வாறு 2மணிநேரத்தை வெளியில் கழிப்பது சாத்தியப்படாது. பல சந்தர்ப்பங்களில் வீட்டின் முன்னால் விளம்பரப் பலகையைப் பார்த்துவிட்டு அழைப்பார்கள். இம்மாதிரியான மீளவரும்படி கேட்கும் போது அந்த வீட்டைத்தவிர்த்துவிட்டே செல்கிறார்கள். எனவே வீட்டை விற்பனைக்கு நிரலிட்டால் வீடு எந்நேரமும் பார்வையிடக்கூடியதாக அதாவது எந்தநேரம் பார்வையிடக் கேட்டாலும் கொடுக்கத்தக்கதாக துப்புரவுடன் திறப்புப் பெட்டியுடன் இருப்பது உங்கள் வீட்டின் விற்பனையை அதிகரிக்கும்.


வீடு விற்பனையாவதில் தாமதாமா? என்று நான் உங்களுடன் ஆலோசிக்கும்போதே தேவி தன்னுடைய வீட்டைச் சுத்தம் செய்து தேவையற்ற உடைகளை சுவர்ப்பெட்டகத்தில் இருந்து அகற்றி, பெரிய உபயோகத்துக்குத் தேவையற்ற உபகரணங்களை, தளபாடங்கள் போன்றவற்றை வெளியாக்கி, வீட்டின் சொந்த உபயோகப் பொருட்களை மட்டுப்படுத்தி குடும்பப்படங்கள் போன்ற தனிப்பட்ட விடயங்களை ஒதுக்கி வீட்டினை பொதுப்பார்வைக்குரியதாகச் செய்துவிட்டார்.

அடுத்த நடவடிக்கை அவர் தெரிவு செய்யும் முகவர் வீட்டினை மீளவிலைமதிப்பிடுதல் ஆகும்.

தேவி இம்முறை நிச்சயமாகத் தனது வீட்டினைத் தகுந்த விலைக்குச் சந்தைப் படுத்துவார் என்பது நமக்கு உறுதி.


■ ■ ■


உங்கள் மனைகள் மாளிகையாக அமைந்திட



Century 21
Affiliate Realty Inc. Brokerage.
416-290-1200
80 Corporate Drive
Suite 208, Toronto


சத்தி மருதப்பா
SATHHI MARUTHAPPAH
Direct: 416-816-1500
LOWEST COMMISSION FREE MARKET EVALUATION



Weston / Sheppard
Condo Apt
Bedrooms 2 ,Washroom 2
Law Maintenance
$168,000



TORONTO
Condo Apt.
Sheppard. Kennedy
Bedrooms 3,Washroom 2
$149,900




MARKHAM
Semi Detached 2 Story
Kennedy / Castlemore
Bedrooms 4 ,Washroom 4
$489,900





VAUGHAN
Keele / Major Mac
Semi Detached 2 Story
Bedrooms 3+1 ,Washroom 4
$345,000


Gas Stations
(Petro Canada, Shell,
Esso, Sunoco)
Convenience
Stores also
Available)



Markham
McCowan & 14th Ave.
New, 2 Story
Bedroom 4 Washroom 3
$389,000




VAUGHAN
Weston / Rutherford
Detached 2 Story
Bedrooms 4 ,Washroom 3
$486,500



BRAND NEW CONDOS IN
Scarborough, Downtown
Closeing IN 2010

# கலை பண்பாட்டு விழுமியங்களும்..

35ம் பக்கத் தொடர்ச்சி...

தேர்ந்தெடுக்கப்பட்ட கலை வடிவங்களினூடாக நம் இனத்தின் மரபுசார் இயல்புகளை வெளிப்படுத்த வேண்டும். நமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்க வல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட கலைவடிவமானது, ஏனைய சமூகத்தோருக்கும் நமது அடையாளங்களை புலப்படுத்தக்கூடியதாக அமைய வேண்டும்.

நமக்கான கலை பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்ற கருத்தில் எவருக்கும் வேறுபாடு இல்லை. பல்லினப் பண்பாட்டுச் சூழல் ஏற்படுத்தும் பலமான தாக்கங்களின் மையத்தில் வாழ்ந்து கொண்டு நமது பாரம்பரிய கலை பண்பாட்டு மரபுகளையும் அவற்றை வெளிப்படுத்தும் வழிமுறைகளையும் கட்டுக் குலையாமல் பேண முயல்வது சொற்ப காலத்திற்கே சாத்தியமாகும்.

தொடர்ச்சியான கால ஓட்டத்தில் மரபினைப் பேணும் வடிவங்களில் மாற்றங்களை ஏற்க வல்ல மனநிலை நம்மிடையே இல்லையாயின் நமது விழுமியங்களை இழந்துவிடும் வாய்ப்பே அதிகமாகிவிடும்.

கனடிய மண்ணில் இரண்டாம் தலைமுறை தலைதூக்கியிருக்கும் காலம் இது. கனடியத் தமிழர் எண்ணிக்கையில் கணிசமான விழுக்காடு இவர்களுக்குரியது. இன்றைய கலைவிழா நிகழ்வுகளில் பாதிக்குமேல் கூட்டம் சேரவில்லையே என்பது பலருடைய ஆதங்கமாகும். இதற்து முக்கிய ஏதுவாக அமைவது மரபு வழிப்பட்ட எமது கலை வடிவங்களில் ஈடுபாடு காட்ட விரும்பாத புதிய தலைமுறையேயாகும். இங்கு நடைபெறும் கலைநிகழ்வுகள் பலவும் மூத்த அல்லது முதல் தலைமுறையின் மனநிறைவினையும், ஆற்றல்களையும் மையப்படுத்தியே அமைகின்றன. மிகக் குறைந்த அளவில் இளந்தலைமுறையினர் இக் கலைப் படைப்புகளில் ஈடுபட்டாலும் அவர்களிலும் பெரும்பாலானோர் வலிய இழுத்து வரப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். தொடர்ச்சியான கலைநிகழ்வுகளில் அவர்கள் காணப்படாமையே இதற்குச் சான்றாகின்றது.. இசை, நடனம், வாத்தியக் கருவிகள் இசைத்தல் போன்ற கலை வெளிப்பாடுகளில் இளந்தலைமுறையினரின் அரங்கப் பங்களிப்பு அதிகளவில் இருப்பதான ஒரு தோற்றப்பாடு காணப்படினும் அதன் பின் புலங்கள் தனியானவை. அவற்றைப் பின்பு நோக்கலாம்.

என்பதுகளின் இறுதியில் முழு உருப்பெற்ற கனடியத் தமிழ்க் கலைநிகழ்வுகள் தொன்னூறுகளின் நடுப்பகுதியில் உச்சம் பெற்று இரண்டாயிரத்தின் தொடக்கங்களில் சற்று சோர்வடைந்த நிலையில் அடுத்த நகர்வுக்கான மாற்றங்களை எதிர்பார்த்து நிற்கின்றன. இந்த மாற்றத்தின் முக்கிய அம்சமானது மூத்த கலைப்படைப்பாளர்கள் கலை நிகழ்வுக் களங்களை இளங்கலைப் படைப்பாளர்களிடம் ஒப்படைப்பது என்பதாகும். எங்குமான பொது இயல்பு என்னவெனில் மூத்த கலைப்படைப்பாளரிடையே கலந்து பயிற்சி பெற்று ஆற்றலுற்ற இளம் படைப்பாளர்கள் மூத்தோர் வழிகாட்டலில் முன்னிலை பெற்று கலைப்படைப்புகளை அடுத்த தலைமுறைக்குக் காவிச் செல்வர். ஆனால் முற்றிலும் மாறுபட்ட கனடியச் சூழல் ஏற்படுத்திய அழுத்தங்கள் காரணமாக ஆற்றல் மிக்க இளந்தலைமுறையை உள்வாங்கத் தவறியவர்களாகவே மூத்த கனடியக் கலைஞர்கள் காணப்படுகின்றனர். அவர்களை உள்வாங்க முடியாமைக்கான அடிப்படைக் காரணமாக அமைவது அவர்களை ஈர்க்கும் வகையிலான மாற்றங்களைக் கொண்ட கலை வடிவங்களை உருவாக்கத் தவறியமையேயாகும். இதன் விளைவாகவே பங்காளர்களாகவும் பார்வையாளர்களாகவும் அடுத்த தலைமுறைக்கான காவிகளாகவும் இருக்க வேண்டிய இளந்தலைமுறையினர் இந்தத் தொடரோட்டப்பாதையில் இருந்து விலகிக் காணப்படுகின்றனர்.

ஒரு விடயத்தை உறுதியாகக் குறிப்பிட வேண்டும். இளம் சந்ததியினர் நமக்கான பாரம்பரிய கலைவடிவங்களில் தம்மை ஈடுபடுத்தத் தயக்கம் காட்டுகின்றார்களே தவிர அவர்களிடையே காணப்படும் ஆற்றல்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. கட்டுக்கோப்பாக, மரபு சார்ந்து நெறிப்படுத்தப்பட்ட வழிமுறைகளினூடாக வெளிப்பட வேண்டிய இவர்களது ஆற்றல்கள் இன்று திரைஇசை நடனங்களாகவும், Fashion show களாகவும் பண்பாடு பிறழ்ந்த நிகழ்வுகளாய்ச் சிதைந்துகொண்டிருக்கின்றன. இளந்தலைமுறையினரின் ஆற்றல்கள், நமது கலை பண்பாட்டு விழுமியங்கள் புலப்படும் வகையில், அவர்கள் விரும்பும் வடிவங்களினூடாக வெளிப்பட வேண்டுமாயின், அதற்கான மூத்த தலைமுறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

தொலைக்காட்சிகள், மற்றும் பாடசாலை, கல்லூரிகளில் தொழில்நுட்பம் நவீன உத்திகளுடன் கூடிய கலைநிகழ்வுகளைப் பார்த்தும் கேட்டும் பங்குகொண்டும் நிறைவடைகின்ற நம் சந்ததியினர் நம் பாரம்பரிய கலை வடிவங்களோடு அவற்றை ஒப்பிடவே செய்கின்றனர். இத்தகைய ஒப்புநோக்குதல்களின் விளைவாகவும் நமது கலை வடிவங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

இதுகாறும் சொல்லப்பட்டவைகளின் வாயிலாக, நமது கலைவடிங்கள் தொடர்புடையதான இளந்தலைமுறைகளின் தேவைகளையும் தேடல்களையும் ஓரளவுக்கேனும் உய்த்துணர முடியும். இச் சிக்கலின் ஆழத்தை உணர்ந்து கொள்கின்ற வேகத்தோடு இச்சிக்கலுக்கான தீர்வினைக் கண்டுவிட முடியாது. எனினும் இச்சிக்கல்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்பதே தீர்வை நோக்கிய முதல் நகர்வாக அமையும்.

இந்த சிக்கல்களை உணர்ந்து கொள்ள நாம் நீண்ட காலதாமதத்தை ஏற்படுத்தி விட்டோமோ என எண்ண வைக்கின்றது இளந் தலைமுறையின் ஒரு சாரார் மேற்கொண்ட சில முயற்சிகள். நமது வழிகாட்டல் அற்ற நிலையில் தமது கலைத்தாகத்திற்கான தேடல்களில் ஈடுபடும் இளைஞர்கள் நிச்சயமாய்ச் சிலவற்றைக் கண்டு கொள்வார்கள். அவர்களில் இன உணர்வு கொண்டோர் சிலர் இருப்பார்களேயானால் நாம் எதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமோ அதை அவர்களே கண்டு கொள்வார்கள். இவ்வகையில் எம்மில் பலரைத் தம் பக்கம் திருப்ப வைத்திருக்கின்றார்கள் குறும்படங்கள் சிலவற்றைத் தாயாரித்த இளைஞர்கள் சிலர். அடுத்த தலைமுறையின் கலைக் காப்பாளர்களாக இவர்கள் அடையாளம் காணப்படுகையிலேயே இச் சிக்கலின் வீரியம் பாதியாய்க் குறைந்து விடுகின்றது.

இதுபோலவே அடையாளம் காணப்படாத பல விடயங்கள் முளைவிட்டெழும் புதிய தலைமுறையின் ஆரோக்கியத்துக்கும் ஐக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன. இன்னுமொரு கட்டுரையின் வாயிலாக அவற்றில் சிலவற்றை இனம்காண முயற்ப்போம்

■ ■ ■

**தாய் வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



# For All Your Real Estate Needs..




- 3 Bedroom Semi Detached House
- Steps to TTC and School
- Few Years New
- Call for details.....




- Warden/Finch
- 3 Bedrooms/Finished Basement
- Well Maintained Property
- Steps To TTC,Schools,Shopping..
- Call for Details...



- 2 Bedroom Condominium
- Well Maintained Building
- Few Years New
- Call **Sasi** for Details.




**Sasi Chelvaratnam**
**Sales Representative**
**416.858.4828**



- 4 Bedroom House in Brampton
- Well Maintained Property
- Only Few Years Old
- Call **Sasi** for details.....




- Less Than Three Years Old
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Appox 2300 Sq.Dt
- Family Rm W/Cathedral Ceiling




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....





- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9'Ceiling On Main Floor
- Primium Lot...

**HomeLife GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**
This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated


உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு
அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை
"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"
ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Want to become a Mortgage Consultant?
We provide you free workshops, training and seminars to become a certified Mortgage
digi Media Creation
BonaFide
Mortgage Solutions
1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: 416.548.7475, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com
• Mortgages
• Re-Finance
• Seminar
• Workshops
www.bmsic.com
one stop solution for all your mortgage needs


S.P. IMPORTERS
ஒரே பிளாசாவில் நான்கு தனிப்பெரும் ஸ்தாபனங்கள்
மிகப்பிரமாண்டமான (15,000 சதுர அடி) காட்சியறை கொண்ட தளபாட மாளிகை
கண் கவர் தளபாடங்கள் Solidwood Bedroom set, Solidwood Diningroom Set, Leather Sofa Set, Kids Bedroom sets and more..
அனைத்து வயதினருக்கும் தேவையான மெத்தை வகைகள்
(orthopedic, CiroPedic, Poster Pedic mattress andmore..)
$100 OFF
with purchase of $1500 of furniture
416-266-3077
www.spimporters.ca
NO PAYMENT INTEREST for 1 YEAR


OPENING SOON
மிகவிரைவில் TORONTO மாநகரில் மிக பிரமாண்டமான
கண்கவர் நவீன காட்சியறையில்...
Ranjanas Silk
ரஞ்ஜனாஸ் சில்க்
820 Markham Road - Unit # 5 & 6, Scarborough, ON. M1H 2Y2
(Markham Road & Painted Post)
Tel: 416-289-2232



Buy your Dream House or Sell your House for Top Dollars....
வீடு வியாபார ஸ்தாபனம் வாங்க விற்க

LOW COMMISSION
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
BEST SERVICES



**Logan** Manikavasagar
Broker
**Direct : 416.708.9903**

**Kalai** Logan
Sales Representative
**Direct : 416.697.9903**

2911 Kennedy Rd, Toronto, ON. M1V 1S8. Tel : 416.298.8200 (24Hr) Fax : 416.298.6602
Email : sales@loganhotproperties.com - www.loganhotproperties.com






VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

- Building permit
- Zoning info.
- Site plan approval
- Rezoning approval

**Gop Kalaieswaraan**
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
**Dir: 416.723.7467**







வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

CENTURY 21 SERVICES PLUS
5855, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca

**SUGUMARAN SINNIAH**
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881





I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

After Approval
**Joy is yours**
**Pride is ours**





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, *AMP*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை


# UPROPERTIES.COM

**Hotels For Sale!!!**


Clarion Inn & Suite
48 Rooms
Hour and a Half From GTA

**Hotels For Sale!!!**


Comfort Inn
78 Rooms
One Hour From GTA





**Brock/Hwy 2**
4 Bedrooms,
3 Washrooms, Beautiful Home On Quiet Cul De Sac. Family Oriented Neighborhood. Walk To Plaza On Brock Rd And Close To All Amenities.




**Burnhamthorpe/ Hwy10**
2 Bedrooms,
2 Washrooms, Bright Northwest Exposure, Trimph Model Corner Unit 880 Sq Ft. 9 Foot Ceiling. Lots Of Windows. Open Balcony. Upgraded Wood Floor And Granite Counter Top




**Markham/Elson**
4 Bedrooms,
3 Washrooms, Spacious 4 Bdrm Semi-Detached Double Door Entry House In A Desirable Neighbourhood. Approx. 2058 Sq Ft. Master Bdrm With 5 Pc Ensuite, Close To Major Shopping Centres




**Neilson/Mclevin**
1 Bedroom,
Condo Apt

**UTHAYAN NADARAJAH**
*Broker*

**Cell: .416.727.9945**



ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

UTHAYA

# பிரான்ஸின் சில வரலாற்றுப் பக்கங்களை காவியமாக்கியிருக்கும் நாவல்

# The many Lives & Secret Sorrows of Josephine B.



தேவகாந்தன்

**1**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆங்கில நாவலிலக்கியம் வளர்ந்துவந்த பாதை மிக அழகானது. வரலாற்றுப் பின்புலங்களில் பல்வேறு நாவல்கள் தோன்றின. பயணங்கள், ஆய்வுகள், தேடல்கள்மூலம் கண்டடையப்பட்ட புதுமையான கருத்துக்கள் ஆங்கில இலக்கியத்தை உக்கிரத்துடன் நிறைத்தன. இவை ரஷ்ய, பிரெஞ்சு இலக்கியங்களுக்கு இணையாக ஆங்கில நாவலிலக்கியத்தை உயர்த்தி வைத்தன என்றாலும் மிகையில்லை.

இதனடியாக சமகாலத்திலும் வரலாற்றின் இருண்ட பக்கங்களை புனைவின் துணைகொண்டு கண்டுகொள்ளும் முயற்சிகள் பல்வேறு படைப்பாளிகளால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அவற்றில் சில அச்சுப் பிரதிகளாய், சில தகவல்கள் தொகுப்புக்களாய் மாறிப்போக, சிலவே காவியங்களாய் நிலைத்துநிற்கின்றன. அவ்வாறான நாவல்களில் வரலாற்றுக் களத்தை ஆதாரமாகக் கொண்டெழுந்து காவியப் பேறடைந்த நாவல்தான் ‘The Many Lives & Secret Sorrows of Josephine B.’

**2**

காதல் என்கிற மனமெய் உணர்வு எங்கேயும் எப்போதும்தான் அழகானது. சரித்திரம் அவ்வாறான வியக்கத்தக்க காதல்களைக் கொண்டிருக்கிறது மெய்யாகவே. ஆனாலும் அதன் சாரம், நவீன மனோதத்துவ, தத்துவ ரீதிகளில் அணுகப்படும் நாவல்களினால் பிழிந்தெடுத்து முன்வைக்கப்படுகிறபோது, மனம் வாசகப் பரவசம் கொண்டுவிடுகிறது.

சங்க காலப் பாடல்கள் தமிழன் இயற்கை வழியில் வாழ்ந்த இயல்பை அகம், புறம் என்ற இருநிலைகளில் வைத்துப் பேசுகிறது. அகம் புறமென்ற இந்த இருநிலை வாழ்வு திணையளாவி தமிழிலக்கியத்தின் ஒப்பற்ற தன்மையையும் உலகிற்குப் பறைசாற்றுகிறது. அகம் சொல்லும், ‘யாயும் ஞாயும் யாங்காகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், நானும் நீயும் எவ்வழி அறிதும்... செம்புலப் பெயல்நீர்போல அன்புடை நெஞ்சம் தான்கலந்தனவே’ என்ற பாடலும், புறம் சொல்லும், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பாடலும் தமிழர்கள் தம் வாழ்வில் கண்டெடுத்த அரும் பண்புகள்.

சமகால தமிழ் நாவலிலக்கியத்தில் இவற்றைக் காவியமாக்கும் முயற்சிகள் பரவலாக நடைபெற்றது மெய். இவை ஒரு கனவுப் புலத்திலிருந்து படைப்பாகின. ஆனால், ஆங்கிலத்தில் ஒரு தேடலிலும், ஓர் ஆய்வு வெளியிலுமிருந்து முளைத்தெழுந்தன.

மாமேதைகளின், சரித்திர புருஷர்களின் பல காதல்களைப் பற்றியும் ஆங்கில வரலாறு பேசுகிறது. கார்ல் மார்க்ஸ், நெப்போலியன் போனபார்ட் போன்றோரின் காதல்கள் இவ்வாறு விதந்துரைக்கப்படுவன. குடும்ப அமைதிப்புலம் பொறுத்தவரை ஜென்னியினது காதலும், பொருளாதார நிலை பொறுத்தவரை ஏங்கெல்ஸின் நட்புமே கார்ல் மார்க்ஸின் மகத்தான நூல் ‘மூலதன’த்தின் பிறப்பிற்கு மறைமுக உந்துதல்கள் எனப் படுகிறது. பெரு மேதாவிகளாயிருந்தாலும் தம் காமம், காதல் ஆகிய உணர்வுகளால் சாதாரண மனிதர்களாயே அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறிய நாம் வியப்பே கொள்கிறோம். குறிப்பாகக் கவனிக்க இங்கே ஒரு விஷயம் உண்டு. இப் பெண்கள் ஏற்கனவே கல்யாணமாகி குழந்தைகளுடனோ, குழந்தைகளின்றியோ, கணவனை உயிருடனோ இன்றியோ கொண்டிருந்தவர்கள் என்பதே அது. இவ்வகையில் முக்கியமான சரித்திரக் காதல் நெப்போலியன் ஜோசபின் மீது கொண்ட காதலாகும்.

**3**

நெப்போலியன் ஜோசபினுக்கு எழுதிய கடிதங்கள் பிரெஞ்சு மொழியில் தொகுப்பாக வந்த போதே பிரபலமாகப் பேசப்பட்டவை. அண்மையில்கூட நெப்போலியன் ஜோசபினுக்கு எழுதிய கடிமொன்று கண்டடையப்பட்டு மிகப் பெருந்தொகைக்கு ஏலம் போயிருக்கிறது. மாவீரனென்று வரலாறு போற்றும் நெப்போலியன் ஜோசபின் காதலில் எவ்வளவு சாதாரண உணர்வுள்ள மனிதனாக, அவள் காதலை எந்நேரமும் இச்சிப்பவனாக இருந்தான் என்பதை இக்கடிதங்கள் எடுத்து விளக்குகின்றன.


பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலுமாய் இவர்கள் காதல் குறித்து பல்வேறு நாவல்கள் இதுவரை வெளிவந்துவிட்டன. இன்னும் பல நாவல்களுக்கே இக்காதல் அடித்தளமாய் இருக்குமென்றாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ‘The Many...’ என்கிற இந்த நாவல் கனடா ஆங்கில இலக்கியத்தில் பெரிதாகப் பேசப் பட்டுமிருக்கவில்லை. அண்மையில் இதை வாசிக்கும் சந்தர்ப்பம் எதிர்பாராத விதமாகத்தான் கிடைத்தது. Book Cityஇல் இப் புத்தகத்தை வாங்கி பல நாட்களாய் சும்மா அடுக்கிலேதான் போட்டுவைத்திருந்தேன். இல்லறத்தில் துறவறமும், வானப்பிரஸ்தத்தில் இல்லறமும் எனக்கு மாறுதலையாய் விதிக்கப்பட்ட குணங்கள். இவைகளின்படி என் புதிய துறவறம் துவங்கிய காலகட்டத்தில் ஒருநாள் இந்நூலை எடுத்துப் புரட்டினேன். நூல் முற்றுமாய் என்னைத் தன்னுள்ளே இழுத்துக்கொண்டது. வாசிப்பின் மிகச் சுகமான அனுபவத்தைத் தந்த நாவல்களில் இதையும் ஒன்றாகச் சொல்ல எனக்குத் தடையில்லை. அச் சுகத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் ஓர் இன்பமிருக்கும் என்பதாலேயே அதை இங்கே எழுதவும் முயல்கிறேன். ஆக, பகிர்வும் சுகானுபவத்தின் ஒரு வாசலாகிறது.

**4**

அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்போது கனடா ஒன்ராரியோ மாகாணத்தில் வசித்து வருப வருமான சந்ரா காலான்ட் (Sandra Gulland) இதன் ஆசிரியர். கலிபோர்னியா பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் 1970களின் ஆரம்பத்தில் கனடாவில் குடியேறினார். ஆரம்பத்தில் லப்ராடரில் இனுய் பழங்குடி இனத்தாரிடையிலான பள்ளிகளில் கடமையாற்றிய இவர், பின்னால் நூல் பதிப்பகத் துறையில் கடமையாற்றவேண்டி ஒன்ராரியோவுக்கு இடம்பெயர்ந்தார். ஏறக்குறைய பத்தாண்டுகள் பிடித்திருக்கின்றன இந் நாவலை இவர் எழுதி முடிக்க. 1995இல் தடித்த அட்டைப் பதிப்பாக கார்ப்பர் கொலின்ஸ் வெளியிட்ட இந்நூலின் மலிவுப்பதிப்பு 1996இல் வெளிவந்தது.

நாவல் ஜோசபின் பார்வையிலிருந்து விரிகிறது. ஜோசபினின் நாட்குறிப்பாக ஜூன் 23, 1777 இலிருந்து தொடங்கும் இந்நாவல், 1796 மார்ச் 09 உடன் முடிவடைகிறது. ஜோசபினின் சொந்த ஊரான மார்டினிகோவில் தொடங்கி, பிரான்சியப் புரட்சி ஏற்பட்ட பின்னர் பாரிசில் தொடங்கிய குடியாட்சி முடிவடையும் தறுவாயில் சுமார் பத்தொன்பது ஆண்டுகளைக் கொண்டது இதன் காலக் களம்.

படைப்பாளி சந்ரா காலான்ட் பிரான்சியப் புரட்சியின் அனுதாபியாக இல்லையென்றே தெரிகிறது. இந்த முரண், மேல்தட்டு மாந்தரின் வாழ்முறை, கலாச்சாரமாக விரியும் நாவலானதால், கதாமாந்தரின் அபிப்பிராயமாக நூலாசிரியரின் கருத்தைக் கொண்டுவிட வாசகனால் சுலபமாக முடிந்துவிடுகிறது.




மேலே...இன்னும் மேலே என்று முன்னேறத் துடிக்கும் மேல்தட்டு வர்க்கத்தினரின் மனோபாவம் காரணமாகவே ஜோசபினின் மார்டினிகோவிலிருந்தான முதல் நகர்வு தொடங்குகிறது. வயது வந்த எந்தவொரு பெண்ணுக்குமே திருமணம்தான் முக்கியமான அம்சமாகவிருக்கிறது அக் காலப் பகுதியான பதினெட்டாம் நூற்றாண்டில். அவர்களது இலக்கியப் படிப்பும், இசைப் பயிற்சியும், ஓவியக் கற்கையும் எல்லாமே உயர்ந்த இடத்தில் திருமணத்துக்கான முயற்சிகளாகவே இருந்துவந்திருக்கின்றன. பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா எதுவுமே இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. டால்ஸ்டாயின் ‘அன்னா கரினா’ இதை தன் ஆரம்பப் பகுதிகளில் அழகாகப் படம் பிடித்திருக்கும்.

ஜோசபினின் வாழ்க்கையும் இவ்வாறே தொடங்குகிறது. அவளது தந்தையின் நிலத்தில் வேலை பார்க்கும் ஓர் ஆபிரிக்க மாந்திரீகப் பெண் வருங்காலமுரைப்பவளாக இருக்கிறாள். பெற்றோர் அறியாமல் அவளிடம் தன் வருங்காலம் கேட்கிறாள் ஜோசபின். மாந்திரீகப் பெண் அவள் அந்நாட்டு ராணியாவாள் என ஆரூடம் கூறுகிறாள். அவளது திருமணத்தில் விழவிருக்கும் சோகங்களையும் மாந்திரீகி சொல்லத் தவறவில்லை. அதுவே அவளின் பல்வேறு முயற்சிகளினதும், பல்வேறு பாதை மாறுதல்களினதும் மூலமாய் ஆகிவிடுகிறது. ஓர் எதிர்பார்ப்பு அவள் அடிமனத்தில் எந்நேரமும் இருந்து அவளை உசுப்பிக்கொண்டிருக்கிறது. குடிகாரத் தந்தையினால் தம் செல்வமிழக்கும் ஒரு குடும்பத்தில் பிறக்கும் ஜோசபின், தந்தையின் குணம் தெரிந்தும்தான் அவரை தன் பெருவிருப்புக்கும் மதிப்புக்கும் உரியவராக ஆக்கிவைத்திருக்கிறாள்.

முதலில் போகர்னேயுடனான திருமணம் அவளை பாரிஸ் நோக்கி நகர வைக்கிறது. மன்னர் காலத்திலும், பின்னர் குடியரசுக் காலத்திலும் மிக்க அதிகாரமுள்ள பதவி வகிக்கும் போகர்னே, சில யுத்த முனைகளில் குடியரசுப் படைகள் அடையும் தோல்வி காரணமாய் குடியரசுக்கு எதிரானவனெனக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை அடைகிறான். அவளது தனித்த வாழ்க்கையும், அரச மேலிடத்துத் தொடர்புகளும் மெல்ல மெல்ல உருவாகின்றன. அதன் பின்னர்தான், நெப்போலியனது அறிமுகம் ஏற்படுகிறது அவளுக்கு. சொல்லப்போனால் ஒரு சாதாரண போர்வீரனாகவே ஆரம்பத்தில் அறிமுகமாகிறான் அவன். பின்னாலே அவுஸ்திரியாவுடனான யுத்தத்தில் அவன் படைத் தலைமை ஏற்பதிலிருந்துதான் படைத் தளபதியாக நெப்போலியன் உருவாகிறான்.

47ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.propertymaxrealty.com


Mohan Subramaniyam
Broker of Record

PROPERTY MAX®
HIGHER ACHIEVEMENTS
Realty Inc.Brokerage
203-3321 Mcnicoll Ave, Toronto, ON. M1V 5B3
MLS MULTIPLE LISTING SERVICE
416.291.3000
Member of the Toronto Real Estate Board


Sun Sanmugathas
Broker/Manager

***Industrial, Commercial, Investment Residential and Rental***
***#1 Team @ Property/Max Realty Inc.***


Parathan Navaratnam
Sales Representative


Kula S. Kulamohan
Sales Representative


Sockalingam Prabaharan
Sales Representative


Ganesh Rasiah
Sales Representative


Vernon Marcelline
Sales Representative


Raj Sasi Rajanayagam
Sales Representative


Kandiah Vinayagamoorthy
Sales Representative


Varni Sundaram
Sales Representative


Thanie Antony
Sales Representative


Packianathan Rasiah
Mortgage Consultant



Sekar Thuraisingam
Mortgage Consultant











*One stop shopping for all your Real Estate and Mortgage Needs*

PMCI
PROPERTY MORTGAGE CANADA INC
416.332.9464

- New Mortgages
- New Immigrants
- 1st, 2nd Mortgages
- Commercial Mortgage
- Solution for Bad Credit
- Re-Financing
- New Home Buyers

Just Financed By


PMCI

***Please mention PROPERTY/MAX when enquiring about Properties***

# சிக்கனம் சிறப்பு தரும்

குமார் புனிதவேல் பக்கம்

## அறிமுகம்

சிக்கனமாக வாழ்வது ஒரு சிறப்பான வாழ்வு என்பதனை மக்கள் உணர்வது மிக அவசியம். சிக்கனம் வேறு, உலோபியாய் இருப்பது வேறு. பாடுபட்டுத் தேடிய பணத்தை, பயனற்ற விதத்தில் போலிக் கௌரவத்திற்காகச் செலவு செய்வது அறிவுடமையாகாது. பொருளாதார வெற்றி எவ்வளவு கடினமாய் உழைக்கிறீர்கள் என்பதிலும் அதனை எப்படி வெற்றிகரமாகக் கையாளுகிறீர்கள் என்பதிலுமேயே தங்கியுள்ளது.

கீழே தரப்பட்டுள்ள குறிப்புகள் உங்களை முன்னேற்றும். அதனால் ஒரு தமிழன் முன்னேறுவான், அதன் விளைவாக தமிழர் முன்னேறுவர் எனும் நோக்குடன் இத் தொகுப்பு எழுதப்பட்டுள்ளது.

## பொது

1. எப்பொழுதும் மூன்று இடத்தில் விசாரித்துவிட்டு ஒரு பொருளை வாங்க வேண்டும். நீங்கள் ஒரு டொலர் குறையக்கொடுத்து வாங்கினால் அது இரு டொலர்கள் ஊதியம் பெறுவதற்கு நிகராகும்.
2. புதிய பொருளை வாங்குவதிலும் சற்று உபயோகித்த பொருளை வாங்குவதால் பெரும் சேமிப்பைப்பெறலாம். அத்துடன் 8வீத வரியைத் தவிர்க்கலாம். சில சமயங்களில் வீத வரியைத் தவிர்க்கலாம்.
3. பேரம் பேசுவதற்குப் பின்வாங்காதீர்கள். யாருமே உங்களுக்கு இங்கு பேரம் பேசலாம் என அறிவித்தல் வைத்திருக்க மாட்டார்கள். சத்தம் செய்யும் சில்லுக்குத்தான் எண்ணெய் விடுவார்கள்.
4. நீங்கள் புகைபிடிக்கும் பழக்கம் உடையவரானால் உடன் அதை நிற்பாட்டுங்கள். அது உங்கள் தேக சுகத்துக்குக் கூடாததுமல்லாமல் ஆயுளையும்குறைக்கும். ஒரு நாளைக்கு 1பக்கட் புகைப்பவர் 6.50டொலருக்கு சிகரட்டை வாங்குவாராயின் அதன் விலை 10 வீதம் வருடத்திற்கு அதிகரிக்கும் எனக் கொண்டு, அச்செலவை வருட வருமானம் 10வீதம் உள்ள ஒரு சேமிப்பில் இடுவாராயின் பெரிய தொகையை மீதமாக்குவார்.
5. பொருள்களுக்கு வெவ்வேறு தரகு தரப்படும். எனவே, தனக்கு எதில் கூட தரகு உண்டு என அவர் யோசிப்பார் என்பதை மறக்கலாகாது.
6. பண்டங்களை வாங்கும்போது உத்தரவாதங்கள் பெறுவதைத் தவிர்க்கவும். அவை பொதுவாக ஒரு வருட உத்தரவாதம் அல்லது ஆறுமாத உத்தரவாதம் தருவார்கள். மேலதிக உத்தரவாதம் அர்த்தமற்றது. காரணம் ஒரு பண்டம் பழுதாவதானால் முதல் சில மாதங்களில் நடக்கும்.
7. லோட்டரி டிக்கட்டுகளை வாங்காதீர்கள். கனடாவில் Statistics திணைக்களத்தின் கணிப்புப்படி 1990ஆம் ஆண்டில் சராசரி குடும்பம் 150 டொலருக்கு லொட்டரி டிக்கட் வாங்குகிறது. இதனையே 10 வீதம் வருமதியுள்ள ஒரு சேமிப்பில் இடுவதால் இருபத்தைந்து வருடத்தில் 15,000 டொலர்கள் பெறலாம்.
8. மதியச் சாப்பாட்டை வீட்டில் தயாரித்துக் கொண்டு செல்லுங்கள். வீட்டிலிருந்து பானம் (கோக்) கொண்டு செல்வதால் வருடமொன்றிற்கு 150.00டொலர்கள் வரை மீதம் பிடிக்கலாம். அதேபோல் வீட்டிலிருந்து மதிய உணவைக் கொண்டு செல்வதால் வருடமொன்றிற்கு 400.00டொலர்கள் வரை மீதம் செய்யலாம்.
9. ஒரு பண்டத்தை வாங்கும்போது 3விடயங்களில் கவனமாக இருக்கவேண்டும்.
   - நம்பமுடியாத அளவு மலிவாக இருந்தால் நம்ப வேண்டாம்.
   - என்னவென்று தெரியாவிடில் வாங்க வேண்டாம்.
   - வாய்ப்பேச்சில் ஏற்றுக்கொண்டது செல்லுபடியாகாது.
10. குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் தொழில் செய்பவர்களானால் ஒருவர் மட்டுமே வைத்திய, பல்வைத்திய காப்புறுதிகளைப் பெற்றுப் பணத்தைச் சேமிக்கலாம்.
11. பண்டங்களை தொகையாய் வாங்குவதால் விலை குறைந்து வாங்க முடியுமானால் தொகையாக வாங்குவது சிறப்பாகும். இதனை மற்றவர்களுடன் இணைந்தும் செய்யலாம்.
12. பொருட்களை மலிவு விலையில் விற்கப்படும்போது வாங்குவதால் பெரும் சேமிப்பு செய்யலாம். உதாரணமாகப் பற்பசை, 1.49 டொலர் விற்கப்படும். அதே பற்பசை மலிவு விலையில் 79 சதத்திற்கு விற்கப்படும்.
13. மலிவு விலைக் கடைகளிலும் தொழிற்சாலை விற்பனை நிலையத்திலும் வாங்குவதால் பெரும் பணம் மீதம் செய்யலாம்.
14. காலம் மாறி பொருட்களை வாங்குவதால் பெரும் சேமிப்பு செய்யலாம். உதாரணமாகப் பனிக்கால முடிவில் பனிக்கால உடைகள் அரை விலையில் விற்கப்படும்.
15. திடீர் என ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் பொறுத்து செய்யுங்கள். தொலைபேசியில் ஒரு முகவர் கூறும்போது அது மிகவும் உயர்ச்சியாகத் தோன்றும். ஆனால், அது உங்களுக்குத் தேவையற்றதாக இருக்கலாம். அல்லது உண்மையில் அது நட்டம் தரக்கூடியதாகவும் இருக்கலாம்.
16. தொலைபேசிக் கட்டணத்தில் பல மலிவான திட்டங்கள் உண்டு. அவற்றில் உங்களுக்கு எது மலிவானது என்று திட்டமிட்டுப் பயன்பெறுங்கள்.
17. பிறந்தநாள் பண்டிகை நாள், திருமணங்கள் போன்றவற்றிற்குத் திடமிட்டுப் பரிசுகளை வாங்கிவைப்பதால் பெரும் சேமிப்பு செய்யலாம்.




## வாகனம் வாங்குவது

18. புது வாகனம் வாங்குவதிலும் ஓரிரு வருட பழைய வாகனம் வாங்குவது உங்களுக்கு 30வீதமளவில் கொள்விலையில் மீதமாகும்.
19. தனியார் ஏற்பாட்டில் வாங்கும்போது கூடிய சேமிப்பு கிடைக்கும்.
20. வியாபார ஸ்தாபனங்களின் காட்சிக்கான வாகனங்கள்(Demonstration Vehicle) வாங்குவதால் 10வீதம் முதல் 20வீதம் வரை சேமிக்கலாம்.

## புது வாகனம் வாங்குவது

21. நீங்கள் பாவித்த வாகனத்தை தனியாராக விற்பதால் கூடிய பணத்தைப் பெறலாம்.
22. பேரம் பேசுவதால் 5வீதம் முதல் 15வீதம் வரை சேமிக்கலாம்.
23. நீண்ட காப்புறுதி (Extended Warranty) பெறுவதைத் தவிர்க்கவும்.
24. கறள் தவிர்ப்பு (rust proofing) தனியாகச் செய்வதால் பணத்தைச் சேமிக்கலாம்.
25. கடன் தொகையுடன் ஆயுள் காப்புறுதிகளைப் பெறவேண்டாம்.
26. பல இடங்களிலும் விசாரித்து வாகனத்தை வாங்குங்கள்.
   - பெரிய பட்டணங்களிலும் சுற்றாடலில் உள்ள ஸ்தாபனங்களிலும் மலிவாகப் பெறக்கூடியதாக இருக்கும்.
   - புரட்டாதி, மார்கழி மாதங்களில் வாகனங்களை மலிவாகப் பெறக்கூடியதாக இருக்கும்.
   - மாதக் கடைசியில் விலைகள் மலிவாக இருக்கும். காரணம் விற்பனை முகவர்கள் அம்மாதத்திற்கான விற்பனைப் பட்டியலைக் கூட்டுவதற்கு முயற்சிப்பார்கள்.
27. விற்பனையாளரிடம் வாகனங்களுக்கு Fabric protection பெறாமல் நீங்களே அதனைச் செய்யலாம்.
28. Paint sealant வியாபார ஸ்தாபனத்தில் பெறுவதைத் தவிர்க்கவும்

## ஆயுள் காப்புறுதி

29. உங்களுக்குத் தேவை இல்லாவிடில் ஆயுள் காப்புறுதிகளைப் பெறவேண்டாம்.
30. பிள்ளைகளுக்கு ஆயுள் காப்புறுதி பெறுவதைத் தவிர்க்கவும்.
31. நீங்கள் புகைப்பதில்லையானால் அதனைத் தெரிவித்து, குறைந்த விலையில் காப்புறுதி பெறுங்கள். நீங்கள் புகைத்தலை நிறுத்தி விட்டால் குறைந்த காப்புறுதிக்கு மாறுங்கள்.
32. பூரண ஆயுள் காப்புறுதி (Whole life insurance) தான் மிகவும் கூடிய விலை உடையதாகும். இதனைப் பெறுவதால் போதிய அளவு காப்புறுதியைப் பெறமுடியாது போகலாம்.
33. பூரண ஆயுள் காப்புறுதி, விற்பனை முகவருக்கும் அவர் ஸ்தாபனத்திற்கும் கூடிய பலனைக் கொடுக்கும். ஆனால், உங்களுக்கல்ல.
34. நீங்கள் காப்புறுதிக்கும் சேமிப்புக்கும் பணம் கொடுக்கிறீர்கள். ஆனால், சேமிப்பை மீளப் பெறுவதானால் காப்புறுதி நின்றுவிடும்.
35. காப்புறுதியை ஒரு சேமிப்பாகக் கருத வேண்டாம். அதில் கிடைக்கும் வட்டி மிகச் சொற்பமானதாகும்.

## அடமானம்

36. அடமானப் பணத்தை மீள்கட்டும்போது ஒரே அளவு பணத்தை வாரம் ஒருமுறை அல்லது இரு வாரத்துக்கு ஒருமுறை கட்டுவதால் பல ஆயிரங்கள் மீதமாகும். உதாரணமாக, 12வீத வட்டியுடன் 100,000 டொலர்களை 25வருடங்களுக்குக் கட்டவேண்டியவர், மாதாந்தமாகக் கணித்துவிட்டு இரு வாரத்திற்கு ஒருமுறை கட்டுவதால் 76,000 டொலர்கள் மீதமாவதுடன். 17.5 வருடங்களில் மீள்கட்டப்பட்டும் விடும்.
37. 25வருடங்களுக்கு மீள்கட்டும் பணத்தை 20 வருடங்களில் கட்டுவதற்காக மேலதிகக் கட்டணம் ஒரு சில டொலர்கள் மட்டுமே. ஆனால் 40,000 டொலர்களிலிருந்து 50,000 டொலர்கள் வரை சேமிக்கலாம்.
38. வருடாவருடம் உங்கள் சம்பளம் உயரும் போது மீள் கட்டும் பணத்தையும் கூட்டிக் கட்டுங்கள். பல்லாயிரம் மீதம் செய்யலாம்.
39. பல இடங்களிலும் விசாரித்து குறைந்த வட்டியில் பெற முயலுங்கள்.
40. அடமானம் புதுப்பிக்கும்போது புதுப்பிக்கும் கட்டணம் கட்டுவதற்கு மறுத்துவிடுங்கள். பல வங்கிகள் இதற்கு விலக்கு தரும்.
41. அடமான ஸ்தாபனம் உங்கள் வீட்டு வரியைக் கட்டுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இதனால் பெரும் சேமிப்பு உண்டு.
42. கடன் அட்டைகள் கடனை அந்தந்த மாதத்தில் கட்டிவிடுங்கள்.
43. கடன் அட்டைகள் கட்ட முடியாவிட்டால் தனியாகக் குறைந்த வட்டியில் கடன்பெற்று அட்டைக்கடனை அடைத்து அட்டையைக் கிழித்துவிடுங்கள்.

## வீட்டில்

44. வீட்டின் உஷ்ண நிலையை ஒரு பாகை குறைத்து வைப்பதால் அதற்கான செலவில் 15 வீதத்தைக் குறைக்கலாம்.
45. வீட்டிற்குள் குளிர்வரும் (caulk, weather slip) வழிகளைத் தடுக்க முயலுங்கள்.
46. வீட்டின் குளிர் தடுப்பை (Insulation) புதுப்பித்து வையுங்கள்.
47. மின்நீர் உஷ்ணப்படுத்தலுக்கு மாற்றுங்கள். அதில் பெரும் பணம் மீதமாகும்.
48. மலகூடத்தின் டாங்கியுள் ஒரு பொருளை வைப்பதால் நீர் பாவிப்பைக் குறைக்கலாம்.
49. Energy efficient குழாய்களைப் பாவிப்பதால் பெரிதும் நீர் மிச்சமாகும்.
50. குளிக்கும் தொட்டியைப் பாவிக்காமல் ஷவரைப் பாவிப்பதால் செலவு குறையும்.

■ ■ ■

# RRSP சம்பந்தமான கேள்வி பதில்



செல்வா செல்வத்துரை
- வீடு விற்பனை முகவர்

**ஆர்.ஆர்.எஸ்.பி. பற்றி நீங்கள் அறிந்த, அறியாதவற்றை சில கேள்விகள் மூலம் தெளிவுபட வைப்பதே இந்தக் கேள்விக் கொத்தின் நோக்கம். இக் கேள்விக்கான பதில்கள் முடிவில் உள்ளது.**

**1. RRSP என்றால் என்ன?**

அ. ஒரு குறிப்பிட்ட சேமிப்புத் திட்டம்
ஆ. ஒரு ஓய்வூதிய சேமிப்புத் திட்டம்
இ. ஒரு ஓய்வூதிய சேமிப்புத் திட்டம். இதன் மூலம் வருமான வரிக் கழிவு அல்லது மீளமைப்பைப் பெற்றுக்கொள்ள அரசாங்கத் தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டம்.
ஈ. மேற்கூறிய எதுவுமில்லை .

**2. நீங்கள் RRSPக்கு ஆகக்கூடியளவாக எவ்வளவு தொகையை ஒவ்வொரு ஆண்டும் செலுத்தி சேமிக்க முடியும்? (நிபந்தனைகள் எதுவுமின்றி)**

அ. 18,000 டொலர்கள்
ஆ. 19,000 டொலர்கள்
இ. 20,000 டொலர்கள்
ஈ. 21,000 டொலர்கள்

**3. RRSP சேமிப்பு காலாவதியாகும் திகதி (2007ஆம் ஆண்டு வரியில் வரி மீளளிப்பைப் பெறுவதற்கு) எப்பொழுது?**

அ. டிசம். 31,2007
ஆ. ஜன.31, 2008
இ. பெப். 28, 2008
ஈ. ஏப்.20, 2008.

**4. நீங்கள் அதிகூடியளவு RRSP (மேற் குறிப்பிட்ட) தொகையைச் செலுத்துவதற்கு 2006ம் ஆண்டு எவ்வளவு சம்பளம் உழைத்திருக்க வேண்டும்?**

அ. 105,556 டொலர்
ஆ. 150,556 டொலர்
இ. 125,000 டொலர்
ஈ. 200,000 டொலர்

**5. உங்களுடைய இந்த ஆண்டுக்கான RRSP சேமிப்புத் தொகையை எப்படி அறியமுடியும்?**

அ. உங்கள் 2006ஆம் ஆண்டுக்கான Notice of assessment(வரிப் பத்திரத்தின் நிலவரம்)இல் இருந்து.
ஆ. www/cra. arc gc.ca என்ற மின்னஞ்சல் முகவரியிலிருந்து.
இ. வருமானவரி அலுவலகத்திற்கு (1800 267 6999) தொலைபேசியில் அழைப்பதன்மூலம்.
ஈ. மேற்குறிப்பிட்ட அத்தனை முறைமூலமும்.

**6. நீங்கள் 15,000 டொலரை இவ்வாண்டு RRSP கணக்கில் இடுவதன் மூலம் எவ்வளவு வருமான வரியை நீங்கள் சேமிக்க முடியும் அல்லது மீளப் பெறமுடியும் என கணக்கிடவும். (உங்கள் வருமான வரி விகிதம் 38வீதம் என வைத்துக்கொள்ளவும்.)**

அ. 3,500 டொலர்
ஆ. 4,500 டொலர்
இ. 15,600 டொலர்
ஈ. 5,700 டொலர்

**7. நீங்கள் ஒவ்வொரு மாதமும் 400 டொலர்களை உங்கள் ஆர்.ஆர்.-எஸ்.பி கணக்கில் கடந்த 5 ஆண்டுகளாக சேமித்துக்கொண்டு வருகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். இது உங்களுக்குச் சராசரியாக 7வீத வருமானத்தை (கூட்டு வட்டியை) தருகிறது என வைத்துக்கொள்ளலாம். தற்போது உங்களிடம் எவ்வளவு பணம் வைப்பில் இருக்குமென கணக்கிட்டு சரியான விடையைத் தேர்ந்தெடுங்கள்.**

அ. 24,000 டொலர்
ஆ. 25,680 டொலர்
இ. 28,639 டொலர்
ஈ. 40,749 டொலர்

**8. இந்தப் பணத்தை நீங்கள் அப்படியே 7வீத கூட்டு வட்டிக்கு அதே கணக்கில் (மேலும் பணம் போடாமல்) விட்டு வைத்தால் 25 ஆண்டுகளுக்குப் பின்பு எவ்வளவு பணம் உங்கள்கணக்கில் இருக்கும் என்று கணக்கிட்டு சரியான பதிலைத் தெரிவு செய்யவும்.**

அ. 79,000 டொலர்
ஆ. 106,725 டொலர்
இ. 110,824 டொலர்
ஈ. 155,436

**9. உங்கள் ஆர்.ஆர்.எஸ்.பி கணக்குக்கு நீங்கள் எத்தனை வயது வரைக்கும் சேமிப்பு செய்யலாம்?**

அ. உங்களுக்கு 65 வயது ஆகும் வரை
ஆ. உங்களுக்கு 69 வயது ஆகும் வரை
இ. நீங்கள் ஓய்வுபெறும் வரை
ஈ. உங்களுக்கு 71 வயது வரும்வரை. ஆனால் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர்.

**10. கனடாவில் வருமானவரி செலுத்துவோரில் எத்தனை வீதமானோர் இந்த ஆர்.ஆர்.எஸ்.பி சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள்?**

அ. 50வீதமானோர்
ஆ. 33வீதமானோர்
இ. 88வீதமானோர்
ஈ. 100வீதமானோர்

விடைகள்:
1. இ 2. ஆ 3. ஆ 4. அ 5. ஈ
6. ஈ 7. இ 8. ஈ 9. ஈ 10. ஆ


## Royal LePage Selva Selvadurai Team's Award Nite














## வி. கந்தவனம்

புலம்பெயர் தேசங்களிலுள்ள பத்திரிகைகள் சஞ்சிகைகள் உள்ளிட்ட ஊடகங்களும், இணையமும் புதிய தமிழ் எழுத்தாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து விட்டிருக்கிறது. எழுத்துத் துறையில் காலடி வைக்கும் எல்லோருக்கும் ‘எவ்வாறு எழுதுவது’ என்பதற்கான வழிகாட்டல்கள் போதியளவு இருக்கின்றதா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்தத் துறையில் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் ‘எழுத்தாளர்’ நூல் சிறந்த கையேடாக-வும், எழுத்தாளர் தம்மை திறணாய்வு செய்யும் ஓர் அளவுகோலாகவும் அமைகிறது. “தாய்வீடு” பத்திரிகையினராகிய நாம், எமக்கும் ஏனைய ஆர்வமுள்ள எழுத்தாளர்களுக்கும் ‘செழுமைப்படுத்தும்’ ஒரு வாய்ப்பாக இந்த நூலை தொடராக வெளியிடுகிறோம்.

இக்கட்டுரைகளிற் சில, கவிஞர் தீவகம் இராஜலிங்கம் நடத்திய ஈழகேசரியில் 1993ல் அறிமுகமாயின. முழுவதுமாக இங்கிலாந்தில் திரு. பாமா இராஜகோபால் நடத்திய ஈழகேசரியில் தொடர் கட்டுரைகளாக வெளிவந்தன. அவற்றைத் தொகுத்து வெற்றிமணி ஆசிரியர் திரு. மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் ‘எழுத்தாளன்’ என்ற பெயரில் 1995ல் யேர்மனியில் நூலாக வெளியிட்டார். பின்னர் ‘எழுத்தாளர்’ என்ற மகுடத்தில் 2005ல் காந்தளகம் அதிபர் திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் தமிழ்நாட்டில் மறுபதிப்புச் செய்தார்.

எழுத்தாளன் ஆண்களை மட்டும் சுட்டுகின்றது என்று சிலர் சுட்டிக் காட்டியதால் இரண்டாம் பதிப்பில் அதற்கு எழுத்தாளர் என இரு பாலாரையும் குறிக்கும் வகையிற் பெயர் மாற்றப்பட்டதோடு கட்டுரைகளிலும் ஆங்காங்கு சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

இந்நூலின் பெறுமதியையும் தேவையையும் உணர்ந்து ‘தாய் வீடு’ ஆசிரிய பீடம் தமது இதழில் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்திருப்பது குறித்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். எனது எழுத்து முயற்சிக்குக் கிடைத்த பரிசாகவே இதனை மதிக்கிறேன்.

கட்டுரைகளின் பயன்பாடு கருதி அவர்கள் இவற்றை மக்களுக்கு எடுத்துச் செல்ல நினைத்ததையிட்டு நெஞ்சாரப் பாராட்டுகிறேன்ளூ நன்றி கூறுகின்றேன்.

மக்கள் என்று நான் இங்கே குறிப்பிட்டது பொதுவாக வாசகர்களைத்தான் என்றாலும் இக்கட்டுரைகளால் உண்மையில் அதிகம் பயன்பெறக்கூடியவர்கள் வளரும் எழுத்தாளர்-கள்தாம். அவர்களை வழிப்படுத்தும் வகையிலேயே கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ‘எனக்கு எல்லாம் தெரியும்’ என்று நினைக்கின்ற எழுத்தாளருக்கு இது உதவாது.

எழுதுகோலை முறையாகப் பிடிப்பதற்கு, அதாவது, இருக்கின்ற எழுத்தாற்றலைச் சீராக வளர்ப்பதற்கு, எழுத்துலகை நன்கு அறிந்து கொள்வதற்கு, எழுத்துலகிற் சாதனைகள் படைப்பதற்கு, எழுத்தால் சமூகத்துக்குத் தொண்டு செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று வினாக்களை எழுப்புகின்றவர்களுக்கு - முன்னேற விழைகின்ற எழுத்தாளர்களுக்கு இது ஒரு பாடநூலாக அமையும்.

இப்பொழுது எழுதுகின்றவர்களெல்லாம் எழுத்தாளர்களா? எழுதும் தகைமை அவர்க-ளுக்கு இருக்கிறதா என்று அறியவிரும்பும் அனுபவ எழுத்தாளர்களும் பிற வாசகர்களுங்கூட இத்தொடரைப் படிப்பது நல்லது. அவர்கள் தாய் வீட்டில் தந்தையின் மந்திரங்களையும் அறிந்து மகிழ்வார்கள். தகுந்த ஆக்கங்களைத் தாங்கிவரும் இதழ்கள் வாசிப்புப் பழக்கத்தைப் பூரிப்பாக்கும். பூரிப்பு உள்ளத்துக்கும் நல்லது, உடலுக்கும் நல்லது.

நினைவு நல்லது வேண்டும் தாய் வீடு நெருங்கிய பொருளை வாசகர்களுக்கு வழங்கி வாழ்வதாக!

அன்புடன்,
வி. கந்தவனம்

# மொழிமகளின் இரண்டாவது குழந்தை

எழுத்து-

மொழிமகளின் இரண்டாவது குழந்தை; தமக்கைக்கு வடிவம் கொடுக்கப் பிறந்த தங்கை.

தமக்கை பேச்சு; தங்கை எழுத்து. பேச்சு பிறந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் பிறந்த எழுத்து. காலப்போக்கில் பேச்சை முந்திக் கொண்டு வளர்ந்தாலும், பேச்சினை எழுத்துப் புறக்கணிக்கவில்லை. அதனை அலங்கரிக்கவும் பேணவும் உதவும் போராளியாகவும் எழுத்து விளங்குகின்றது.

எழுத்து, பேசுவதையும் நினைப்பதையும் எழுத உதவும் குறியீடு; பெற்ற தாயின் தலைவிதியினையே நிர்ணயிக்கும் முதலீடு.

சொல்வடிவின் சூத்திரதாரி எழுத்து. எழுத்து இல்லாமல் சொல்வடிவம் இல்லை. தனியாக நின்றும் கூட்டாக நின்றும் கூட்டாகச் சேர்ந்-தும் பேச்சுச் சொற்களுக்குத் திருத்தமான வடிவம் கொடுப்பதே எழுத்தே. பேச்சில் ஒலி; எழுத்தில் வடிவம், இதனாலேயே, மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய ஒலியாவது எழுத்து என்கி-றது நன்னூல்.

மொழி - சொல், சொல் பொருளுடையது.

கிணற்றுக்குள் நீர் இல்லாமல் இருக்கலாம். தேங்காயுள் இளநீர் இல்லாமல் இருக்க லாம். ஆனால் சொல்லுக்குள் பொருள் இல்லாதிருக்க முடியாது.

வெறுஞ் சொல் என்ற ஒரு சொல், எந்த மொழியிலும் இல்லை.

பல சொற்கள், வழக்கால் ஒன்றுக்கு மேற் பட்ட பொருள்களைச் சுமந்து நிற்கும். Take your seat என்பதனை உனது நாற்காலியை எடுத்துக் கொண்டு போ என்று ஒருவர் மொழி பெயர்த்தாராம். உட்காருங்கள் என்பதே இதன் மொத்தப் பொருள்.

Take என்ற சொல், ஆங்கில மொழியில் எத்தனையோ அர்த்தங்களில் பயன்படுத்தப் படுகின்றது. பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங் களைப் பொறுத்து, சொல்லின் பொருளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.
எழுத்து என்ற சொல்லும் அப்படித்தான்.

நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே என்ற அடியில் எழுத்துக்குப் பொருள், எழுத்து இலக்கணம்,

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

என்ற திருக்குறளில் எழுத்து, எண்ணல்லாத ஏனைய எழுத்துத் துறைகளைக் குறித்து நிற்கின்றது. அதாவது, எழுத்தையும் எழுத்-தாலாகும் சொல்லையும் சொல்லால் ஆகும் பொருளையும் குறிக்கின்றது. எனினும் எண் அறிவியலைக் குறிப்பதாயும் எழுத்து கலைத்-துறையைக் குறிப்பதாயும் இக் காலத்திற்-கேற்பப் பொருளை விரிவுபடுத்தினும் பொருந்தும்.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதில் எழுத்து மொழியறிவை அல்லது கல்வியறி-வைச் சுட்டுகின்றது.

அவன் தலை எழுத்து அப்படி என்ற வாக்-கியத்தில், எழுத்து, விதி என்ற பொருளில் வந்தது.

சரி, எழுத்தாளர் என்பதிலுள்ள எழுத்து எதனை உணர்த்துகின்றது?

## 2. ஆக்கி எழுதுபவர் எழுத்தாளர்

எழுத்தாளர் என்றால், எழுதுகின்றவர் என்று பொருள்.

ஆம், இந்த அர்த்தத்திலேதான் தமிழில் இச் சொல் மூச்செடுக்கத் தொடங்கியது. ஆவ-ணங்களை எழுதுகிறவர்களைக் குறிக்கவே எழுத்தாளர் என்ற சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

சொற்கள் காலத்துக் காலம் பொருள் மாற்றம் வருவதுண்டு. நாற்றம் என்ற சொல் இதற்கு நல்லதோர் உதாரணம். சங்க காலத்தில் இனிய மணம் வீசிய இந்தச் சொல் இன்று நாறிக் கிடக்கின்றது.

ஆனால் எழுத்தாளர் இவ்விதம் தலைகீழாக மாறவில்லை. ஆவணங்கள் எழுதுகின்றவர் களைத் தாண்டி இன்று ஒரு சக்தி வாய்ந்த சொல்லாக இது வளர்ந்து விட்டது.

எழுத வல்லவர் எழுத்தாளர், மொழித்திறன் முட்டறுக்க வல்லவர் இவர். வல்லவர் ஆதலால் ஆள்பவனுமாகின்றார். ஆளர் = ஆளுபவர், எழுத்து + ஆளர் = எழுத்தாளர்.

ஆளன் என்றால் கணவன் என்றும் பொருள். எழுத்து என்பவருடன் குடும்பம் நடத்துகின்-றவர், எழுத்தாளர்.

எழுத்து தலைவி; எழுத்தாளன் தலைவன்; வளைந்து, நெளிந்து, குனிந்து, குழைந்து, தற்கொண்டான் சொற்கமைய எழுத்து நடக் கின்றது. எழுத்து மீது ஆராக்காதல் உடையவன் தலைவன். இருவரும் கூடிப் படைக்கின்றனர்.

கவிதையாகவோ, கட்டுரை, கதை, நாவலா-கவோ, நாடகமாகவோ இருவருக்கும் பிள்ளைகள் பிறக்கின்றனர்.

எழுத்தாளரைப் படைப்பாளிகள் என்றும் அழைப்பர். எனினும் படைப்பாளி இன்னும் ஒரு பொதுச் சொல்லாகவே இருந்து வரு-கின்றது. ஓவியர், சிற்பக் கலைஞர், நடனத் தயாரிப்பாளர், தையற் கலைஞர் போன்றோ-ரும் படைப்பாளிகளே.

கட்டுரை, சிறுகதை, நாவல் எழுதுகின்றவர் களை மட்டுமே, ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர், இக்காலத்தில், writer என்ற சொல்லால் குறிக்கின்றனர். கவிஞர்களை poets என்றும், நாடகவாசிரியர்களை drama-tists என்றும் வேறுபடுத்துகின்றனர்.

தமிழிலிலும் இந்த வேறுபாடுகள் உள்ளன. ஆயினும், எழுத்தாளர் என்ற பகுபதத்தில் உள்ள நிலைமொழி ஆக்க இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் - கவிதை, கட்டுரை, சிறுகதை, நெடுங்கதை, நாடகம் பத்திரிகைத் தொழில் யாவற்றையும் - குறிக் கும் அளவுக்கு வழக்கு ஓங்கி விட்டது.

ஆக, எழுத்தாளர் என்றால் ஆக்கி எழுதுப வர் அல்லது இலக்கிய கர்த்தாக்கள் என்று பொருளாகி விட்டது. ஆக்க எழுத்து (Creative writing) அல்லது ஆக்க இலக்கி-யம் என்பதன் பொருள் என்ன?
இன்னும்

▬ ▬ ▬

**தாய் வீடு பத்திரிகை பற்றிய**
**விமர்சனங்களை**
**எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர்**
**ஆரோக்கியமான**
**பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# பிரான்ஸின் சில வரலாற்றுப் ...

**43ம் பக்கத் தொடர்ச்சி...**

ஜோசபினுக்காகவேதான் உக்கிரமாகப் போர் புரிகிறான் அவன் என்பது படைப்பாளியால் சொல்லப்படாமலே வெளிக்காட்டப்படுகிறது. நாவல் ஒருவகையில் நெப்போலியனது வெறிபிடித்த வகையான காதலை வெளிப் படுத்துகிறதெனினும், நாவலின் பிரதம பாத்திரம் ஜோசபின்தான். அவளூடாகவே பிரான்ஸ் நாட்டு வாழ்முறையும், வரலாறும் பேசப்படுகின்றன நாவலில். ஒரு திட்டமிட்ட வாழ்முறைக்கு தன்னையும் தன் மகனையும் எவ்வாறு அவள் வளர்த்தெடுக்கிறாள் என்பது நாவல் விரியும் தளம். அதை அற்புதமான முறையில் வடித்திருக்கிறார் சந்ரா காலான்ட். ஒரு கிராமியச் சிறுமியாக, பின்னர் பிரபு வம்சத்தில் திருமணமான சீமாட்டியாக, கணவனை விவாகரத்துச் செய்து தனித்து வாழும் பெண்ணாக, பின் கணவனை இழந்த மேட்டுக்குடிப் பெண்ணாகவென்று பல்வேறு வேடங்கள் ஜோசபினுக்கு. அவளடையும் இப் பரிமாணங்கள் அழகானவை. மட்டுமில்லை, திடமனம்கொண்ட ஒரு பெண்ணின் தவிர்க்க-வியலாத வளர்ச்சிகளாவும் நாவலில் காட்டப் படுகின்றன. வரலாற்று மாந்தரின் வாழ்க்கை-யை நேரில் கண்ட சுகம், நாவலை வாசித்து முடிக்கும் தருணத்தில் ஏற்படுவதைத் தவிர்க் கவே முடிவதில்லை.

வாழ்க்கையில் எவ்வளவுதான் உயர்ந்து சென்-றாலும் அவளுள் இருந்த துக்கத்தின் கீர்த்தனங்கள் எந்தவொரு உன்னத நிலை மையிலும் இசைக்கவே செய்துகொண்டிருந் தன. அவை படைப்பாளியின் தலையீட்டில் வலிந்து புகுத்தும் முயற்சிகளாக இல்லா-திருந்தது நாவலின் வெற்றி.

சமீப காலங்களில் பரவலாகப் பேசப்பட்ட பல கனடாவின் ஆங்கில நாவல்களுக்கு எவ் வகையிலும் சமமானதே சந்ரா காலான்டின் ‘The Many Lives & Secret Sorrows of Josephine B.’ தன் கட்டமைப்பால், விஷயங் களைப் புகுத்தும் நேர்த்தியினால், ஒரு பிரான்சிய வரலாற்றுப் புலத்தில் நாவலைப் படைக்கிறோம் என்ற பிரக்ஞையுடன் அதற் கான ஒரு மொழியைச் சுவீகரித்துக் கொண்டு படைப்பிலிறங்கியதன் மூலமாய் சிறந்த ஒரு நாவலைப் படைத்தவராகிறார் சந்ரா காலான்ட். கனடா ஆங்கில இலக்கி யத்தை இந் நாவல் ஒரு சிறிதாவது முன்-னகர்த்தியிருககிறது என்றாலும் தப்பில்லை.

■ ■ ■

# கனேடிய சுகாதார மையத்தின் எச்சரிக்கை...

1ம் பக்கத் தொடர்ச்சி...

இதன்காரணமாக ஒவ்வொரு கனேடியருக்கும் இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று தனது உயிரைக்காப்பாற்றிக் கொள்வது. இரண்டாவது கனடா மக்களைக் காப்பாற்றுவது.

இந்த பாதுகாப்பான நடைமுறை பற்றி கனேடிய சுகாதார மையம் (Health Canada) மிகத் தெளிவாக எடுத்துக் கூறி வருகின்றது. ஆனால் வெளிநாட்டு பயணங்களை

**- சிவா சுப்ரா -**

மேற்கொள்கின்ற கனேடியர்களில் பல மில்லியன் கனேடியர்கள் இந்த எச்சரிக்கையையும், பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகளையும் தெரிந்து வைத்திருப்பதில்லை. இதனால் ஆபத்து நமக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் தான். முதலில் பாதிப்புக்கு உள்ளாவது அவர்கள் தான்.

### இந்த பாதிப்பு ஏற்படும் வகைகள்

- தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பூசியை போடாமல் பயணம் செய்வது.
- செல்கின்ற நாடுகளில் தொற்று உள்ள நீரையும், உணவையும் அருந்துவது.
- பாதுகாப்பாக இருப்பதற்குரிய சில மருந்துகளை எடுத்துச் செல்லாமை. உதாரணம் மலேரியா நோய்க்கான குளிகைகள்.
- பாதுகாப்பற்ற பாலியல் நடவடிக்கைகள், உடலில் பச்சைகுத்துவது (tattooed).

இந்த ஆபத்தான நிலைமைகளை தவிர்ப்பதற்கான கனேடிய சுகாதார மையம் (Health Canada) ஒரு திட்டத்தை முன்வைத்து செயல்படுத்தி வருகின்றது. அதன் பிரகாரம் நீங்கள் ஏதாவது ஒரு நாட்டுக்கு பயணம் செல்ல திட்டம் இடுகின்றீர்கள் என்றால் உங்களது பயணத்துக்கான ஆறு கிழமையில் இருந்து எட்டுக் கிழமைக்கு முன்னர் கனடாவில் உள்ள ஏதாவது ஒரு travel clinic க்கு செல்ல வேண்டும். இந்த travel clinic பற்றிய தகவல் தெரியாதவர்கள் தமது குடும்ப வைத்தியரிடம் தமது பயணம் பற்றி சொல்லி உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் செல்ல உள்ள நாடு, அந்த நாட்டில் உங்களுக்கு ஏற்படக் கூடிய தொற்று நோய்கள், உங்கள் உடல் நிலைமை, உங்கள் உடலில் ஏற்கனவே போடப்பட்ட தடுப்பூசிகள், போடாத தடுப்பூசிகள் என்பன வற்றை ஆராய்ந்து உங்கள் குடும்ப வைத்தியரும், travel clinicக்கும் உங்களுக்குரிய தடுப்பூசிகளையும், நீங்கள் அந்த நாட்டுக்கு போக முன்னரும், அந்த நாட்டில் இருக்கும் போதும் எடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளைப் பற்றி விபரமாகத் தெரிவிப்பார்கள். அது மட்டுமல்ல அந்த நாடுகளில் எதை நீங்கள் தவிர்க்க வேண்டும் என்ற ஆலோசனைகளையும் அவர்களிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுவாக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் Diarrhea, அல்லது Turista வினால் பாதிக்கப்படுகின்றனர். இவை இரண்டும் ஏனைய நாடுகளில் நாம் அருந்துகின்ற நீரினால் ஏற்படுகின்றது. கனடாவில் நாம் அருந்தும் நீரில் உள்ள பெரும்பான்மையான கிருமிகள் (Most waterborne organisms) நமது நகர சபையால் துப்பரவு செய்யப்பட்டே நமக்கு கிடைக்கின்றது. ஆனால் நாம் செல்லும் நாடுகளில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் அந்த வசதி கிடையாது. எனவே அந்த நாடுகளில் நாம் அருந்தும் தண்ணீராலும், அந்த தண்ணீரால் தயாரிக்கப்பட்ட உணவுகளினாலும் இது ஏற்படலாம்.

இதை விட பல இளம்பிள்ளை வியாதிகள் நமக்கு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. Diphtheria, Tetanus, Polio, Measles, Mumps, Rubella போன்ற வியாதிகள் சுகாதார சீர்கேடு நிறைந்த நாடுகளில் இருந்து நமக்கு கிடைக்கலாம். இதில் இருந்து பாதுகாக்க



இந்த நோய்களுக்கு எதிரான நோய்தடுப்பூசி நமக்கு அவசியம்.

இது மட்டுமல்ல தைபொயிற், Hepatitis A, Meningitis, Japanese encephalitis, Wuropean tick-borne encephalitis, Hepatitis B, Rabies என்பவற்றிற்கான நோய் தடுப்பூசிகளையும் நீங்கள் வெளிநாடு செல்ல முன்னர் போட்டுக் கொள்வது அவசியம்.

அதேசமயம் நீங்கள் எந்த நாடுகளுக்கு செல்கின்றீர்கள் என்பதைப் பொறுத்து சில நோய்கள் உங்களுக்கு வரலாம். நுளம்பினால் வரக்கூடிய மலேரியா (வெப்பவலைய நாடுகளில் இருந்து), மஞ்சள் காச்சல் (Yellow fever) மத்திய ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா நாடுகளால், Dengue fever (வெப்பவலைய நாடுகள்) , Schistosomiasis நோய் (caused by a parasite in fresh water in the Carribean, South America, Africa, the Middle East and Southeast Asia) உங்களுக்கு வர வாய்ப்புள்ளது.

இதை எல்லாவற்றையும் விட பாலியல் நோய்கள் முக்கியமாக எயிட்ஸ் நோய் கனடாவிலும் விட மிக அதிகமாக நீங்கள் செல்கின்ற நாடுகளில் இருந்து உங்களுக்கு வர வாய்ப்புள்ளது. இது நீங்கள் பாதுகாப்பற்ற பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டால் மட்டுமின்றி உங்கள் உடலில் பாதுகாப்பற்ற ஊசிகளை குற்றுவதாலும், இரத்தம் ஏற்றுவதாலும் ஏற்படலாம்.

### கடைசியாக சில குறிப்புகள்:


- வெளிநாட்டுக்கு செல்ல முன்னர் உங்களுக்கு உரிய அனைத்து தடுப்பூசிகளையும் போட்டுக் கொள்ளவும்.
- வெளிநாட்டுக்கு போக முன்னர் குடும்ப வைத்தியர், அல்லது Travel clinicக்குடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளையும். தடுப்பூசிகளையும் மற்றும் மருந்துகள் தொடர்பான விபரங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
- மலேரியா நோய் ஏற்படக் கூடிய நாடுகளுக்கு செல்வதானால் (உதாரணம்: இலங்கை, இந்தியா) மலேரியா நோய்க்கு எதிரான மாத்திரைகளை எடுத்துச் செல்லவும். இந்த மாத்திரைகளை நீங்கள் பயணம் செய்வதற்கு சில வாரங்கள் முன்னதாகவே கனடாவில் இருந்தே எடுக்கவேண்டும். அதே சமயம் நுளம்பு உங்களைக் கடிக்காத வண்ணம் யன்னல்கள் நெட்டினால் பாதுகாக்கப் பட்ட வீடுகளில் தங்குங்கள். அப்படி பாதுகாப்பு அந்த வீடுகளில் இல்லை என்றால் என்ன செய்யலாம்?. நீங்கள் பணம் அனுப்பி அப்படியான பாதுகாப்பை நீங்கள் செல்லும் வீடுகளுக்கு ஏற்படுத்துமாறு ஒழுங்கு செய்யுங்கள்.
- சுடவைத்த, நன்றாக சமைக்கப்பட்ட உணவுகளையும், தோல் நீக்கிய காய்கறிகள், பழங்களையும் உண்ணுங்கள்.
- வீதிகளில் விற்கப்படும் உணவுகளை தவிர்த்துவிடுங்கள். அவை சுகாதாரக் கேடு நிறைந்ததாக இருக்கும்.
- அடிக்கடி உங்கள் கைகளை சோப்பினால் கழுவுங்கள். குறிப்பாக எதையாவது சாப்பிடும் முன்னர்.
- யாருடன் ஆவது பாலியல் செய்ய வேண்டிய ஆசை ஏற்பட்டால் பாதுகாப்பு உறையை அணிந்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு: visit the Travel Medicine Program Website at: www.travelhealth.gc.ca அல்லது (613) 957-8739 இலக்கத்தில் கதையுங்கள்.

■ ■ ■

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி
• Loans
• Mortgages
• Insurance Claims
• Traffic Ticket
• Auto/Life Insurance
• Scholarship Plan (RESP)
• Real Estate Related
• Credit Counselling
• Accounting
• Tax Services

R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

D.M.K Renovations
Basement Renovations
Hardwood Floor
Laminate Floor
Tiles
Plumbing
Heating & Airconditions

Deesan 647 502 5867

# GRAND DAYS PARTY HALL



உங்கள்
கொண்டாட்டங்களை
நினைவில் நீங்கா
காவியங்களாக்கித்
தருபவர்கள்

Best Price
$600.00
Only*

- Best Hall for 100 People, Huge Parking Lots, Elevator, Etc.
- Any Parties & Functions, Business Meetings, Dinners, Etc.
- Package may include Hall, Buffet, Digital DJ system, Photos, Video, Cutlery and many more….
- We do outdoor catering services – North & South Indian foods, Srilankan, Indian Chinese, Italian Foods, Etc.

2101, Brimley Road, Suite 209 (Brimley & Sheppard)
web: www.granddays.com, e-mail: mail@granddays.com
Tel: **416-273-5080, 416-880-6051**

digi

# உங்கள் கணக்கியல் தேவைகளுக்கு ஒரு சிறந்த தீர்வு

- Accounting, Bookkeeping & Tax Services
- Credit Counseling & Loan Consolidation
- Company Incorporation & Business Loans
- Mortgages, Insurance, RRSP & RESPs



**Call**
**MVK Now**
**416.913.9405**

digi



அன்பே!
இந்த படங்களைப் பார்
நாங்கள் கட்டாயமாக
இவர்களைத்தான்
அழைக்க வேண்டும்....

idigiteyes Photography

613.290.5773
www.iDigitEyes.com

Weddings • Portfolio • Modeling • Executive • Parties • Glamour

digi Media Creations

# வைரஸ் "காய்கள்" (Viral warts)

ஜீவா
திசைராஜா



Wart என்பது பொதுவாக தோலின் மேற் பகுதியில் தோன்றும் ஒரு சிறிய கடினமான கட்டியாகும் (Tumour). பொதுவாக இக்கட்டி கைகளிலும் கால்களிலும் வரக்கூடியது. இது ஒரு காலிபிளவர் (Cauliflower) அல்லது திண்மமான கட்டியை ஒத்ததாக இருக்கும். காய்கள் பொதுவாக வைரஸ் தொற்றினால் ஏற்பட்டவையாக இருக்கும். இவை பெரும் பாலும் மனித தோலில் பரவும் (Human Papilloma Virus - HPV) வைரஸினால் ஏற்படுபவையாகவும், நோய் ஏற்பட்ட இன்னொருவரைத் தொடுவதன் மூலம் தொற்றக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் அவரின் துவாய்கள் மற்றும் ஏனைய பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் காய்கள் தொற்றக் கூடியதாக இருக்கும்.

இவை ஓர் சில மாதங்களில் மறைந்து விடக் கூடியதாக இருந்த போதும், பல வருடங்கட்கு தொடர்ந்து மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடியவை. ஒரு வகையான Pappilloma Virusகளே (தோலுக்குரியவை) கருப்பை வாய் புற்றுநோயை (cervical cancer) ஏற்படுத்தக் கூடியவையாக இருக் கின்றன. எனினும் பொதுவான காய்கள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியனவாக மாறுவதில்லை. இவை காயப்படுத்தப்பட் டால் இரத்தம் வெளிவரக்கூடியவை.

ஏன் சிலருக்கு காய்கள் வருகின்றன? சில ருக்கு ஏன் வருவதில்லை? என்ற வினாக் களிற்கு இன்னும் விடை காணப்படவில்லை. காய்கள் வராமல் தடுப்பதற்கு எந்த வழி- களும் இல்லை.

காய்கள் சிறுகுழந்தைகளிற்கு ஏற்பட்டால் தாமாகவே மறையக் கூடியவை. ஆனால் வயது வந்தவர்கள் வளர்ந்த பிள்ளைகட்கு இலகுவில் மறைவது குறைவாகும். பிறப் புறுப்புக்களில் ஏற்படும் காய்கள் பாலியல் ரீதியில் ஏற்படும் தொற்றால் ஏற்படுபவை.

### காய்களின் வகைகள்

இவற்றின் வடிவத்தையும் இவை பாதிக்கப் படும் இடத்தையும் பொறுத்தும், மனித Papilloma virus எவ்வாறு இதில் அடங்கி- யிருக்கிறது என்பதைப் பொறுத்தும் இவை வேறுபடும்.

### பொதுவான காய் (Common Wart)

இது கைகளிலும் முழங்கால்களிலும் காணப் படும். பொதுவாக தோல் மேற்பரப்பிற்கு மேலாக கடினமான தோலுடன் மேலுயர்ந்து காணப்படும்.

### தட்டையான காய் (Flat Wart)

இது சிறிய, மென்மையான தட்டையான காயாகும். இது தோலின் நிறமுடையதாக இருக்கும். இது அதிக எண்ணிக்கைகளில் ஏற்படும். இது பொதுவாக முகம், கழுத்து, கை, மணிக்கட்டு, முழங்கால் ஆகியவற்- றில் ஏற்படக் கூடியது.

### நூல் போன்ற அல்லது விரல் போன்ற காய் (Filiform or Digitate Wart)

இது மெல்லிய நூல் போல் அல்லது விரல் போன்று வளர்ந்து காணப்படும். இது பொது வாக முகத்தில், குறிப்பாக கண்இமைகட்கு அருகாக அல்லது உதடுகளின் ஓரத்தில் ஏற்படும்.

### பாதங்களின் அடிப்பகுதியில் ஏற்படும் காய் (Plantar Wart)

இது கடினமானதாக சிலசமயம் நோவு ஏற்ப டுத்தக் கூடியதாகவும் காயின் மையப்பகுதி யில் கறுப்புப் புள்ளிகள் உடையதாகவும் காணப்படும். இது பொதுவாக கால்களின் அழுத்தம் ஏற்படும் இடங்களில் காணப்படும்.

### கொத்தான காய் (Mosaic Wart)

பாதங்களின் அடிப்பகுதியில் ஏற்படும் காய் களின் தன்மையை ஒத்த ஆனால் நெருக்க மாகவும் கொத்தாகவும் அமையும் காய்கள் இவையாகும். கைகளிலும் பாதங்களிலும் இவை அமைந்து காணப்படும்.

### சிகிச்சை: மருத்துவ நிபுணரால் பரிந் துரைக்கப்படும் சிகிச்சைகள்

**Keratolysis -** பொதுவாக Salicylic acidஐ பாவித்து அல்லது கட்டியின் மேற்பரப்பை நீக்கும் கலவைகளைப் பயன்படுத்தி அல்லது நோயாளியின் நோயெதிர்ப்புத் தன்மையை ஊக்குவிப்பதன் மூலம் தோலின் இறந்த மேற்பரப்பை (Dead Surface) அகற்றுதல்.

**Cryosurgery -** இதில் காயை (பொது வாக திரவ நைதரசனைப் பயன்படுத்தி) உறைய வைத்தல் (Freezing). இதன் பின்பு இந்த காயும் இதனைச் சுற்றியுள்ள இறந்த தோலும் தானாகவே கழன்று விடும்.

**Curettage -** சத்திரசிகிச்சை மூலம் காயை உரித்தெடுத்தல்

**Laser Treatment -** லேசர் சிகிச்சை மூலம் காயை அகற்றுதல்.

**Imiguimod எனும் topical கிரீமைப் பயன்படுத்தல்-** இது காயிலுள்ள வைரஸை எதிர்க்கக் கூடியள வுக்கு உடலின் நோய் எதிர்ப்புத் தன்மை யை வலிமைப்படுத்தக் கூடியது.

இத்தகைய சிகிச்சைகளுக்குப் பின் தோல் குணமடைந்த பின்னும் சிலசமயம் இந்தக் காய் மீண்டும் வளரக் கூடியது பல்வேறு பரிசோதனைகளின் படி Salicyclic அமிலம் உள்ளிட்ட கிரீம்களைப் பயன்படுத்தும் சிகிச்சை முறைகள் மிகவும் சிறந்தவை என்று தெரியவந்துள்ளது.

### இரசாயன சிகிச்சை (Chemical treatment)

இம்முறையில் Salicylic acid அல்லது அதை யொத்த கலவைகளைக் கொண்டு இறந்த மேற்பரப்புத் தோற்கலங்களை அகற்றுத லாகும். Podophyllin என்னும் இரசாயனம் தாய்மையடைந்திருக்கிற அல்லது தாய்மை- யடையக் கூடிய பெண்கள் பயன்படுத்தக் கூடாது. பொதுவாக இந்த Paint ஒரு நாளைக்கு ஒரு தடவை பூசப்பட வேண்டும். 70% மான காய்கள் இதன் மூலம் அகன்று விடுகின்றபோதிலும், தொடாந்து பொறுமை யுடன் முயற்சி செய்தல் அவசியமாகும். இது சரியான முறையில் பயன் தருவதற்கு 12 கிழமைகள் எடுக்கலாம். இந்தக் காய் முற்றிலுமாக போகாவிட்டாலும் காயை சிறி தாக்கி அசௌகரியத்தைக் குறைக்கும்.

முதலாவதாக, காய் ஏற்பட்ட தோற்பகுதி சவர்க்காரம் கலந்த கொதிநீரினுள் வைக்கப் பட்டு மென்மையாக்கப்பட வேண்டும். பின் காயின் மேற்பகுதிதோல் சுரண்டி அகற்றப் படல் வேண்டும். Wart pain அல்லது gel சரியான முறையில் பூசப்பட்டு காய விடப் படல் வேண்டும். இதனைச் சுற்றி பிளாஸ்டர் அல்லது Duct tape (குறிப்பாக பாதங்களில் வருபவற்றிற்கு கூடுதலாக விதந்துரைக்கப் படுகின்றது) இடப்படல் வேண்டும்.

### மருந்துக் கடைகளில் (Over the counter) வாங்கக் கூடிய மருந்துகள்

மருந்துக் கடைகளில் நீங்கள் இக் காயை (Wart) நீக்கும் மருந்துகளை வாங்க முடியும். இதில் மிகவும் பொதுவானது Salicylic அமிலமாகும். இவை மருந்து கடைகள் அல்லது Supermarkets இலும் கிடைக்கக் கூடியவை. இதில் இரண்டு வகையான உற்பத்திகள் (Products) உள்ளன. Salicylic அமிலமுள்ள ஒட்டக் கூடிய Plaster போன்றவை அல்லது Salicylic அமில கலவையுள்ள போத்தல் ஒன்றை நீங்கள் வாங்கலாம். Salicylic அமிலத்தைப் பயன் படுத்தி ஒரு காயை அகற்ற வேண்டுமெனில் அந்த இடத்தை நன்கு துப்பரவு செய்ய வேண்டும். அத்துடன் இறந்த தோல்களை நன்கு சுரண்டக் கூடிய Pumice stone கொண்டு அகற்ற வேண்டும். இந்த முறை யில் ஒரு காயை அகற்ற 12 கிழமைகள் எடுக்கலாம். இரசாயன சிகிச்சை என்பத- னுள் இது கூறப்பட்டுள்ளது.

மருந்துக் கடைகளில் இக்காயை அகற்றக் கூடிய இன்னொரு மருந்து Caustic Pencil இன் வடிவில் கிடைக்கக் கூடிய வெள்ளி நைத்திரேற்றாகும். இதுவும் மருந்துக் கடை களில் கிடைக்கக் கூடியது. இந்த முறை யிலும் 3-6 தடவை நாளாந்த சிகிச்சைகள் அவசியமாகும். தோல் மற்றும் உடைகளில் கறை படிவதைத் தடுக்க அறிவுறுத்தல்கள் கவனமாகப் பின்பற்றப்படல் வேண்டும்.

இதனை விட 3மடங்கு செலவு கூடிய Cryosurgery kitsஐயும் மருந்துக் கடைகளில் பெறக் கூடியதாக இருக்கும். வைத்தியரிடம் பெறும் சிகிச்சையைப் போலவே மருந்துக் கடைகளில் பெறும் சிகிச்சைகளும் பலதடவை செய்ய வேண்டியதாயிருப்பதுடன், இந்தக் காய்கள் பிரச்சனை கொடுப்பதாயிருந்தால் மட்டுமே செய்ய வேண்டியதாயிருக்கும். மேலும் இந்த சிகிச்சைகள், ஆரோக்கியமான தோலையும் காய்களையும் கூட சேதப்படுத் தக் கூடியவை. எனவே மருத்துவ ஆலோச- னையில்லாமல் இவற்றை முயற்சி செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும்.

### வீட்டில் செய்யக் கூடிய சிகிச்சைகள்

ஒட்டும் நாடாக்களை (Duct tape) அல்லது மருத்துவரீதியான பிளாஸ்டரை பாதிக்கப் பட்ட பகுதியில் சுற்றிக் கட்டுதல். Duct tape இனால் சுற்றிக் கட்டுதல் 85% வினைத்திறன் (Effective) வாய்ந்தது என்று கண்டறியப் பட்டுள்ளது. ஒரு நாளின் 24 மணி நேரமும் காயை சுற்றிக் கட்டி முடிவைத்திருத்தலே காயை அகற்றக் கூடியது என்று கூறப்படு கின்றது.



இதனைவிட தோல் நீக்கி உராயப்பட்ட உள்ளி, வாழைப்பழத்தோல், தோல்நீக்கப் பட்ட உருளைக்கிழங்கு, உருளைக்கிழங்கு அல்லது காலிபிளவர் அல்லது தக்காளிச் சாறு அல்லது வினிகர், உப்பு அல்லது வெஜிமைற் போன்றவற்றை இந்தக் காய் களில் பூசுவதன் மூலமும் அகற்றலாம். கொதிநீர், சலவை செய்வதற்குப் பயன்படும் திரவம் (Washing liquid), போன்றவையும் இக்காய்களை அகற்றப் பயன்படுத்தப்படு- கின்றன. இவை எவ்வளவு காலம் பயன் படுத்தப்படவேண்டும் என்பது காயின் தன்மை யைப் பொறுத்ததே. இந்த சிகிச்சைக்குப் பின் காய்கள் மறைந்து விடுவதற்கு நோயாளி- யின் நோய் எதிர்ப்புத் தன்மையா அல்லது சிகிச்சைதான் காரணமா என்பது பரிசோதனை மூலம் முடிவு செய்யப்படவில்லை.

காய்களை வீட்டில் வைத்து வெட்டுவதோ (Cut) அல்லது எரிப்பதோ (burn) ஆபத்தை விளைவிக்கும். காய்களை நீக்குவதற்கு ஆசிய நாட்டவர் சாம்பிராணிக் குச்சுகளை பயன்படுத்துவது மிகுந்த நோவைக் கொடுப்பதுடன் நோய்த்தொற்றை (infection) ஏற்படுத்தி நிரந்தரமான வடுவினையும் ஏற்படுத்தக் கூடியவை. அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

■ ■ ■



CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO,
TELUS MOBILITY, BELL MOBILITY

Unlimited Calling !!!

Anywhere in USA & CANADA
Unlimited Outgoing USA & CANADA
Unlimited Incoming USA & CANADA
Unlimited SMS USA & USA
Unlimited Date browsing in USA
No contracts
No credit check
Free caller ID
FREE voicemail






WE UNLOCK
GSM PHONES



Call Toll free:- 1.877.312.5123   SHOP ONLINE @ www.celltelmobility.com

CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).

2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818

220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859

5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# யோகம் தரும் ஆரோக்கிய ரகசியம்



N.T. கருணாகரன்
- யோகா ஆசிரியர் -

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று மானிடப் பிறவியின் மகத்துவத்தைக் கூறினார் தமிழ்ப் புலவர் ஔவையார். இவ்வாறு எத்தனையோ முதறிஞர்களும் மகான்களும் மனிதப் பிறப்பின் மேன்மையையும் மனிதனால் ஆனந்தமான ஆரோக்கிய வாழ்வு வாழமுடியும் என்பதையும் அவரவர் காலங்களில் பற்பல வகையில் கூறிவந்துள்ளனர். இவை இவ்வாறு இருக்க, எமது யோகிகளும் சித்தர்களும் முனிவர்களும் மக்கள் அனைவரும் வாழ்வை ஆனந்தமாக வாழ்ந்து திருப்தியும், சுகமும் பெறவேண்டுமென்பதற்காக யோகம், சித்த மருத்துவம், ஞானவழி போன்றவற்றை அருளினார்கள். இன்றைய மனிதன் இயந்திர கதியான இலத்திரனியலில் முனைப்பாய் முன்னேறிவரும் உலகில், உடல் மன சுகத்தைத் தக்கவைக்க அரும் பாடுபட வேண்டியிருக்கிறது. இவ்வுரையில் எமது முன்னோர்கள் எமக்கு அருளிய யோகக்கலை எவ்வாறு இன்றைய மனிதனுக்கு நிரந்தரமான, நிச்சயமான ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும் வழங்கும் என்பதுபற்றி பார்ப்போம்.

மற்றும் இப்பூமியில் வாழும் உயிரினங்களுக்கு எல்லாம் உடல், அறிவு, மனம், புலன்கள் போன்றவை அவசியமாகிறது. அதுபோலவே உயிரினங்களின் உடல்கள் பல வடிவங்களில் இருந்தாலும் அவற்றின் மூலப் பொருள்கள் அனைத்தும் பூமி என்ன என்ன மூலப் பொருட்களால் ஆனதோ அது போலவே உடல்களும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்து வகையான பொருட்களால் உருவானவையாகும். இதை நீங்கள் பகுத்து உணரவேண்டும். ஏனெனில், பின்வரவிருக்கும் விடயங்கள் அனைத்தும் பஞ்சபூத தத்துவங்களின் அடிப்படையிலேயே அமையப் போகின்றன.

எங்கள் உடலும் இந்த நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்றவற்றினால் ஆனதே ஆகும்.

1. தாயின் கருவில் உருவாகிய பின் தாய் உண்ணும் உணவு நிலத்தின் அம்சமாகும்.

2. அருந்தும் நீரானது நீர் தத்துவம். இது நேரடியாகவே சேர்கிறது.

3. நெருப்பு எமது உடலில் உயிர் வாழத் தேவையான வெப்பமாகத் தொடர்ந்து எரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால்தான் எரிதலின்போது வெளியேறும் காபனீரொக்சைட் ($CO_2$)நமது வெளிச் சுவாசத்தின் மூலம் வெளியேறுகிறது. இதன்மூலம் உடலில் நெருப்பும் வேலை செய்கிறது என்பது புலனாகிறது.

4. அடுத்து, காற்றானது சுவாசத்தின் மூலம் வேலை செய்கிறது. காற்றே உயிராகவும் உயிர்ச் சக்தியாகவும் உயிருடன் இருப்பதற்கு எமக்கு உதவுகிறது. யோகக் கலையின் தனித்துவமே மூச்சுப் பயிற்சியை தன் அங்கமாகக் கொண்டிருப்பதுதான். எனவே, இவ்விடயத்தையும் பசுமரத்தாணிபோல ஆழ் மனதில் பதித்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் யோகத்தின் நன்மைகளை அடைய முடியும்.

இனிய தமிழ் உறவுகளே, வாழ்வை வாழ முதலாவதாகத் தேவையானது நல்ல ஆரோக்கியமான உடல். மற்றம் எதிர்மறைச் சிந்தனைகள் அற்ற, தனக்கென மட்டும் வாழாது மனித சமுகத்தற்கும் பிரயோசனமாக வாழ்வை அமைக்கக் கூடிய மனம், மற்றும் அறிவை அறிந்து கொள்வதற்குத் தேவையான துல்லியமான ஐந்து புலன்கள், அத்துடன் அறியாமையின் இருளை விரட்டி அறிவை அறிய வைக்கும் புத்தி - இவைதான் முதலாவதாக ஆனந்த வாழ்விற்குத் தேவையானவை. இதற்கு அடுத்தபடியில்தான் மற்றவை எல்லாம் தேவைப்படுகிறது. அடுத்து நாம், ஆகாயத்தைப் பற்றிப் பார்ப்போம்.

உடல் உருவான பொருட்களில் சற்று விளங்கிக்கொள்ள சிரமமானது ஆகாயமாகும். இது வெட்டவெளியாகும். அதாவது காற்று இல்லாத ஆனால் நுணுக்கமான மின் அணுக்களால் நிரப்பப்பட்ட வெளி ஆகாயம் ஆகும். இது இல்லாத இடமே இல்லை. இப்பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்து இருக்கும் சக்தி இதுவாகும். இதுவே பிரபஞ்ச இயக்கத்தின் ஆதாரம். இந்த ஆகாய சக்தியின் அம்சமானது உடல்



முழுவதும் பரவி நிற்பதுடன் கண்ணுக்குத் தெரியாமல் மனமாகவும், சிந்தனையாகவும் எண்ணங்கள் ஆகவும் மனோ சக்தியாகவும் மனித உடலில் வேலைசெய்கிறது.

பஞ்ச புதங்களால் உருவான உடல், மனம் போன்றவை சரியான முறையில் இயங்கினால் மட்டுமே மனிதன் ஆரோக்கியத்தைத் தன்னில் தரிசிக்க முடியும்.

ஆரோக்கிய தரிசனம் பெற எவ்வாறு யோகத்தின் துணையுடன் உடலையும் மனதையும் பராமரிக்க வேண்டும் என்பது பற்றி இனிக் காண்போம்.

## நிலம்:

ஐம்பொருட்களின் இயற்கைத் தன்மைகளை நாம் கூர்ந்து நோக்கினால் அவை நிலையற்றவையாகவும், மாறும் தன்மை உடையதாகவும் உள்ளன. உதாரணமாக, நிலத்தைக் கவனியுங்கள். நீங்கள் பண்படுத்தி வைத்த இடம் புதர் வளர்ந்து தரிசாகிவிடுகிறது. மண்சரிவு, கடல் அரிப்பு, ஆற்றுப்படுகை என நிலம் (மண்) மாறிக்கொண்டே இருக்கிறது. இவ்வாறு, உணவு மூலம் வளப்படுத்தப்படும் உடலானது (நிலம்) சரியான முறையில் பராமரிக்காவிட்டால் எடை கூடும். அல்லது குறையும். இப்படி பெரும் மாற்றத்திற்குத் தொடர்ந்து உள்ளாகியபடியே இருக்கும்.

நிலத்தின் அம்சமாக உடல் இருக்கின்றது. தோட்ட நிலத்தை அடிக்கடி விவசாயிகள் பராமரிப்பது போலவே உடலையும் கவனமாகப் பராமரிக்க வேண்டும். இதற்கு உண்ணும் உணவையும் இயற்கைத் தன்மை மாறாத உணவாக உண்பது அவசியம். அடுத்து, உடற் கழிவுகளையும் உடனுக்குடன் களைவது அவசியம். தொடர்ந்து பராமரிக்கும் தோட்டத்தில் வளரும் பயிரே நிறைந்த விளைச்சலைத் தருவதுபோல நன்கு பராமரிக்கப்படும் உடலே நிலையான சுகத்தைத் தரும் இடமாகும்.

## நீர்:

சுத்தமான அளவான நீர் உடலுக்குக் கிடைக்க வேண்டியது மிக அவசியமாகிறது. உடம்பே ஒரு இரசாயன தொழிற்சாலைபோலத் தொழிற்படுவதால் நீரின் பங்கு மிகவும் முக்கியமாகும். உடலில் 71வீதம் நீரே இருக்கின்றது. உடலின் சக்தியாக இருக்கும் குருதியே நீர் தத்துவம்தான். எனவே, உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாத ஒன்றாய் இருக்கிறது.

உடலானது தொடர்ந்து நீர்க் கழிவுகளை அகற்றிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, உடலுக்குத் தேவையான அளவு சுத்தமான நீரை தவறாது கிடைக்கச் செய்வது தவிர்க்க முடியாதது. அத்துடன் நீரின் மாறும் தன்மையைப் பார்த்தால் கடலாகவும், ஆறாகவும், மழையாகவும், ஓடையாகவும் நிலைபெறாமல் சதா அசைந்து கொண்டே இருக்கிறது. அதுபோல் மனித உடலிலும் நீர்க்குற்றம் (சிலேத்துமம்) ஏற்பட்டால் உடல் நோய் பெறுகிறது.

## நெருப்பு

சில உணவுகள் அதிக வெப்பத் தன்மையுடன் இருக்கிறது. இவ்வகையான உணவு அதிக அளவில் உண்ணப்பட்டால் உடலில் நெருப்பின் குற்றம் (பித்தம்) ஏற்பட்டு உடலில் பித்தச் சுரப்பு அதிகரிக்கிறது. இதனாலும் உடலில் பித்தம் சார்ந்த நோய்கள் தோன்றும். மனிதருக்கு அனேகமான நோய்களுக்கு நெருப்பின் குற்றமே காரணமாகிறது.

## காற்று

தன்னியக்கமாகவே உடலில் இயங்கிக் கொண்டிருக்கும் மூச்சு மூலமே உயிர் நிலை பெறுகிறது. இதன்மூலமே பிராணவாயுவும் பிராண சக்தியும் உடலுக்குக் கிடைக்கிறது. இவ்வாறு தன்னிச்சையாகவே மூச்சின் செயற்பாட்டை ஆழ்மனம் கவனித்துக்கொள்கிறது. ஒவ்வொரு உயிரும் உருவாகும் போதே இதற்கான மென்பொருளும் ஆழ் மனதில் பதிக்கப்படுகின்றன. ஆனால், தீவிர சிந்தனைகள், மனக் கவலை, பதட்டம், மன அழுத்தம், மன உளைச்சல், போன்றவற்றாலும் மற்றும் தூசு, புகை கலந்த காற்றைச் சுவாசிப்பதாலும் நமது சுவாச மண்டலம் பாதிக்கப்படுகிறது. இதனால் மூக்கடைப்பு, சுவாசப்பை சுருக்கம் போன்ற



சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, முதலாவதாக எப்பொழுதும் சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் சூழ்நிலைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

## யோகப் பயிற்சி

யோகப் பயிற்சியில் இருக்கும் நாயகனே பிராணாயாமம் எனும் மூச்சுப் பயிற்சியாகும். இன்றைய மனிதனுக்கு மிக மிக அவசியமானதும் தவிர்க்கக் கூடாததுமாகும்.

ஒரு நாளைக்கு 15 நிமிடம் பிராணாயாமம் செய்துகொண்டுவந்தாலே மிகவும் உயர்ந்த நன்மைகளைப் பெற முடியும். இதன்மூலம் உடல் மிகுந்த உயிர்ச் சக்தியைப் பெற்று சுகம் அடையும். இதன்மூலம் சாதாரண மனிதனது சிந்தனை மற்றும் கற்பனை வளமும் சிறப்பான வழிகளில் அதிகரிக்கும். இவ்வாறு 24மணி நேரம் உயிர்வாழும் ஒரு நாளில் 15நிமிடம் கிடைக்கவில்லை என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று சொல்வது எனக்கு ஆரோக்கியமாக வாழ விருப்பமில்லை என்பதற்குச் சமம். மற்றும் ஒரு நாளில் உலக மக்கள் அனைவருக்கும் 24மணி நேரம்தான் இருக்கிறது. அந்த 24மணி நேரத்தில் நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ அதைச் செய்கிறீர்கள் அவ்வளவுதான். அப்படியென்றால் ஒரு விடயத்தை அறிந்துகொள்ளுங்கள். ஒரு நாளில் 15நிமிட பிராணாயாமப் பயிற்சிதான் அன்றைய மற்ற எல்லா விடயங்களிலும் முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அறியாமையை இந்த இடத்தில் உடைத்தெறிவது அவசியம். இவ்வாறு காற்று எவ்வளவு முக்கியமானது என்பது பற்றித் தெரிந்துகொண்டீர்கள்.

தெய்வப் புலவர் திருக்குறளில் மருந்து எனும் அதிகாரத்தில் முதலாவது குறளில்

"மிகினும் குறையினும்
நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

உடலில் வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற முறையே வாதம்-வாயு, பித்தம்-நெருப்பு, சிலேத்துமம்-நீர் என்கின்ற மூன்றையும் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை ஆயர்வேத வைத்தியத்தில் சித்தர்களால் கூறப்பட்டுள்ளது என்கிறார் திருவள்ளுவர்.

ஆகாயம்

ஐம்பெரும் பொருட்களில் சற்று நுணுக்கமானது ஆகாயமாகும். இந்த ஆகாயம் எனும் சக்தியை எமது முன்னோர்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டார்கள். ஆனால், பரிசோதனைமூலம் விஞ்ஞானிகள் கண்டறிந்து ஒரு நூற்றாண்டுதான் ஆகிறது. அண்டவெளி முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கும் மின் அணுக்கூட்டம்தான் ஆகாயம். இது இல்லாத இடமே இப்பிரபஞ்சத்தில இல்லை. இதைக் கண்டறிந்த பின்னர்தான் விண்வெளிப் பயணம், தகவல் தொழில்நுட்பம் எல்லாமே சாத்தியமாகியது.

மனிதனில் உடல் முழுவதும் வெற்றிடமாக இருப்பதுடன் மனமாகவும், எண்ணங்களாகவும், சிந்தனைகளாகவும் இந்த ஆகாய சக்தியே இருக்கிறது. மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக காற்றுடன் கலந்து சுவாசத்துடன் பிராண சக்தியாக உடலுக்குக் கிடைக்கிறது. இந்த பிராண சக்தியை உடலுக்கு அதிகமாகக் கிடைக்கச்செய்யும் பயிற்சியே பிராணாயாமம் ஆகும். இதுபற்றி பின்னர் விரிவாக நோக்குவோம்.

தொடரும்.

■ ■ ■

# தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு

- சி. சிவசேகரம் -

'தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு' என்னும் என்னும் நூல் சி. சிவசேகரம் அவர்களால் எழுதப்பட்டு எக்ஸில் வெளியீடாக 1994ல் வெளிவந்தது. இப் புத்தகம் எமக்கும் இன்னும் கட்டுரையாளர்களுக்கும் பயனளிக்கும் என்ற நோக்கில், சிறுசிறு பகுதிகளாக வெளியிட 'தாய் வீடு' தீர்மானித்துள்ளது.

**அறிமுகம்**

பழந்தமிழுக்குத் தரிப்புக் குறிகள் தேவைப் படவில்லை. இன்றுந் தரிப்புக் குறிகளின் துணையின்றித் தெளிவாகத் தமிழில் எழுத முடியும். ஆயினும் தரிப்புக் குறிகளின் துணை யின்றித் தமிழில் எழுதப்படும் எல்லா விஷயங் களையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது.

தமிழ் அயலிலிருந்து பல விஷயங்களைச் சுவீகரித்துள்ளது. இவற்றின் விளைவாக அதன் ஆற்றல் மிகவும் அதிகரித்தது. சிக்கலான புதிய வாக்கிய அமைப்புக்கள் தமிழிற் சாத்தியமாயின. சிக்கலான புதிய வாக்கிய அமைப்புக்கள் கருத்துக் குழப்பத்திற்குக் காரணமாக இடமேற்பட்டது. இத்தகைய குழப்பங்களைத் தவிர்க்கத் தரிப்புக் குறிகள் தமிழுக்கும் அவசியமாயின. இத் தரிப்புக் குறிகள் தமிழர் தமிழுக்காகத் தோற்றுவித்தன வல்ல. நவீனத்துவம் தமிழுக்கு அறிமுகஞ் செய்த பலவற்றைப் போன்று தரிப்புக் குறிகளும் ஆங்கில வாயிலாகவே தமிழை வந்தடைந்தன.

ஆங்கிலவாயிலாக நாமறிந்த சொற்களைத் தமிழில் எழுதுகையில் நாமறிந்த ஆங்கில ஒலியையொட்டியே எழுதுகிறோம். அவ்வாறே ஆங்கில மூலம் நாமறிந்த தரிப்புக்குறிகளை யும் ஆங்கில நடைமுறையையொட்டியே பயன்படுத்த முற்பட்டோம். ஆங்கிலச் சொல் உச்சரிப்புக்களிற் போலன்றி, ஆங்கில எழுத்திற் தரிப்புக்குறிகள் எவ்வாறு பயன்படக் கூடும் என்பதற்குத் தெளிவான வழிகாட்டல் கள் உண்டு. பெருவாரியான ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வழிகாட்டல்கள் குறிப்பிடத்தக்க ஒருமையுடன் பயன்படுகின்றன என்று நம்புகிறேன். ஸ்பானிய மொழியில் வினாக்குறி பயன்படும் முறை விலகல்கட்கு ஒரு உதாரணமெனினும், அடிப்படையான வேறுபாடு என்று அதிகம் இல்லை.

தமிழிற் தரிப்புக்குறிகளின் பிரயோகம் பற்றி இங்கு தரப்படும் விளக்கங்கள் மரபுசார்ந்த மொழியின் அடிப்படையில் எழுதப்படவில்லை. சமகால எழுத்தின் அடிப்படையில் ஆக்க இலக்கியத்தையுங் கருத்திற் கொண்டே இவ் விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இக் கட்டுரையின் மொழிநடையிலும் மரபு மீறப் படுகின்றது. இம் மீறல்கள் சமகால மொழியின் முனைப்பையுந் தேவையையும் கருத்திற் கொண்டே நேர்ந்துள்ளன.

தரிப்புக்குறிகளில் முழுத்தரிப்பும் (.) வினாக் குறியும் (?) வியப்புக்குறியும் (!) எப்போதுமே வாக்கியங்களின் முடிவில் வருவன என்பது பொதுவான ஒரு நியதி. மேற்கோட் குறிகளில் ஒற்றை மேற்கோட்குறி (' ') இரட்டைமேற்கோட்குறியினின்றும் (" ") வேறுபட்ட முறை யிற் சமகால ஆங்கிலத்திற் பயன்படுகின்றது. அடைப்புக் குறிகளின் வேறுபட்ட வடிவங்கள் வெவ்வேறு தேவைகட்காகப் பயன்படுகின்றன. வளைவான அடைப்புக்குறியே () பரவலான பாவனையில உள்ளது. சதுரஅடைப்புக்குறி [ ] விசேடமான தேவைகட்குப் பயன்படுகிறது. நெடுந்தரிப்பு (;) குறைவாகப் பயன்படும் ஒரு அடையாளம் என்பதால் அதன் பாவனை பற்றிய தெளிவீனம் உண்டு. விளக்கக் குறி (:) பற்றிய நிச்சயமின்மை குறைவாயினுந் தமிழில் இது நெடுந்தரிப்புடன் குழப்பப்படுவதைக் காண முடியும். பல வேறு தேவைகளை நிறைவு செய்யும் ஒரு கருவியாக உள்ள குறுந் தரிப்பே (,) ஆங்கிலத்தில் அதிகமாகப் பயன் படும் தரிப்புக் குறியாகும். தமிழில் இதன் பிரயோகத்திலுள்ள தெளிவீனங்களுக்கு இக் குறியின் பன்முகப் பயன்பாடு ஒரு முக்கிய காரணமாகும்.

ஐயத்திற்கு இடமே இருக்கக்கூடாத பிர யோகத்தையுடைய வினாக்குறி, ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளில் அடிக்கடி தவறாகப் பாவிக்கப்படுகிறது. வாக்கியங்களின் நடுவில் இதை நாம் அடிக்கடி காணலாம். வியப்புக் குறியும் தேவையின்றிப் பயன்படுவதுண்டு. இதன் துர்ப்பிரயோகத்தைக் கொட்டை எழுத்துத் தலையங்கங்களில் அதிகங் காணலாம். இத்தவறுகள் நிவர்த்திக்க எளியன. எனவே முதலில் வாக்கியங்களின் முடிவில் வரும் குறிகளை முதலிற் பார்ப்போம்.

## முழுத்தரிப்பு அல்லது புள்ளி (.)

ஒரு வாக்கியம் கேள்வியாகவோ விளிப்பாகவோ வியப்பைக் குறிப்பதாகவோ அமையாத விடத்து அதன் முடிவில் முழுத்தரிப்பு இடப் படும். கீழ் வரும் உதாரணங்களைக் கவனிக் கவும்.

> நேற்று வந்தது இன்று வரவில்லை
> நேற்று வந்தது. இன்று வரவில்லை

> விழுந்து கிடந்தது மான் கொம்பு.
> வளர்ந்து திரிந்தது மாடு.
> விழுந்து கிடந்தது மான். கொம்பு
> வளர்ந்து திரிந்தது மாடு.

> மரக்கிளைகள் ஆடின காற்றில். மலரிதழ்கள் பறந்தன.
> மரக்கிளைகள் ஆடின. காற்றில் மலரிதழ்கள் பறந்தன.
> மரக்கிளைகள் ஆடின காற்றில் மலரிதழ்கள் பறந்தன.

முதல் உதாரணத்தில் முழுத்தரிப்பு இடப்படு வதோ விடப்படுவதோ சொல்லப்பட்ட விஷயத்தை மாற்றி விடுகிறது. நேற்று வந்த ஒன்று இன்று வரவில்லை என்பதும் ஏதோ ஒன்று நேற்று வந்தது ஆனால் இன்று வர வில்லை என்பதும் வராத பொருளை வெவ் வேறு விதமாக அடையாளம் காட்டுகின்றன. இரண்டாம் உதாரணத்தில் முழுத் தரிப்பு வருகிற இடம் இரண்டு வாக்கியங் களையும் மாற்றி விடுகிறது. மூன்றாவதில் முதல் முழுத்தரிப்பை இடுகிற இடத்தை மாற்றியும் அதை இடாமலும் கருத்தை மாற்ற முடிகிறது. 'மரக்கிளைகள் ஆடின காற்றில்' என்ற சொற்றொடர் ஒரு வசனமாகும் போது, வசன முடிவில் வரவேண்டிய வினைச் சொல்லான 'ஆடின' வசன நடுவில் வருகிறது. இது விரும்பத்தக்கதோ இல்லையோ மொழி வழக்கில் இத்தகைய வாக்கிய அமைப்புக் கள் இருக்கின்றன.

மரபுத் தமிழில் ஒரு வாக்கியத்திற்கு ஒரு வினைச் சொல்லே இருக்க முடியும். அது தோன்றா வினையாகவும் இருக்கலாம். 'இந்த மரம் பச்சை' என்ற வாக்கியத்தில் 'ஆகும்' என்ற வினைச்சொல் 'பச்சை' என்ற சொல்லின் பின் தோன்றாது நிற்கிறது. புதிய எழுத்து நடைகள் உருவாக்கும் பிரச்சனைகளின் தீர்வுக்குத் தரிப்புக்குறிகளின் கவனமான பிரயோகம் உதவுமெனினும் கவனமான சொற் பிரயோகமும் வாக்கிய அமைப்பும் முக்கிய மானவை. புள்ளிக்கு வேறு பயன்களும் உள்ளன.

எண்களின் தசம பின்னத்தைக் காட்டவும் திகதியின் நாள், மாத, வருட அலகுகளையும் பணத்தின் பெரிய, சிறிய அலகுகளையும் பிரித்துக் காட்டவும் புள்ளியிடப்படுகிறது. உதாரணங்கள்: 1.5 மீற்றர் உயரம் ; 01.05.1993; மாலை 6.30 அல்லது 18.30 மணி; விலை ரூபா 99.99.

சிலவேளைகளில் ஒரு பட்டியலை அடையா ளங்காட்டும் எண்கட்கும் எழுத்துக்கட்கும் பின் புள்ளியிடப்படுகிறது. இது பட்டியலை அடையாளங் காட்டும் எண்ணையோ எழுத் தையோ பட்டியலில் உள்ள விஷயத்துடன் குழப்பாதிருக்க உதவும். உதாரணம்: அ. கட்டுரைத் தலைப்பு; ஆ. கட்டுரையாளரின் பெயர்; இ. கட்டுரையின் சுருக்கம்.

சொற்களைச் சுருக்கி எழுதும்போது, அவற் றின் முடிவிற் புள்ளியிடப்படும். ஆங்கிலத் தில் ஒரு சுருக்கப்பட்ட வடிவம் சொல்லின் கடைசி எழுத்தை உள்ளடக்குமாயின், சில வேளை, புள்ளியிடப்படுவதில்லை. புள்ளி இடுவதோ இடாமல் விடுவதோ வழமைக் கேற்பவே செய்யப்படுகிறது. புள்ளி, ஒரு சொல் சுருக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாகக் காட்டுகிறது.

இவ்விஷயத்தில் ஆங்கில முறையைத் தமிழுக்கு நீடிப்பது அப்படியே சாத்திய மில்லை. ஏனெனில், தமிழின் எழுத்துமுறை ஆங்கிலம் போன்று தனி ஒலியன்களின் குறியீடுகளானதல்ல. எனவே, ஒரு சொல்லின் முதலெழுத்தும் இறுதியெழுத்தும் வரும் சுருக்கப்பட்ட வடிவங்கள் தமிழ் வழக்கில் அதிகமில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரையும், இந்நூற்றாண்டின் முற்பகுதியிலுங் கூட, இத்தகைய சுருக்கப்பட்ட வடிவங்கள் சில, கையெழுத்துச் சுவடிகளிலும் அச்சிலும் இருந்தன. மேற்படி, அவர்கள் போன்ற சொற்களின் முதலாவது எழுத்தையும் இறுதி யெழுத்தையும் சேர்த்து இச்சுருக்கப்பட்ட வடிவங்கள் அமைந்தன. இன்று வழக்கிலுள்ள ஒரு உதாரணம், 'உதாரணம்' என்ற சொல்லைக் குறிக்கும் 'உ+ம்' என்ற வடிவ மாகும். இதன் முடிவிற் புள்ளியிட அவசிய மில்லை.

வழமை சார்ந்த சில உதாரணங்கள்: ஐ.தே.க.; ஜே.வி.பி.; ரூ. 99.99; திரு. சோம. லெட்சுமணன்; ஈ.வே.ரா.

சுருக்கப்பட்ட வடிவங்கள் வசனமுடிவில் வந்தால் மேலதிகமாகப் புள்ளி இடப்படுவ தில்லை. வேற்றுமை உருபுகளுடன் சுருக்கப் பட்ட வடிவம் இணையும் போது கடைசிப் புள்ளி தவிர்க்கப்படலாம். உதாரணம்: எழுபத் தேழில் ஜே.வி.பியின் வளர்ச்சிக்கு உறு துணையாக நின்ற கட்சி யூ.என்.பி யாகும். இங்கு ஜே.வி.பி., யூ.என்.பி. என்ற சுருக்கங் களின் முடிவிலான புள்ளிகள் தவிர்க்கப்பட் டுள்ளன. புள்ளியைத் தவிர்த்தல் தெளிவீனத்திற்கு வழிகோலுமாயின் அதைப் பேணல் அவசியமாகலாம். உதாரணமாக, 'அ.நா.கவின் மிக்க பாங்கான கட்டுரை' என்ற சொற் றொடரை அ.நா.க. என்பவரது பாங்கான கட்டுரையென்று கொள்வோமா? அல்லது, அ.நா. என்பது கவின் மிக்க பாங்கான கட்டுரை என்போமா?

'அ.நா.' என்ற தொடரின் பின் இடைவெளி வரின் பின்னைய பொருள் மட்டுமே கொள் ளப்படலாம். தமிழ் எழுத்திலும் அச்சிலும் வரும் தவறுகளைக் கணிப்பிற் கொண்டால் அ.நா.க. என்பவருடைய கட்டுரை என்ப தைத் தெளிவாக்க விரும்புகிற ஒருவர் 'க' என்ற எழுத்தின் பின்னும் புள்ளியிடுவது தகும்.

ஒரு வாக்கியத்தை மேற்கோள் காட்டும் போது நீளங்கருதி அதில் ஒரு பகுதி விடப் பட்டால் மூன்று புள்ளிகளால் அதை அடையாளம் காட்டலாம். விடப்பட்ட பகுதி வாக்கிய முடிவில் வந்தால் நான்கு புள்ளி கள் வரும். எனவே ஒரு பந்தியில் ஒரு வாக்கியமோ அல்லது அதன் கடைசிப் பகுதியோ விடுபட்டால் நான்கு புள்ளிகள் இடப்படும். உதாரணம்: "முயல் ஓடுவதைக் கண்ட ... மூடர்கள் அது குதிரைக்குஞ்சென்று ...."

■ ■ ■

**MODERN OFFICE FOR SALE OR RENT**

**Kennedy & Finch**

சந்திப்புக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன்

Real Estate, Law Office, போன்ற நிறுவனங்கள்

நடாத்தக்கூடிய அலுவலகம் விற்பனைக்கு அல்லது

வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:

416 439 7703


STRYKE 1
Security Solutions
உலகின் எப்பாகத்திலிருந்தும்
உங்கள் வியாபாரத்தை, வீட்டையோ
இலகுவாகக் கண்காணிக்கலாம்!
Free Installation
24h Monitoring
4 Color Cameras
Computer System
17" LCD Monitor
Cabling
1 Year Full Warranty
Setup and Installation
$1699.99
24h Monitoring
8 Color Cameras
Computer System
17" LCD Monitor
Cabling
1 Year Full Warranty
Setup and Installation
$2399.00
Security Camera System
Starting From
$999.00
Including Computer System
Setup and Installation
Easy Way To Monitor Your Business & Home From Anywhere In The World
NIGHT VISION UPGRADES $120.00
OUTDOOR UPGRADES $150.00
416-400-7860


Connectiong tutors & students in the GTA
BRILLIANT TUTOR @ YOUR HOME INC.
தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.
• SCIENCE
• CHEMISTRY
• PHYSICS
• BIOLOGY
• MATH
• CALCULUS
• ALGEBRA & GEOMETRY
• DATA MANAGEMENT
• ENGLISH
• FRENCH
EQAO Preparation
Call Kuna Today
Tel: 416-291-4684, 905-507-8470, 647-295-5862, Fax: 416.264.6306
E-mail: info@brillianttutor.com
Over 100 Tutors
We will visit your home
JK to GRADE 8 $80⁰⁰/MONTH
1 ON 1 OR GROUP
9 to University 2nd Year $90⁰⁰/MONTH
Over 1500 Students
79 Eastvale Drive, Markham, ON, L35 4R9
Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan
digi Media - 416-467-4952

# கனடாவிலும் மூட்டைப்பூச்சி

- அஞ்சலி -

மூட்டைப்பூச்சி மனிதனின் மட்டும் மிருகங்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதன் மூலம்தான் தம்மை வளர்த்து, உயிர்காத்துக் கொள்கின்றன. மிருகங்களில் வாழும் உண்ணிகள், மனிதர்களில் தங்கியிருக்கும் பேன்களைப் போல இன்னோர் உயிரினத்திலேயே தங்கி வாழாமல், மூட்டைப்பூச்சிகள் வெறுமே மெத்தைகளில், கதிரைகளில் வாழ்ந்து கொண்டு, உணவுத் தேவை ஏற்படின் மட்டும் மனிதனைத் தேடி வருகின்றன. மூட்டைப்பூச்சிகள் இரவில் தான் மிகவும் சுறுசுறுப்பாக ஓடித் தெரியும். ஒரு நுளம்பு கடித்தால் எப்படி இருக்குமோ, அதே போல் தான் மனிதனுக்கு மூட்டைப்பூச்சியின் கடியும் இருக்கும். அவை கடிக்கும் போது மனிதனுக்கு வலியிருக்காது. ஆனால் அந்த கடிபட்ட இடமானது சிறிய அளவில் சிவந்த, அரிப்பு எடுக்கக்கூடிய வீக்கமான இடமாக மாறிவிடும். ஆனால் இந்த மூட்டைப்பூச்சியின் கடியால் மனிதனுக்கு எந்தவொரு விதமான உடல், உயிர் ஆபத்தும் கிடையாது.

### மூட்டைப்பூச்சிகள் பரவும் விதம்


மூட்டைப்பூச்சிகள் பேன்களைப்போல் ஒரு மனிதனிலிருந்து இன்னோர் மனிதனுக்குத் தாவுவதில்லை. ஒருவர் இரவில் படுத்திருக்கும் பொழுது, ஒரு மூட்டைப்பூச்சி அந்த மனிதனின் தோலில் வாய் வைத்து ஒரு ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை இரத்தத்தை உறிஞ்சும். அப்பின்பு மெதுவே அந்த மனிதனை விட்டு விலகி, தனக்குப் பாதுகாப்பாக வசிக்கக்கூடிய இடத்தில் போய் அன்றைய இரவுக்கு பதுங்கிக் கொள்ளும். இவைகளுக்குப் பறக்கும் சக்தி கிடையாது. எனவே அதிகதூரம் போகாமல், மனிதர்களுக்குப் பக்கத்தில் வசிக்கக்கூடிய விதத்திலேயே தமக்கான இருப்பிடத்தை அவை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

அதிசயமான உண்மை என்னவெனில், இரத்தத்தை மட்டுமே உணவாகக் கொள்ளும் இம்மூட்டைப்பூச்சிகள் ஆகாரம் இல்லாமல் கிட்டத்தட்ட ஒரு வருடம் வரை வாழக்கூடிய அசாத்திய உடல் வலிமையைப் பெற்றிருக்கின்றன.

இவைகளை தொடர்மாடிக் கட்டடங்கள், வீடுகள், காப்பு முகாம்கள், விருந்தாளி விடுதிகள், மற்றும் கல்லூரி விடுதிகளிலும், மிகுதியாகக் காணலாம். இவை சமயங்களில் அணியும் ஆடைகள், நாம் சுமக்கும் பயணப் பொதிகள் முதலியவற்றிலும் தம்மை புதைத்துக் கொள்வதால், நாம் போகும் மற்றைய இடங்களுக்கும், தொற்றிக் கொண்டே வந்து, அந்த இடங்களைத் தமது புதிய இருப்பிடங்களாக்கிக் கொள்ளக் கூடியவை.

மூட்டைப்பூச்சிகளின் நடமாட்டம் குறையாமல் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே போவதற்கும் மேலதிகக் காரணங்கள் இல்லாமல் இல்லை. தற்கால, மூட்டைப் பூச்சிகளை அழிக்கவென கண்டு பிடித்திருக்கும், பிசின் போன்ற, மற்றும் இதர கிருமிகொல்லிகள், மூட்டைப்பூச்சிகளை அழிப்பதில் எந்தவித உபயோகத்தையும் திறம்படச் செய்வதில்லை. ஒருவர் இன்னோர் இடத்தை நாடிச் செல்லும்போது, கூடவே தன்வீட்டு விருந்தாளிகளான இந்த மூட்டைப் பூச்சிகளை, அவை முன்னர் இல்லாத இடங்களுக்கும் கொண்டு சென்று, தன்னையறியாமலே விநியோகம் செய்து விட்டு வந்து விடுவார்.

மூட்டைப்பூச்சிகளால் முன்னர் கூறியதுபோல, உடற், சுகதார அளவில் எந்தத் தீங்குகளும் இல்லை. ஆனால் அவை ஒரு தொடர் தொல்லை. அவை மனிதர்களில் தொற்றுநோய்களைப் பரப்புவதில்லை. ஆனால் அவை இரத்தம் உறிஞ்சிய பகுதியை மட்டும் நாம் தப்பித் தவறி, சொறிந்து விட்டோமானால், அவ்விடம் ரணமாகி விடக்கூடிய ஒரு அபாயம்உண்டு. ஆனால் எந்த மருந்துகளையும், பாவிக்காமலே, இந்த ரணமானது சில மணித்தியாலங்களிலோ அல்லது ஒரு நாளிலேயோ தாமாகவே மறைந்துவிடும். இதையும் மீறி இக்கடிகள் ஒரு சில தொல்லைகளைக் கொடுத்தாலோ அன்றில் சில காலம் மாறாதிருந்தாலோ, உடனடியாக உங்கள் மருத்துவரை அணுகி ஆலோசனை கேட்டல் நலம்.








மூட்டைப்பூச்சிகள் நம் வீட்டில் வாசம் செய்து கொண்டிருக்கின்றன என்பதை எப்படி இனங்கண்டு கொள்வது? மூட்டைப்பூச்சிகள் பெரும்பாலும் பகற்பொழுதில் தம் இருப்பிடம் விட்டு வெளியே நடமாடுவதில்லை. இவை தம் உணவு விநியோக தெரிவுக்குப் பக்கத்திலேயே பாதுகாப்பாக ஒளிந்து கொள்கின்றன. அதாவது மனிதன் வழமையாகப் படுக்கும் இடங்களுக்கு மிக அருகில் என்று கூறலாம். இவைகளுக்கென்று தனிப்பட்ட வசிப்பிடம் கிடையாது. ஆனால் வழமையில் இரண்டு, மூன்று மறைவிடங்களைத் தனது இருப்பிடமாக்கிக் கொள்ளும். மூட்டைப்பூச்சிகள் உங்கள் படுக்கைகளில் படையெடுத்திருப்பின், உங்கள் படுக்கை விரிப்புக்கள் கறைபடிந்து, கறுப்புப் பொட்டுக்களுடன் இருக்கும். இதை மெத்தை, தலையணை, தரை விரிப்புக்கள், ஆடைகள் முதலானவற்றிலும் அவதானிக்கலாம். இவையெல்லாம் என்ன கறைகள்? அவைதான் உங்கள் உடம்பிலிருந்து உறிஞ்சி எடுக்கப்பட்ட இரத்தமும், உங்களால் நசுக்கப்பட்ட மூட்டைப்பூச்சிகளின் வரைபடங்களுமாகும். உங்கள் உடலிலும் ஒரு வித்தியாசமான தோல் அமைப்பும் மற்றும் அவற்றின் உடலிலிருந்து வெளிப்பட்ட முட்டைகளின் நுண்ணிய கோதுகளையும் கூட சமயத்தில் காணலாம். இன்னோர் விடயம், அவைகளின் உடலிலிருந்து சுரக்கும் ஒரு திரவமானது கூட வீட்டுக்குள் ஒருவித வாடையைக் கொடுக்கும்.

இவை தங்கியிருக்கும் இடத்தின் சூட்சுமங்களை அறிந்து கொண்டால், இவற்றை அப்புறப் படுத்துவது சற்று எளிதாக இருக்கும். இங்கே கொடுக்கப் பட்டுள்ள இடங்களை முதலில் கவனமாக பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

ஏல்லாவித தளபாடங்களையும், முக்கியமாக படுக்கையறையிலுள்ள தளபாடங்கள், மெத்தைகள், மெத்தைகளைத் தாங்கும் பெட்டிகள் இவற்றை வெளியில் தூக்கிக் கொண்டு வந்து, பூச்சிகளை ஒழிக்கக் கூடிய மருந்தை அவற்றில் பிரயோகிக்க வேண்டும்.

கதிரைகளின் அடிப்பாகம், பின்புறங்கள், அப்புறம் கண்ணாடி மேசை இழுப்புக்களை வெளியே இழுத்துப் பரிசோதியுங்கள். ஆழகிய மின்சார மேஜை விளக்குகள் போன்றவற்றையும் இந்த இடத்தில் கவனிக்கத் தவற வேண்டாம்.

சுவற்றில் வெடிப்புக்கள் அல்லது இடைவெளி நுழைவுகள் இருப்பின் அவற்றையும் ஆராயுங்கள். சுவரில் படங்கள் மாட்டியிருப்பின் அல்லது சுவற்றை அலங்கரிக்க ஒட்டப்பட்டிருக்கும் அலங்கார, வண்ணக் காகிதங்கள் உரிந்திருந்தால் அன்றில் பிய்ந்திருந்தால், அதையும் கவனமாக ஆராயுங்கள். உங்கள் வீட்டில் மூட்டைப்பூச்சிகள் நடமாட்டம் இருப்பின், உடனே இதற்கு சரியானபடி வேலை செய்யும் நிறுவனங்களைக் கையோடு தொடர்பு கொள்வது நல்லது.

### மூட்டைப்பூச்சிகளை வீட்டில் வாசம் செய்ய விடாது தடுப்பது எப்படி?

அனாவசியமாகத் தூக்கி எறியப்பட்ட பொருட்களை வீட்டுக்குள் கொண்டு வர வேண்டாம். ஆடைகள், பெட்டிகள் போன்றவற்றை வெளியிலிருந்து கொண்டு வந்தால், அவற்றை முக்கியமாகப் பரிசோதிக்க வேண்டும். உங்கள் விருந்தாளிகள் யாரும் நாடுவிட்டு நாடு வந்திருந்தால், அவர்களின் உடமைகளையும் ஒரு கைபார்த்து விடுவது நல்லது. மூட்டைப்பூச்சிகள் ஆசியா, தென், மத்திய அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன. எனவே இப்பகுதிகளிலிருந்து விருந்தாளிகள் வரும் போது, கூடவே அவர்களுடன் இந்த மூட்டைப் பூச்சிகளும் இலவசமாகப் பயணம் செய்து, உங்கள் வீட்டை வந்தடைந்து விடக்கூடிய அபாயம் உண்டு.

மிகவும் சுத்தமான வீடுகள், விடுதிகளில் கூட மூட்டைப்பூச்சிகளின் ஆட்சியைக் காண

57ம் பக்கம் பார்க்க...

56ம் பக்கத் தொடர்ச்சி...

லாம். எனினும் தொடர்ச்சியாக வீட்டைச் சுத்தம் செய்வதன் மூலமும் மெத்தைகள் போன்றவற்றை vacuum செய்வதன் மூலமும் இவற்றைப் பரவவிடாது தடுக்கலாம். பொருட்களைக் குவியலாகவோ அன்றி நெருக்கமாகவோ வீடுகளில் அடைப்பதை நிறுத்துதல் நலம். பழைய பொருட்களை (second hand) வாங்கும் பொழுது அவற்றை உங்கள் வீடுகளுக்குக் கொண்டு வரும் முன், அவற்றை நிதானமாக ஆராய்ந்து, அவற்றில் பூச்சிகள் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உடைந்த, சேதமடைந்த வீட்டின் சுவர், கட்டடப் பகுதிகளைச் செவ்வனே திருத்திக் கொள்ளுங்கள். இதைத்தவிர வீடுகளிலுள்ள சாளரம், கதவு ஆகியவற்றில் இருக்கும் சிறு நுழைவுகள் மூலம் சிறிய பறவைகள், வெளவால்கள், இதர ஊரும் உயிரினங்கள் ஆகியன உள்ளே நுழையாதவாறு வீட்டைக் கவனியுங்கள். இம்மாதிரி உயிரினங்களுக்கு மூட்டைப்பூச்சிகளின் வரவு ஒரு பெரிய வரப் பிரசாதமாம். எனவே கவனியுங்கள்.

மூட்டைப்பூச்சிகளை இரசாயன மற்றும் இரசாயனம் கலக்காத முறைகளையும், கொண்டு அறவே ஒழிக்கலாம், அப்புறப் படுத்தலாம்.

## இரசாயனம் இல்லாத அணுகு முறை என்பது என்ன?


- ஊடைகள், கட்டில் விரிப்புக்கள், தலையணை உறைகள் போன்றவற்றை சோப்புப் பவுடர், மற்றும் சுடுநீர் கொண்டு சுத்தமாக அலசிக்கொள்ள வேண்டும்.
- மென்மையான ஆடைகளை பிளாஸ்டிக் பைகளில் கட்டி பத்திரமாக குளிர்பதனப் பெட்டியில் இரண்டு நாட்களுக்கு பதப் படுத்தி வையுங்கள். பூச்சிகள் அங்கேயே கொல்லப்பட்டு விடும்.
- படுக்கை, மெத்தை, அதைத் தாங்கும் பெட்டி இவற்றை அடிக்கடி vacuum செய்ய வேண்டும்.
- மெத்தையின் தைத்த மூலைகளில் ஒரு சிறு தூரிகையின் உதவி கொண்டு, நன்றாக அழுத்தித் துடைத்து, அதில் பரவியிருக்கக் கூடிய மூட்டைப்பூச்சிகளின் மற்றும் அவற்றின் முட்டைகள் போன்றவற்றை அப்புறப் படுத்துங்கள்.
- பஞ்சுகள் அடைக்கப் பட்ட விளையாட்டுப் பொம்மைகளை 30முதல் 45நிமிடங்கள் வரை உடை உலரப்போடும் இயந்திர சாதனத்தில் அடைத்து எடுங்கள்.

## இரசாயன முறைகொண்டு மூட்டைப் பூச்சிகளைக் கட்டுப் படுத்தும் முறை

- கடைகளில் spray, திரவ சாதனங்கள், தூசு அகற்றும் திரவங்கள் முதலியன கிடைக்கும். இதில் மூட்டைப்பூச்சியை ஒழிக்கக் கூடிய முறையான பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதை எப்படிப் பாவிப்பது என்பது பற்றி கொடுக்கப் பட்டிருக்கும் குறிப்புக்களை கவனமாகவும், மெதுவாகவும் படித்து, அதன் பாவனையின் தேவையை அறிந்து கொள்ள வேண்டும்.
- பெரியளவில் படையெடுக்கும் மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க, அல்லது பெரிய தொடர்மாடிக் கட்டடங்களில் இருக்கும் மூட்டைப்பூச்சிகளை ஒழிக்கத் தொழில் ரீதியான உதவியை நாடுவது தான் மிகவும் சிறந்த தீர்வாகும். ஆனால் கட்டிட நிர்வாக சட்டதிட்டங்களுக்கமைய அவர்களின் அனுமதியை முதலில் பெற வேண்டும். மூட்டைப்பூச்சிகளை கட்டுப் படுத்தும் நிறுவனங்கள் பெரும்பாலும் இரசாயனத் தடுப்பு வகைகளைத்தான் அதிகம் பயன் படுத்துவார்கள். எப்படியும் இரண்டு தடவைகளுக்கு மேற்பட்ட ஒழிப்பு முறைகளைப் பின்பற்றுவது நல்லது. இறுதியாக மஞ்சள் பகுதி தகவல் பகுதியில் உள்ள விளம்பரங்களைப் பார்த்தால், அதில் இம்மாதிரி நிறுவனங்களின் சேவைகளைப் பார்த்து அவர்களைக் கூப்பிடலாம் அல்லது www.pestcontrol-canada.com என்ற இணையதளத்தை ஒருமுறை அலசிப் பாருங்கள்.

■ ■ ■


N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான
சேவையால் பல
விருதுகளை பெற்ற
நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித
யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி
வகைகளையும் மிகவும் மலிவான விலையில்
பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9




www.PowerofSaleHome.com




some repairs needed

Warden & Lawrence



Detached Home
3 Bedroom
with complete Basement

Apex Creations - 416-297-0707






Suresh Sellathurai
Sales Representative
Dir. : 416.356.7330

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.

# குழப்பிய மனிதர் அலன் கீறின்ஸ்பான்

- ரதன் -


| Code Currency | fcu/CAD | fcu/USD |
|---|---|---|
| CAD Canadian Dollars | 1.0000 | 1.0022 |
| CNY Chinese Renminbi | 7.1685 | 7.1842 |
| EUR European Euros | 0.6724 | 0.6738 |
| INR Indian Rupees | 39.231 | 39.317 |

**Today's Exchange Rates: Thursday, January 31, 2008**

ஆலன் கிறீன்ஸ்பான் அமெரிக்க நிதி, பொருளாதார தலைவராக இருந்த பொழுது (chairman of the Board of Governors of the Federal Reserve) DOW 1929க்குப் பிறகு, ஒரு நாளில் மிக மோசமாக வீழ்ச்சியடைந்தது. அலன் பதவிக்கு வந்து ஒரு சில மாதங்களில் இது நடைபெற்றது. அன்று தொடங்கிய சரிவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இன்றைய அமெரிக்க பொருளாதார வீழ்ச்சிக்கு மிக பிரதான காரணங்களில் முக்கியமானது அலனை பதவியில் அமர்த்தியதே. அமெரிக்க பொருளாதாரம் முதலுக்கு நட்பானது. இதனால் உற்பத்திக்கும், தொழிலாளர்களுக்குமிடையிலான உறவு நேர் எதிரானது. எனவே சம்பள அதிகரிப்பு தவிர்க்க முடியாதது. இதனை சமாளிக்க வேண்டுமாயின் பொருள் விநியோகத்தை அதிகரிக்க வேண்டும். தேவை அதிகரிப்பு (Demand) இன்றி, பொருட்களை விநியோகிக்க முடியாது. அதிகரித்த பொருளை வாங்குவதற்கு மக்களிடம் பணம் தேவை. உருவாக்கினார்கள் கடன் அட்டைகள். இருக்கவே இருக்கின்றன கடன் அட்டைகள்! ஒன்றா, இரண்டா! சீனி வாங்குவதற்கும் கடன் அட்டைகள். வட அமெரிக்க மத்திய வர்க்க மக்கள் வாங்கும் சம்பளத்தில் 75 வீதத்தை கடனை மீள கட்டுவதில் செலவிடுகிறார்கள். தொடர்ச்சியாக கடனில் ஓட முடியாது. இதனை அமெரிக்கா ஒரு பொழுதும் திருத்த முற்படவில்லை. வாக்கு வங்கிகளுக்கு முதலீடு செய்பவர்கள் இந்த பெரும் நிறுவனங்கள். இந்த நிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதிலேயே அலன் போன்ற அரசு முகவர்கள் கவனஞ் செலுத்தினர். அலன் வீடு விற்பனையாளர்களுக்குச் சாதகமாக செயற்பட்டார். முதலாவது இவர் வங்கிகளை முறையாக கட்டுப்படுத்தவில்லை. வங்கிகளுக்குச் சாதகமான சட்டங்கள் உருவாக்கப்பட்டன. உதிரி கடன் வழங்கும் நிறுவனங்களின் இயங்கியலை சுதந்திரமாக்கினார். இவை யாரும், எப்படியும் கடன் பெறலாம், வீடு வாங்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தியது. நல்ல முடிவு. ஆனால் பொருளாதார வீழ்ச்சி, குறைந்த உற்பத்தி செலவிற்காக மூன்றாம் உலக நாடுகளை நாடியமை போன்றனவற்றால் பலர் வேலை இழந்தனர். முடிவு - வங்குரோத்து நிலை. Zero down payments or NINJA (No Income, No Jobs and Assets) loans விளைவை இன்றைய அமெரிக்கா அனுபவிக்கின்றது. பணப்புழக்கம் அதிகரித்தமையினால் வீடு வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்தது. விளைவு வீட்டு விலைகள் அதிகரித்தன. போலியான ஒரு பொருளாதார சூழலுக்கு மக்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதனால் லாபம் வீடு கட்டும் நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்குமே! இவர் மிகப் பெரிய நிறுவனங்களின் பங்கு விநியோகத்தை கட்டுப்படுத்தவில்லை. இதனால் பல நிறுவனங்கள் சுதந்திரமாக பங்கு விநியோகத்தை மேற்கொண்டன. இவர்கள், இதற்காக தவறான Forecast இனைப் பயன் படுத்தினர். பல கணக்காய்வு நிறுவனங்கள் மிகப்பெரிய நிறுவனங்களின் மோசடி



களுக்கு உதவி புரிந்தன. savings and loans, LTCM, new-technology shares, and subprime mortgages ஆகிய நான்கு முக்கிய வீழ்ச்சிகளுக்கு காரணகர்த்தாவாகின. சுவீடன், இங்கிலாந்து மத்திய வங்கிகள் முக்கிய பொருளாதார பிரச்சினைகளை அவதானத்துடன் கையாளுகின்றன. குறிப்பாக றியல் எஸ்டேட் பொருளாதாரத்தை மிகவும் கவனமாக கையாளுகின்றன. $4 trillion கடனில் அமெரிக்காவுள்ளது. 1.4 மில்லியன் அமெரிக்கர்கள் மருத்துவ காப்புறுதியினை இழந்துள்ளார்கள். வங்குரோத்து நிலையடைபவர்களின் எண்ணிக்கை 23வீதத்தை அடைந்து விட்டது. ஒரு தொழிலாளியை விட, நிறுவனத் தலைவர் 500மடங்கு அதிக சம்பளம் பெறுகின்றார். Fannie Mae (FNM.N: Quote, Profile, Research) CEO Daniel Mudd received $12.2 million, Canadian Imperial Bank of Commerce chief executive officer Gerry McCaughey made $9.4-million in 2006 Bank of Montreal said its CEO, Bill Downe, earned $5.83-million Ousted Sears CEO Aylwin Lewis will continue to receive $1 million Warner Music CEO Compensation $3.4M




அடுத்த 15வருடங்களில் 3.3மில்லியன் வேலைகளும், சுமார் 136 பில்லியன் டாலரையும் (சம்பளமாக) அமெரிக்கா சைனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு வழங்கவேண்டிவரும்.

## அலனின் பொருளாதார சிந்தனைகள்:

இவற்றைத்தான் இவர் நடைமுறைப்படுத்தினார்.

- அரசு நாட்டின் பொருளாதாரத்துக்கு சுதந்திரமளித்து, பொருளாதாரத்தை தன்னிச்சையாக விடுதல்.
- ஒரு தொழிலாளியின் மிகக் குறைந்த சம்பளத்தை அரசு தீர்மானிக்காமல், சட்டமியற்றாமல் விடுதல்
- தனியார், கூட்டுத்தாபன வரி விகிதங்களை குறைத்தல்
- அரச வரவு செலவும் சமனாக இருக்க வேண்டும். வரி குறைவால் வரவு குறையின், செலவையும் குறைத்தல்.
- வங்கிகளையும், முதலாளிகளையும், நிறுவனங்களையும் மிகக் குறைந்த கட்டுப்பாட்டுகளுடன் சுதந்திரமாக இயங்க விடுதல்
- நிதி நிறுவனங்களுக்கு எதிரான சட்டங்களை அகற்றல்
- பெற்றோலிய வரி, சமூக கொடுப்பனவு வரிகளை அமுல் படுத்துதல். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நடுத்தர வர்க்கத்தினரே.
- வட அமெரிக்க சுதந்திர வலயத்தினால் மெக்சிக்கோ பெரிதும் பாதிக்கப்பட்டது. அமெரிக்க நிறுவனங்களின் தேவைகளை திருப்திப்படுத்த ஏற்பட்ட தேவைகளுக்கு அமெரிக்க வங்கிகளிடம் பெற்ற அதி உயர் வட்டி விகிதத்தால் மெக்சிக்கோ பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியடைந்தது.
- அலன் 1981-1983 காலப் பகுதியில் சமூக பாகாப்பு நிதிய தலைவராக கடமையாற்றினார். இந்த நிதியத்தில் போதிய நிதி இல்லை எனக் கூறி, கொடுப்பனவுகளை மிகவும் குறைத்துவிட்டார். பின்னர் தெரிய வந்த உண்மை - தேவைக்கு அதிகமாக நிதியத்தில் நிதி இருந்தமை.
- இவரது காலப் பகுதியில் பெரிய நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தன. இதனால் நிறுவனங்கள் லாபமடைந்தன. பலர் வேலை இழந்தனர். அரசுக்குச் செலுத்தும் வரி குறைந்தது. (கனடாவில் இரு வங்கிகள் இணைவதற்கு ஏற்பட்ட முயற்சிகள் பல தடவைகள் தோல்வியில் முடிவடைந்தன)

| | கூட்டுத்தாபன வரி வீதம் | பொருளாதார வளாச்சி வீதம் | அதி உயர் சம்பளம் பெறுவோருக்கான வரி வீதம் |
|---|---|---|---|
| 1950 | 52 | 4.1 | 84-92 |
| 1960 | 52-48 | 4.4 | 91-70 |
| 1970 | 48-46 | 3.3 | 70 |
| 1980 | 45-34 | 3.1 | 50-28 |
| 1990 | 35-38 | 3.1 | 31-39.6 |
| 2000-2004 | 33 | 2.8 | 36 |

### இவரது பொருளாதார கொள்கைகளின் விளைவுகள்

- GDPக்கும் சம்பளத்துக்குமான விகிதம் 38 வருட வீழ்ச்சி
- Corporate after tax profit 1947க்குப் பின்னர் மிக அதிகம்
- 36 மில்லியன் அமெரிக்கர்கள் வறுமைக் கோட்டின் கீழ்
- உற்பத்தியில் ஈடுபடுவோரின் வீதம் வெறும் 11 வீதங்கள்
- நாட்டின் மொத்த உற்பத்தியில் 6வீதத்தை கடனாக, நிதித் தேவைகளுக்கென பெற்றுள்ளது.
- 400 பில்லியன் மொத்தக்கடன்
- 90வீதமான அமெரிக்கர் வாராந்தர சம்பளத்திலேயே நாட்களைக் கடத்துகின்றனர். மொத்த செல்வத்தின் 40வீதத்தை ஒரு வீத செல்வந்தர்கள் அனுபவிக்கின்றனர்.

அலன் செல்வந்தர்களுக்காக செயற்பட்ட யூத இனத்தவர். இதனால்தான் கிளின்டன் உட்பட்ட பலரது ஆட்சிகிளில் தன்னிச்சையாக செயல்பட்டு, அமெரிக்காவை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார். இன்று அமெரிக்க டொலரை விட யூரோ, கனடிய டொலர்கள் மதிப்பையும், அதிகளவு தேவையையும் பெற்றுள்ளன. வேலை வாய்ப்புக்கள் இந்தியா, சீனாவிற்குச் சென்று விட்டன. மதியிழந்து, பாய கொப்பின்றி அலைகின்றது அமெரிக்கா. கிடைக்காமலா போய்விடும் இன்னுமொரு ஈராக்? எப்படியெனினும், அமெரிக்கா, தானே தன்னை அழித்துக் கொண்டது. இனிமேல் தலை தப்புவதே கடினம். GOOD LUCK AMERICA.

| | Rank Name | Company | Total Comp ($thou) | 5-Yr Comp ($thou) | Mkt Val - Shares Owned ($mil) | Age | Efficiency Grade |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Reuben Mark | Colgate-Palmolive | 147,970 | 266,220 | 312.7 | 65 | C |
| 2 | George David | United Technologies | 70,527 | 138,901 | 68.5 | 62 | C |
| 3 | Richard S Fuld Jr | Lehman Bros Holdings | 67,682 | 284,478 | 365.6 | 58 | C |
| 4 | Henry R Silverman | Cendant | 60,023 | 264,927 | 197.8 | 63 | D |
| 5 | Dwight C Schar | NVR | 58,105 | 191,020 | 259.8 | 62 | C |
| 6 | Lawrence J Ellison | Oracle | 40,589 | 835,721 | 16,621.6 | 59 | B |
| 7 | Richard M Kovacevich | Wells Fargo | 37,842 | 104,822 | 104.0 | 60 | C |
| 8 | Howard Solomon | Forest Labs | 36,089 | 226,663 | 545.1 | 76 | A |
| 9 | James E Cayne | Bear Stearns Cos | 33,925 | 139,008 | 580.6 | 70 | D |
| 10 | Todd S Nelson | Apollo-Education Group | 32,812 | — | 0.2 | 45 | — |
| 11 | R Lawrence Montgomery | Kohl's | 30,234 | 58,545 | 31.6 | 54 | — |
| 12 | Ray R Irani | Occidental Petroleum | 29,346 | 70,053 | 22.7 | 69 | C |
| 13 | Terry S Semel | Yahoo | 26,007 | 27,737 [4] | 48.9 | 61 | — |
| 14 | Lee R Raymond | ExxonMobil | 25,172 [7] | 111,267 | 85.5 | 65 | D |
| 15 | Stephen F Bollenbach | Hilton Hotels | 25,105 | 36,984 | 12.8 | 61 | F |

Source : Greenspan's Fraud – Palgrave Macmillan by R.Batra
Statistical Abstract of the USA
Achieving Price Stability: A Symposium Sponsored by the Federal Reserve Bank of Kansas City by Thomas M. Hoenig,
Age Of Turbulence by Alan Greenspan
Life of Us (U.S)

■ ■ ■


tvi
Tamil Vision Int.
உங்கள் tvi ல்
To order Call
Tel: 416-593-9300 Ext. 400
Or Toll-free: 1-888-836-6834
www.tamilvision.tv
ROGERS
Channel: 621
Tvi + Basic Channels for only $42.99
Tvi 50% off for 2 months
Bell ExpressVu
Channel: 707
Tvi + Basic Channels for only $54.99
2 months free
tvi ON LINE DEMAND
www.tviondemand.com
உங்கள் விருப்பம்
சனி ஞாயிறு தினங்களில் காலை 11:30க்கு
அரும்புகள்
புதன்கிழமைகளில் இரவு 6:30க்கு
வெள்ளி (FEB0808) இரவு 9:00 மணிக்கு
திபாவளி


Whatever your dream is ...
Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.
• Up to 100% financing on purchase
• Discounted interest rates O.A.C
• Mtg. computer analysis - amortization schedules
• Second mortgages guaranteed for very low interest rates
• Debt Consolidation to 100% of value
• Mortgage investment opportunities
• Bank refusals restructured
• Real estate project (acquisition + development + construction)
• Residential, Commercial & Industrial
LOOKING AFTER YOUR BEST INTEREST!
SHANJITH (SHAWN) SATKUNANANTHAN
Senior Mortgage Consultant (AMP)
RAJANI SHANJITH
Mortgage Consultant
CENTUM Advance Realty Inc
647.281.1315 (416).290.1200
80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

வெகுசன ஊடகவியலின் தாரகமந்திரம்

TAMIL ONE

தமிழ் ஒளிபரப்பு துறை வரலாற்றின்
புதிய அத்தியாயங்களைப் புரட்டும்
முதல்த்தர தொலைக்காட்சி

காணத்தவறாதீர்கள்

கால ஓவியர்கள்

மாதத்தின் முதலாம் மூன்றாம் சனிக்கிழமைகளில்
மாலை 5.30 மணிக்கு

KIDS ZONE

ஞாயிறு மாலை 4.30 மணிக்கு

TAMIL ONE
24 மணிநேரமும் உங்களுடன்...
இணைப்புகளுக்கு 416-817-1977

TR one
அதிரவைக்கும் அலைவரிசை
தொடர்புகளுக்கு 416-299-0118

# M and M CONSULTANTS

**Serving 22years in Canada**
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathurst & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# SERANDIBTRAVEL1

## AROUND THE WORLD WITH SERANDIB




Serandib Travel1

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# சக்கரை வியாதியும் சரியாகும்...



திரு மகேசன்

- உல்லாசப் பயணக் கட்டுரை -

கேரளாவின் களியாட்டங்களையும் உணவு வகைகளையும் ஆலய தரிசனங்களையும் போட்டுத்தள்ளி, எங்களையெல்லாம் ஆசை யூட்டும் நீங்கள் 'எழுந்தால் இருக்க முடியாது. இருந்தால் எழமுடியாது' என்று வயோதிப காலத்தில் படும் அல்லல்களைத் தீர்க்க கேரளாவில் வழி இருக்கிறதாமே அதை எழுதித் தள்ளுங்கள் என்று பலபேர் அவசரப்பட்டுத் தொல்லை கொடுத்தார்கள். 'சர்க்கரை ஏறி நிற்கிறது, இந்த கேட்டுக்கை கேரளா போய் இனிப்பா சாப்பிட முடியும் என்று துடித்தவர்களுக்கு ஒரு வழிகாட்டு தலாக, கேரளாவின் புகழ்பெற்ற மூலிகை வைத்தியத்தை பெறுவதற்கு ஒழுங்குசெய்து அங்கே சென்று மூலிகை வைத்தியம் மூலம் புதுரத்தம் பாய்ச்சி, கேரளாவின் லட்டை (லட்டு) எல்லாம் அழவைத்து வந்தவர்கள் கதையைச் சொன்னபோது வாயில் கை வைத்தவர்கள் ஏராளம்.

ஏனோ கேரளா மண்ணுக்கு பெண் முதல் எல்லாமே அழகுமயம் தான். அதுபோல் அவர்களின் மருத்துவ முறையிலும் ஏதோ ஒரு அழகு கொட்டிக் கிடப்பதென்னவோ உண்மைதான். உலகெங்கும் சென்றாலும் எந்த ஒரு வைத்தியசாலையிலாவது நீங்கள் நிச்சயமாக கேரள மண்ணைச்சேர்ந்த பெண் நிச்சயமாக மருத்துவ மாதாகத் தொழில் செய்வதைக் காண்பீர்கள். அந்த வகையில் கேரள மண்ணுக்கு மருத்துவ உலகில் மாற்ற முடியாத நோய்களையும் மாற்றும் சக்தி இருப்பதென்பது உண்மை. அந்த வகையில் இன்றைக்குக் கேரளா நோக்கிப் போவோர்களில் எம்மைவிட வெள்ளை இனத்தவரே அதிகம். நிச்சயமாக தமது நோய்க்கு கேரளாவில் மருந்துண்டு என்ற நம்பிக்கையோடு 'அவ்விட பூமி'யில் குவியும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

இந்த வகையில் நம்மால் இங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டு Wheel chair இல் போய் விசிறி நடையில் திரும்பிவந்து தமது மகிழ்வைப் பகிர்ந்தவர்கள் பலநூறு.

கேரளாவின் அருமையான காலநிலை, இயற்கை மூலிகைகள் நிறைந்த வனப் பிரதேசம் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஆயர்வேத மருத்துவத்திற்கு இந்தியாவில் கேரளாவே முதன்மைபெற்ற மாநிலமாக மதிப்பிடப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் சேவைக்குரிய அர்ப்பணிப்பு எங்கேயும் உலகில் காணமுடியாத ஒன்று. ஆயர்வேத மருத்துவத்தின் ஆரம்பம் இன்றுவரை கணக்கிடப்படவில்லை. வாத, பித்த, கபம் மூன்றும் ஒரே நிலையில் வைத்திருந்து உடலைப் பாதுகாக்க வழி காட்டுவதே ஆயர்வேதம். உங்களின் உடலில் இருக்கும் தேவையற்ற அமிலங்களை வெளியேற்றி, நோய் எதிர்ப்புத் தன்மையைக் கூட்டி உடல்நிலையைச் சரிசெய்வதில் ஆயர்வேதம் முன் நிற்கிறது. கேரளாவின் முன்னோடிகளாக வாரியார் பரம்பரையில் தோன்றியவர்களே இத் தொழிலில் முன்னிலை வகிக்கின்றார்கள்.

ரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட இந்த 5000 ஆண்டுகளுக்கு முந்திய இந்த வைத்திய முறையை 'வாரியார்' வம்சாவழியினர் இன்னமும் புனிதமான முறையில் கையாள்வதை நீங்கள் நேரில் உணர்வீர்கள். இதனால் தான் ஆண்டவன் என்று கருதப்படும் தன்வந்திரி எனப்படும் ஆயர்வேதத்தின் கடவுளுக்கு முதன் முதலில் விளக்கேற்றிய பின்பே எண்ணெய் தொட்டு தமது பணியை ஆரம்பிக்கின்றனர். தன்வந்திரி மந்திரமானது பல நோய்களைத் தீர்க்கும் வல்லமையுள்ளது என்பதை பல வெளிநாட்டு ஆய்வாளர்களும் தமது ஆராய்ச்சி மூலம் கண்டறிந்துள்ளார்கள். நாம் கேரளாவில் தங்கி சிகிச்சை பெற்றவர்களுக்கு உதவிசெய்த நேரத்தில் பலர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டதை எம்மோடு பயணித்த பலரும் கண்டனர்.

உங்களின் கைநாடித் துடிப்பைக் கொண்டும், நாக்கு, கண், நகங்கள், முகம், தோல் இவற்றைப் பார்த்தும் ஒரு அட்டவணை தயாரிக்கின்றனர். பின்னர் குரல், சிறுநீர், சுவாசம் இவற்றைக் கொண்டு உங்கள் உடல் நிலையை எப்படிச் சமன்செய்யலாம் என்று ஆராய்கின்றனர்.

கோட்டக்கல் ஆரிய வைத்தியசாலை (Kottakkal Arya Vaidya Sala) இந்தியாவின் முதன்மைபெற்ற ஆயர்வேத வைத்தியசாலையாகும். 1902ம் ஆண்டு கோட்டக்கல்லில் இவ் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. அமரர் வைத்தியரெத்தினம் வாரியார் அவர்களால் ஒரு கிராமத்து வைத்திய சாலையாக இது ஆரம்பிக்கப்பட்டது. இன்று உலகளாவிய ரீதியில் வளர்ந்து உண்மை



மருத்துவத்தை பயபக்தியோடு வழங்கி நிற்கிறது. இதனால்தான் வாரியார் என்றவுடன் ஒரு மதிப்பும் மரியாதையும் கேரளா மண்ணில் மட்டுமல்ல, உலகெங்கும் (கனடா உட்பட) வழங்கப்படுவதோடு, 'உலகுக்கு உதவப் பிறந்தவர்கள்' என்றும் கேரளத்தவர் அழைக்கப்படுகின்றார்கள்.

இம்மருத்துவ சாலைகள் கொச்சின், டெல்லி, கோட்டக்கல் என்று மூன்று இடங்களிலும் சேவை செய்தாலும், நாம் முன்னர் சொன்னதுபோல் கேரளாவின் கோட்டக்கல் சகல வளங்களும் நிறைந்திருப்பதோடு, சீரான காலநிலையிலும் முன்னிலை வகிக்கிறது.

இரண்டு மிகப் பெரிய மூலிகை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் சிறந்த மருத்துவர்களின் கீழ் கண்கொத்திப் பாம்பாகக் கண்காணிக்கப்படுகிறது. காட்டிலிருந்து கொண்டுவரப்படும் மிகச் சிறந்த மூலிகைகள் மிகுந்த பரிசோதனைக்குப் பின்பே உபயோகப்படுத்தப்படுகிறது.

1933ஆம் ஆண்டு ஸ்ரீ பீ.எஸ்.வாரியார், இந்தியாவின் கவர்னர் ஜெனரலால் 'வைத்திய ரத்னா' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவரால் எழுதப்பட்ட 'அட்டாங்க சரீரம்' எனப்படும் நூல் தேசிய வைத்தியர்களின் சம்மேளனத்தால் 1932இல் விசேட விருது பெற்றதாகும். தனது உயிலில், தனக்குப் பின் வாரியார் அவர்கள் தமது பரம்பரையைச் சேர்ந்த ஏழு பேரை ஒன்று சேர்த்து வைத்தியசாலையை ஒரு மக்கள் சேவை நிலையமாக மாற்றினர். இவரால் நிறுவப்பட்ட மூலிகைத் தோட்டம் இன்னமும் பல ஏக்கர் பரப்பளவில் வளர்ந்து நிற்கிறது.

இச்சேவை மூலம் பெறப்படும் பணத்தில் கோட்டக்கல் ஆரிய வைத்தியசாலை நிர்வாகக் குழுவைச் சேர்ந்த ஏழுபேரும் எந்தப் பணமும் பெறக்கூடாது என்பது விதிமுறை மட்டுமல்ல இன்னமும் அம்முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

சென்னை – மங்களூர் இரயில்வே பாதையில் திருவூர் என்ற இடத்தில் இவ்வைத்தியசாலை அமைந்துள்ளது. Kozhikode விமான நிலையம் 28 கி.மீ.தொலைவில் உள்ளது. இங்கிருந்து செல்பவர்களுக்கு மிகுந்த வசதியாகும். கோட்டக்கல் கொச்சினிலிருந்து 165 கி.மீ.இலும் கோயம்புத்தூரிலிருந்து 160 கி.மீ.இலும் கோழிக்கோட்டிலிருந்து 48கி.மீ.இலும் அமைந்துள்ளது. பாலக்காடு மாவட்டத்திலேயே 500க்கு மேற்பட்ட மூலிகைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த வைத்தியசாலையில் 160 அறைகள் உள்ளன.

பஞ்சகர்மா, சினேகபானம் தரா (Snehapanam Dhara) ஓர்வாக்கதரா, சர்வாங்கதரா, பிளிச்சில், நவரக்க சிரோவஸ்தி, பிச்சு, சிலோலேபா எனப்படும் வகைகள் அடங்கிய மருத்துவ முறை பின்பற்றப்படுகிறது. பஞ்சகர்மாவில் மிக விசேட வைத்திய முறையான கசாயவஸ்தி, சினேகவஸ்தி, நாஸ்யம், வீரச்சாணம், ரக்தமோக்சம் ஆகியவை அடங்கும்.

## பிளிச்சில்

பிளிச்சில் எனப்படுவது, நோயாளி ஒரு மரத்தாலான - வாழையிலை போன்றது – மட்டையில் படுக்கவைக்கப்படுவார். பின்னர் துணியில் முடிப்பட்ட பொட்டலத்துள் இளஞ்சூட்டில் எண்ணெய் தோய்த்தெடுக்கப்பட்டு, ஓரளவு உயரத்தில் இருந்து நோயாளியின் உடலின்மீது சொட்டுச் சொட்டாக விழவைக்கப்படுகிறது. இளம்சூட்டு எண்ணெயானது உடம்பெங்கும் பரவத் தொடங்கியதும் நான்குபேர் சுற்றியமர்ந்து மிக மெதுவாக எமது உடலை மசாஜ் செய்யத் தொடங்குவர். வாதம், ஆதரைற்றீஸ், முதுகு நோ போன்றவற்றிற்கு இச்சிகிச்சை அளிக்கப்படுகிறது. இக்கட்டுரையை நான் உங்களுக்கு வரைவதற்கு இச்சிகிச்சையே எனக்கு உதவியது. கழுத்துக் கீழேதான் இச்சிகிச்சை வழங்கப்படுகிறது. நோயாளியின் பலத்திற்கு ஏற்ப சிகிச்சை ஒரு மணி அல்லது ஒன்றரை மணிநேரம் நீடிக்கும். எந்த சிகிச்சை ஆரம்பிக்க முன்பாகவும் எம்மைப் படுக்கவைக்க முன் 'வாரியார்' குடும்பத்தில் ஒருவர் கடவுளுக்கு விளக்கேற்றி இந்த எண்ணெயைத் தொட்டு வணங்கியே சிகிச்சையை ஆரம்பிப்பர்.

## தாரா எனப்படும் சிகிச்சை:

மரமட்டையில் நோயாளி படுக்க வைக்கப்படுவார். பின்னர் அவரது நெற்றியில் இளஞ் சூட்டு எண்ணெயானது மேலே தொங்க விடப்பட்டிருக்கும் தாரா சட்டியில் இருந்து துளித்துளியாக விழத் தொடங்கும். 1மணி நேரம் இச்சிகிச்சை நீடிக்கும். பாரதூர மான நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உடலின் முக்கிய பகுதிகளுக்கும் இச்சிகிச்சை வழங்கப்படுகிறது. எண்ணெய், பால், செவ்விளநீரோடு சேர்த்து மூலிகைகள் பலசேர்ந்த எண்ணெயானது stress, நித்திரைக் குறைவு, மனக் குழப்பம் போன்றவற்றிற்குப் பயன்படுகிறது.

## நவாக்கிளி

நவாக்கிளி எனப்படுவது: நோயாளியின் உடல் முழுவதும் எண்ணெயால் குளிப்பாட்டப்படுகிறது. பின்னர் நவார அரிசியில் கட்டப்படும் மெல்லிய துணியினால் உடல் மசாஜ் செய்யப்படுகிறது. இந்த நவார அரிசி பசும் பாலில் அவிக்கப்படுகிறது. பின்னர் துணியில் கட்டப்பட்டு, எண்ணெய் தாழியில் ஒரு குறிப்பிட்ட வெப்பத்தில் அமுக்கப்படுகிறது. மெல்லிய சூட்டில் எடுக்கப்படும் இச்சோற்றுப் பொட்டலத்தால் மிருதுவாக உடல் வருடப்படுகிறது. வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இச்சிகிச்சை முறை வழங்கப்படுகிறது. 14 தொடக்கம் 21 நாள்வரை இச்சிகிச்சை நீடிக்கும்.

## சிராவஸ்தி

சிராவஸ்தி எனப்படுவது: ஒரு குறிப்பிட்ட இளஞ்சூட்டில் எண்ணெய் நிரப்பப்பட்ட தொப்பியானது நோயாளியின் தலையில் அணிவிக்கப்படுகிறது. ஒருமணி நேரம் இது நடைபெறுகிறது. தொப்பியினுள் சொட்டுச் சொட்டாக உச்சி மண்டைப்பரப்பில் துளித் துளியாக எண்ணெய் விடப்படுகிறது. கபாலத்தில் சீரான இரத்த ஓட்டத்தை இது ஏற்படுத்தும். Stroke, மண்டைக்குத்து, பேசமுடியாதவர்கள் போன்றவர்களுக்கு இச்சிகிச்சை வழங்கப்படுகிறது. ஏழு நாட்களுக்கு இச் சிகிச்சை வழங்கப்படும்.

இவ்வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களால் வழங்கப்படும் உணவு வகையை மட்டுமே உட்கொள்ளலாம். மிக விசேடமாக கசாயம், கூழ் போன்றவை அளவு கணக்கோடுதான் வழங்கப்படுகிறது. மிகுந்த கட்டுப்பாடுகளோடுதான் பராமரிக்கப்படுவீர்கள். சர்க்கரை வியாதிக்கு மிக விசேட வைத்திய முறையுண்டு.

நாம் இங்கிருந்து சிகிச்சைக் குழுவினரை அழைத்துச் செல்ல முன்பாக அங்கே அதற்கான ஒழுங்கைச் செய்துவிட்டே அழைத்துச் செல்கிறோம். காரணம், நோயாளிகளாயில்லாத சினிமா நடிகைகள், நடிகர்கள் கூட (ரஜனிகாந், விக்ரம். திரிஷா போன்றோர்) தமது உடல் புத்துணர்வுபெற இங்கே சென்று மசாஜ் செய்துகொள்வது வழக்கம்.

இந்த வைத்தியசாலையின் பராமரிப்பானது உலகில் நாம் எங்கேயும் காணமுடியாது. 'வாரியார்' பரம்பரையானது வைத்தியத் துறையில் 'வாழவைக்கப் பிறந்தவர்கள்' என்றே வாழ்த்தத் தோன்றுகிறது.

நோயா? அது இனி கிட்டவே வராது. ஒரு முறை கேரளா ஆரிய வைத்தியசாலை சென்றவர்கள், முதுகு நோயில் சென்றவர்கள், நயன்தாரா நடையிலும், அஜித் ஸ்ரைலிலும் திரும்பி வந்ததைக் கண்டிருக்கிறோம். சர்க்கரை வியாதியோடு போனவர்கள், Duty free சொக்கலேற் பக்கெட்டோடு வந்ததையும் கண்டோம். வழியைக் காட்டி விட்டோம், இனி நோயைப் போக்கடிப்பதா இல்லையா என்பது உங்கள் முடிவு.

■ ■ ■

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**WARDEN & STEEL**
2 B/R Basement for Rent
Near All facilities
Call- 905 944 9982

**BRAMPTON & GORE ROAD**
2 B/R Basement for Rent
Call- 905 913 0857 / 647 401 5628

**KENNEDY & EGLIN TON**
2 B/R Condo for Sale
Call: 416 303 7425

**MCCOWAN & STEELS**
One Room for Rent(Upper house)
Call: 905 472 1413 / 416 930 7628

**PHARMACEY & LAWRENCE**
2 B/Room Basement for Rent
Call: 416 750 4077

**LAWRENCE & OTTEN PARK**
2 B/Room Basement for Rent
Call: 416 701 0667

**BRIMLEY & LAWRENCE**
2 B/Room Basement for Rent from Call: 416 264 9421

**MARKHAM & SHEPPARD**
Space for Class (for Rent)
Call: 416 412 1059

**BRIMLEY & STEEL**
2 B/R Basement for Rent
Call: 905 947 8018

**MORNING SIDE & FINCH**
2 B/R Basement for Rent
Call: 416 875 5486

**MCGOWAN & SHEPPARD**
3 B/R Basement (Bang low House) Call: 905 642 2669 / 416 917 1500

**MCGOWAN & LAWRENCE**
3 B/R House for Rent
Call: 647 345 1008 / 416 451 6895

**MARKHAM & SHEPPARD**
2 B/R Basement for Rent
Separate Entrance
Call: 416 332 8804

**ROOMS FOR RENT (YORK UNIVERSITY)**
(Ladies only)
Call: 416 661 6247

**BRIMLEY & STEELS**
Basement for Couples
Cable, Laundry free
Call: 905 947 8018

**MIDDLEFIELD & FINCH**
2 B/R Basement for Rent
Separate Entrance
Call: 416 292 9560

**GOLF CLUB & LAWRENCE**
1 B/R Basement for Rent
Call: 416 439 4489

**NEILSON & FINCH**
3 B/R Basement for Rent
Call: 416 335 0136

**MIDDLE FIELD & FINCH**
2 B/R Basement for Rent
Separate Entrance
Call: 416 292 9560

**MCCOWAN & SHEPPARD**
3 B/Room Walk-out Basement
All facilities Amiable Call: 416 917 1500 / 905 640 2287

**MCCOWAN & SHEPPARD**
3 B/R + 2 W/R Basement for Rent
Call: 416 917 1500 / 905 640 2287

**WARDEN & STEELS**
B/R Basement for Rent
Call: 905 944 9982

**BRIMLEY & STEELS**
2 B/R Basement for Rent
Call: 905 947 8018

Mead lee & Sheppard
Room in Basement for Rent
Call: 416 724 7877

**NEILSON & FINCH**
2 B/Room for Rent (Upper House)
Call: 416 335 0136 / 416 876 9239

**MARKHAM & ELSON**
2 B/R Basement for Rent
Separate Entrance
Call: 905 201 5862

## HOUSE / CONDO FOR SALE

**BATHURST & ELGIN MILLS**
4 B/R House Sale
3300 Sq.feet - $7,00.000

**BRAMPTON**
1850 Sq.feet House for Sale
Single House + Furniture
Call: 647 500 9365

**2460 KENNEDY & EGLINTON**
2 B/R APT Condo + Den for Sale
Call: 416 303 7425

**KENNEDY & EGLINTON**
1500 Sq. feet Store (Basement)
Call: 416 759 0777

**MARKHAM & 9TH LINE**
3 B/R + One Computer room,
Call: 905 554 2596

**MIDDLE FIELD & FINCH**
1 B/Room + Den for Sale
Call: 416 901 0877 /416 312 8026

**MIDDLE FIELD & STEELS**
Textiles for Sale
Call: 416 272 9425

**YOUNG & ST.CLAIRE**
Restaurant for Sale
Call: 416 567 7675 / 416 518 0118

**BRAMPTON**
3 B/R House,2 B/R Basement for Sale
Call: 905 230 2744

**OSWA**
1830 Sq.feet Premium Lot for Sale
Call: 905 554 0707

**NEILSON & MCLIVEN**
2 B/R Condo - Call: 416 786 5145

**BIRCH & HUNTING WOOD**
Office Space - Call: 416 885 5936

**MIDDLEFIELD & ELSON**
5 B/Room, 3 W/R - $4,75,000,00.
Call: 416 893 5418

## AUTO FOR SALE

**96 HONDA ACC**
200Km. EX for Sale $4200.00
Call: 416 712 0801

**93 HONDA**
Prelude for Sale Call: 416 816 1583

**2004 HONDA**
Civic (Black) for Sale 2 Door,
Call: 905 513 0540 / 416 903 8270

**93 HONDA CIVIC**
210 Km – 2 Door for Sale
Call: 905 554 0707

**1990 TOYOTA CAMRY**
27 Km for Sale Call: 416 751 5029

**92 NISSAN SANDRA**
4 Door for Sale Call: 416 823 3552

**2002 TOYOTA CAMRY**
148 Km for Sale Call: 416 265 1421

**96 HONDA ACC**
Call: 416 7120801

**2005 TOYOTA CAMRY**
64 Km for Sale Call: 416 897 1284

**2000 HONDA ACC**
13Km 2002 GMC Van 3.5
Call: 647 289 4409

**87 TOYOTA SURF**
2 Door Standee - Good Engine
Call: 416 867 0827

**93 ACURA (ENG.CHANGED)**
60 km for Sale - Call – 416 999 4842

**2002 TOYOTA SIENNA**
LE. & Passengers Blue – 120 km.
Call: 416 856 1591

**94 TOYOTA CAMRY**
Call: 416 737 1989

CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798

**94 VOLVO**
290km. - $1000 - Call: 416 823 3552

**92 TOYOTA CAMRY**
276km. for Sale (New tire)
Call: 905 230 2744

**94 TOYOTA CAMRY**
$2400 – 300Km. Call: 416 878 1675

**2003 HONDA CIVIC**
143Km for Sale Auto. 4Door, Silver
Call: 416 274 5847

**2004 VOLVO**
53 Dry Box for Sale 200,000 Km. Call: 416 821 8530

**99 TOYOTA COROLLA**
149 Km. for Sale $4400.00
Call: 416 724 6180

**99 HONDA CIVIC**
120 Km. for Sale New T Belt, Tire
Call: 416 438 5045

**97 TOYOTA COROLLA**
230 Km. for Sale Call: 647 832 9934

## OTHERS

**TUITION CLASS**
Middlefield & Finch
Tuition Class for Student
Call: 416 830 7078 / 416 609 9043

**MarRIAGE BROKERS**
Call: 416 266 9533

**5PC. ITALIAN B/SET**
for Sale Call: 647 504 2487

**COM./MATH BOOKS**
for Free Call: 416 412 7579

**YOGA**
Birch mount & Eglin ton)
Yoga (Thiyanam) Class (Free)
Call: 416 642 4883

**THINGS FOR SALE**
Swing Machine, Walker, Washer, Dryer
Call: 416 724 6311

**PACKING MACHINE**
for Sale (300 ml Bags Packed)
Call: 416 259 6068

**BED ROOM SET**
(3 pc.)For Sale (big Set)
$5000.00 - $25000
Call: 905 201 6673


**MCCOWAN & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில்

சகல வசதிகளுடனும் 3அறைகள் உடைய Bungalow வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 905 554 2496

# வயது கூட ஞாபகசக்தி குறைகின்றதா?

இராஜசேகர்
ஆத்தியப்பன்




தாய்வீடு வாசகர்கள் வயது என்றும் இளமை

### அடிக்கடி சளி பிடிக்கிறதா?

தினந்தோறும் இரண்டு அல்லது மூன்று பல் (உள்ளி) வெள்ளைப்பூண்டு – சற்று வெதுப் பாக்கி உட்கொள்ள வேண்டும். (அல்லது) மிளகும், வெந்தயமும் சம அளவு எடுத்து, வறுத்து, பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். – காலை, மாலை இரு வேளை அரை தேக்கரண்டி உட்கொண்டு ஒரு கப் சுடுதண்ணீர் அருந்தவும் - தொடர்ந்து செய்து வந்தால் குறட்டை ஒலி நீங்கி விடும்.

### இதய பலவீனம் (Heart Attack) வந்து விடுமோ என்ற பயமா?



மாதுளம் பழச்சாறு அல்லது செம்பருத்தி சர்பத் (அல்லது) தாமரைப்பூ சர்பத் அல்லது அர்ஜினா இவற்றுள் ஏதாவது ஒன்றைத் தினமும் எடுத்துக் கொண்டால் இதயத்தைப் பற்றிய கவலையே வேண்டாம்.

### அதிகமாக வேலை செய்தால் (அல்லது) உடற்பயிற்சி முடிந் தவுடன் கால்களில் கடுப்பு தோன்றுகின்றதா?

உடலில் பொட்டாசியம், மக்னீசியம் போன்ற தாதுக்கள் குறையும்போது தசைகளில் இழுப்பு ஏற்படுகின்றது. தினமும் வாழைப் பழம் சேர்த்துக் கொள்ளுங்கள். மருந்து வேண்டுமென்றால் வைத்தியரை அணுகுங் கள்.

### நேர்முகத் தேர்வுக்குப் (Interv- iew) போகுமுன் புத்துணர்ச்சி தேவையா?

தேன் கலந்த ஒரு கப் காப்பியை அரைமணி நேரத்திற்கு முன் அருந்துங்கள். உங்களுக்கு ஏற்படும் புத்துணர்ச்சியால் சும்மா அதிரு மல்ல.

### தொடாந்து விக்கலா?

கவலை வேண்டாம். நாக்கிற்குள் ஒரு ஸ்பூன் சர்க்கரை(சீனி)யை சற்று நேரம் வைத்திருங் கள். இது தொண்டையில் இருக்கும் நரம்பு களைத் தூண்டுகின்றது. இதனால் விக்க லைத் தூண்டும் நரம்பு கட்டுப்படுத்தப் படுகின்றது.

### மூட்டுவலி இருக்கிறதா?

எல்லாக் காய்கறிகளையும் சேர்த்து வேக வைத்து அரைகப் அளவு தினமும் சாப்பிட வேண்டும். ஸ்பைருலீனா என்ற கூட்டுக் குளிசையும் இதற்கு உதவுகின்றது.

### பல் துலக்கும்போது ஈறுகளில் இரத்தம் வருகின்றதா?

நெல்லிக்காய், பேரிக்காய் போன்றவற்றை தினமும் எடுத்துக் கொள்வதால் இதனைத் தவிர்க்கலாம். Chayavanprash என்ற லேகியம் நன்கு உதவும். இங்கு கடைக- ளில் தாராளமாகக் கிடைக்கின்றது.

### லேசான வாய் துர்நாற்றம் - என்ன செய்யலாம்?



இனிப்பான பானங்கள், பால் போன்றவற்றை அருந்தியவுடன் வாய் கொப்பளியுங்கள். தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும். ஒரு பாட்டில் தண்ணீரை எப்போதும் அருகில் வைத்துக் கொண்டு அடிக்கடி பருகுங்கள். துர்நாற்றத்திற்குக் காரணம் வாயில் இருக்- கின்ற சல்பர் சேர்க்கைகள். தண்ணீர் அதி- கம் குடிக்கக் குடிக்க மெல்ல அவை வெளியேற்றப்படுகின்றன. மீண்டும் உமிழ் நீர் சுரந்து இயல்பான நிலையை ஏற்படுத்- தும் (இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள் Centre for Breath Treatment என்கிற சான்பிரான்ஸிஸ்கோ மருத்துவமனை.)

### இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறது

ஒரு டம்ளர் ஆரஞ்சு ஜுஸ் (தோடம்பழச் சாறு) இதற்கு நல்ல மருந்து.(New England Journal of Medicine செய்த புதிய ஆய்வில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.)

### வயிற்றுப் போக்கு

இரண்டு டம்ளர் ஒயின் குடித்தால் போதும். இதில் இருக்கின்ற பிஸ்மத் சாப்சாலிசிலேட் நல்ல மருத்துவ வேலையைச் செய்கின்றது. சக்தி வாய்ந்த இந்த பிஸ்மத் குடலில் வயிற்றுப் போக்குக்குக் காரணமான சால்ம- னெல்லா மற்றும் ஈகோலி பக்டீரியாக்களை அழிக்கின்றது.

### பற்களில்குழி ஏற்படுகின்றதா?

சாப்பிடுவதற்கு முன் ஒரு கப் தேனீர் அருந் துங்கள். பற்சிதைவைத் தடுக்கும் இயற்கை யான புளோரைட்டுக்கள் தேனீரில் உள்ளது. இவை பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி ஈறுகளைப் பாதுகாக்கின்றது.

### தீங்குசெய்யும் (LDL)கொலஸ்- ட்ரால் உயர்ந்திருக்கின்றதா?

தினமும் ஒரு கப் ஆப்பிள் ஜுஸ் தொடர்ந்து ஆறு வாரங்கள் அருந்தி வர வேண்டும். Omega –3 மற்றும் உள்ளி இவற்றைத் தொடர்ந்து எடுப்பதாலும் கட்டுப்படுத்தலாம்.

### விருந்தில் ஆடிப்பாடி பின்னர் காலையில் ஏற்படும் களைப்பு (Hang over)

ஒரு கப் தக்காளி சாறு இதற்கு நல்ல பலன் தரும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. குடிப்பதால் வெளியேறுகின்ற நீர், கால்சியம், பொட்டாசியம் இவைகளைச் சமநிலைக்குக் கொண்டுவருகின்ற தன்மை தக்காளிச் சாற் றுக்கு உண்டு.



### சரியாக மூச்சுவிட முடியவில் லையா?

மீன் உணவுகள் நல்ல மருந்து (நண்டு, கணவாய், இறால் இவைகளைத் தவிர்க்க வேண்டும்) மீனில் இருக்கின்ற மக்னீசியம் நம் நுரையீரல் செயல்பாடுகளுக்கு மிகவும் உதவுகின்றது என்று டாக்டர் மைக்கேல் அயர்லாண்ட் கூறுகின்றார். ஆஸ்துமா நோயாளிகளுக்கு மக்னீசியம் குறைபாடு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### வயது அதிகமாவதால் ஞாபக சக்தி குறைவா?

பாதாம் கொட்டை இந்தப் பிரச்சனைக்கு நல்ல தீர்வைத் தருவதாக ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. National Institute of Health Study இந்தத் தகவலை வெளியிட் டுள்ளது. வயது அதிகமாகும்போது ஏற்படும் மூளைச் சோர்வை இந்த 'பாதம்' எளிதில் சமாளிக்கின்றது. தினசரி தேவையான விட்டமின் E ஆறு பாதம் பருப்புகளில் அடங்கியுள்ளது.

### நடிகை ஸ்நேகா சொன்ன மருத்துவத் தகவல்

நிறைய பேர் மற்றவர்களைப் பற்றி நினைத்து மன அழுத்தத்திற்குள்ளாகின்றார்கள். டிவி. தொடர் பார்த்து நொந்து கொள்கிறவர்கள் அனேகர்.

நம்மை சுற்றி இருக்கிற விஷயங்களை ஆரோக்கியமானதா மாற்றி அமைத்துவிட்டால் நாம் ஆரோக்கியமானவர்களா வாழலாம்?

தொலைபேசி உரையாடலில் இருந்து

■ ■ ■



# "குறமகளும்; யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வியும்"

## நூல் விமர்சனம்



- ரதன் -

**"யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி ஓர் ஆய்வு"**
**- குறமகள் -**

"பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வராவிடின் நாவலராற்றிய அரும் பெரும் பணிகள் நிகழ்வதற்கு தருணமெழுந்திராது" என நாவலர் ஆற்றிய சேவைகள் பற்றி க.கணபதிப்பிள்ளையவர்கள் கூறியதாக பேராசிரியர் கைலாசபதி தெரிவித்துள்ளார் (நாவலர் மாநாடு விழா மலர் 1969). கைலாசபதி மேலும் "நாவலர் இலங்கைத் தேசியத்தை (தமிழ் தேசியமல்ல) வலியுறுத்தினார்" என கருத்து தெரிவித்துள்ளார். ("புதுமை இலக்கியம் - தை 1974 "நாவலர் அழச்சுவட்டில் தேசியம்") இலக்கிய மேதைகளும், அறிஞர்களும் புகழ்ந்த நாவலரைப் பற்றி குறமகள் பின்வருமாறு கூறுகின்றார். "கிறிஸ்தவ அம்மையார்கள் வீடு வீடாகச் சென்று பெண்களோடு உறவாடுவதைக் கண்ட ஆறுமுகநாவலர் அவர்களும், முன்பு இருந்ததை விட மோசமான நிலையில் பெண்களுக்கான விதிமுறைகளைக் கவனத்திற்கு எடுத்தார். குடும்பத்துக்கான பொறுப்புக்களை மாத்திரமல்ல - அவளது உணர்வுகளை சிதறடிக்கும் வகையில் கட்டுப்பாடுகளையும் எழுதிவைத்தார். சாதியத்தைவிடக் கடும்போக்காகப் பெண்களை ஒடுக்கும் வகைகளை எடுத்தியம்பினார்." குறமகளின் இந்தக் கூற்று உண்மையானது. நாவலர் சாதியத்துக்கு ஆதரவாகவும், பெண்களுக்கு எதிராகவும் செயற்பட்டார். குறமகளின் மேற்கூறிய ஆய்வு நூலிலேயே, இவர் நாவலரைப்பற்றி துணிச்சலாக தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

"குறமகள், பெண்ணியம், மனிதநேயத்திற்குப் புதிய பொலிவும் அர்த்தமும் ஆழமும் பாய்ச்சுதல் வேண்டும். இதனைத் துல்லியமாக உணர்ந்தவர்" என அந்தனி ஜீவா தெரிவித்துள்ளார் (புதிய பார்வை – தை 16-31 2008) குறமகள் எழுதவந்து 35ஆண்டுகளின் பின்னர் 'குறமகள் கதைகள்' என்ற நூல் வெளிவந்தது. ஈழத்து பெண் எழுத்தாளர்கள் சாதித்தவற்றிற்கு ஒரு மெய் ஆவணமாக இவரது 'குறமகள் கதைகள்' நூல் திகழ்வதாக எஸ். பொ. தெரிவித்ததாக அந்தனி ஜீவா தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். குறமகள், இலங்கையின் மூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவர். பெண்களுக்கு எதிரான அடக்கு முறைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார். இப்பொழுதும் ஆர்வத்துடன் இலக்கிய, பெண்ணிய கூட்டங்களில் கலந்துகொள்கின்றார்.

"பயந்தாங்கொள்ளிகளாக வீட்டில் முடங்கி, கல்வியறிவற்று, உலக அனுபவமின்றி வாழ்ந்த இவர்கள் ஒரு நூற்றாண்டு காலத்துள் எப்படி மாறினார்கள், இவர்களின் விலங்கெடித்தவர்கள் யார்?, கல்வியறிவூட்டியவர்கள்யார்?, தன்னம்பிக்கையை வளர்த்தவர்கள் யார்? இவ் வினாக்களுக்கு விடை தேடும் முயற்சியே இந் நூல்" எனத் தனது முன்னுரையில் குறமகள் குறிப்பிடுகின்றார். குறமகளின் ஆய்வுப் பொருளானது முக்கியமானது. பொருளாதார ஆட்சிக்கு கல்வியறிவு முக்கியமானது. இது கிழக்கில் மாத்திரமல்ல - மேற்கிலும் அதே நிலைதான். பெண்களுக்கு வாக்குரிமை இன்றைய நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் வழங்கப்பட்டது. திருமணம் என்ற பந்தமே தவறானது - இது பொதுவாக பெண் ஒடுக்கு முறைக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் கூறும் அடிப்படைக் கருத்து. அதற்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதனுக்கும், மனுசிக்கும் தனது பாலியல் தேர்வுக்கான சுதந்திரம் வழங்கப்படவேண்டும். இங்குதான் ஒழுக்கக் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. பெண்கள் இன்று கல்வியில் முன்னிலையில் இருந்தாலும், இந்த ஒழுக்க கோட்பாடுகளே பெண்களைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த உலகம் ஆணிய மொழிகளையும், ஆண்களால் எழுப்பப்பட்ட சட்டங்களையும் கொண்டுள்ளது. கல்வியறிவு பெற்ற பெண்கள், பெண் ஒடுக்கு முறையின் மூலமான குடும்பம், ஒழுக்க மதிப்பீடுகளுக்கு எதிராக குரல் கொடுப்பார்கள்.




பேராசிரியர் சிவத்தம்பியின் "யாழ்ப்பாணம் - சமூகம் பண்பாடு கருத்து நிலை"ஆய்வு நூலும், குறமகளின் நூலும் யாழ்ப்பாணச் சமூகம் பற்றியவை. இது ஏன்? யாழ்ப்பாணத்துக்கு வெளியே பரந்துவாழும் தமிழர்களைத் தவிர்ப்பது ஏன்? தமிழ் என்றால் யாழ்ப்பாணம் என்ற நிலையை ஏற்படுத்த முற்படுத்துவது மிக மோசமான தவறாகும்.

குறமகள் தனது ஆய்வை 1800-1900, 1810க்கு பின்னர், 1830-1865, 1865-1900 போன்ற பகுதிகளாக பிரித்து மேற்கொள்கின்றார். இவரது ஆய்வின் பிரகாரம், பெண்கள் கல்வியானது ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னரே ஏற்படுத்தப்பட்டது. இதற்கு இவர் புள்ளி விபரங்களையும் அளித்துள்ளார். இலங்கை சட்டசபையின் முதலாவது உறுப்பினர் குமாரசாமியின் மனைவிகூட எழுத்தறிவற்றவர் என்ற குறமகளின் கூற்றே பெண்கள் கல்வியறிவைப்பற்றி தமிழ்ச் சமூகம் கவலை கொள்ளவில்லை என்பதனை உறுதிசெய்கின்றது. அண்மைக்கால ஆய்வொன்றின் பிரகாரம் 70களில் க.பொ.த (சா) சித்தியடைந்த பெண்களில் 50வீதமானோர் உயர்தர பரீட்சைக்கு தோன்றவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் உயர்தர பரீட்சைக்கு முன்பாக திருமணம் செய்துவிட்டார்கள். இது தமிழ்ச் சமூகம், பெண்கள் மீது கொண்டிருந்த ஒடுக்கு முறை பாசத்தை வெளிப்படுத்துகின்றது. பெண்கள் கல்விகற்க விரும்பிய போதும், அதற்கான பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்ட பின்னரும், பெண்கள் கல்வி கற்பதை ஆண்கள் எதிர்த்து வந்துள்ளனர். இவரது ஆய்வு இதனைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள் தொழில் சார் நிலைகளிலும், வர்த்தக ஈடுபாடுகளிலும் காலத்துக்கு காலம் ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். சிவத்தம்பி முன்னுரையில் குறிப்பிட்டது போல் "நெல்லியடியில் மில் தொழிலகங்களை பெண்களே நிர்வகித்து வந்தனர்". பிற்காலங்களில் பெண்கள் பெற்ற கல்வியானது குடும்ப நிர்வாகத்துக்கு முக்கியமானதாக இருந்தது. அத்துடன் சீட்டு பிடித்தல் போன்ற சில வர்த்தக, பண முதலீடுகளுக்கு இந்த பெண்கள் கல்வி பயன்படுத்தப்பட்டது. இதுவும் ஓர் வகை பெண் ஒடுக்கு முறையே. காலத்துக்கு ஏற்ப ஒடுக்குமுறையின் வடிவம் மாறுகின்றது.

உலகில் வாழும் தமிழ்ச் சமூகங்களில் இலங்கையில் மாத்திரமே திருமணம் முடித்த பின்னர் ஆண், பெண் வீட்டிற்கு வந்துவிடுவான். இதற்காக தாய்வழி சமுதாய எச்சசொச்சம் என கூறமுடியாது. சொத்துக்களில் பெண்களின் ஆதிக்கம் இருந்தது. ஆனாலும் ஆண்களே இதனை வழிநடத்தினர். இது சட்டமாகவும் உள்ளது. எனவே பெண்கள் வளர்ச்சிக்கு சமூகமும், சட்டமும் முட்டுக்கட்டையாக உள்ளன.

சிவத்தம்பி தகுதியானவரா?

"யாழ்ப்பாண சமூகத்தின் பிரதான கருத்து நிலையானது அந்தச் சமூகத்தின் அதிகார படி நிலைத்தன்மையை நியாயப்படுத்துவதாக அமைவது அவசியம். இங்கு சைவமும் தமிழும் என்ற கருத்து நிலை முக்கியத்துவம் பெறுகின்றது" என சிவத்தம்பி 'யாழ்ப்பாணம் - சமூகம் பண்பாடு கருத்து நிலை' என்ற நூலில் தெரிவிக்கின்றார். உண்மையில் தமிழுடன் சைவத்தை மாத்திரமல்ல; கிறிஸ்தவத்தையும் இணைத்துப் பார்க்கும் வழமைதான் இன்று நிலவுகின்றது. இதற்கு உதாரணம் பெண்கள் பாடசாலைகளில் பாடங்களாக வீட்டு விஞ்ஞானம், தையல் போன்றன போதிக்கப்பட்டன. இதனை பின்னர் அனைத்து பாடசாலைகளும் பின்பற்றின. இவர் தொடர்ச்சியாக பெண் நிலை ஒடுக்கு முறைக்கும், சாதியத்துக்குமான காரணங்களாக "சைவமும் தமிழும்"என்ற கருத்தியல் கோட்பாடுகளை நிறுவுகின்றார். இந் நூலின் முன்னுரையில் "குடும்பத்தின் பொருளாதார அமைப்பில் பெண்களுக்கு முக்கிய இடமுண்டு என்றும், பால் நிலை காரணமாக ஆண்களுக்கு சில முதன்மைகள் உண்டு; ஆனாலும் பெண்கள் வாயில்லாப் பூச்சிகளாகக் கருதப்படுவதில்லை" எனவும் சமாதானம் கூறுகின்றார். மேலும், ஆறுமுக நாவலர் கிறிஸ்தவ கல்விக்கு எதிராக குரல் கொடுத்தார். இது ஓர் தேசிய பண்பு என சிவத்தம்பி வாதிடுகின்றார். இவரது "ஈழத்து தமிழிலக்கிய தடம் 1980-2000" என்ற நூலில் புலம் பெயர் எழுத்தாளர்களை அடையாளம் காணும் சிவத்தம்பி, பெண் நிலை எழுத்துக்களை அடையாளம் காணவில்லை. உதிரிக் குறிப்புக்களாக சங்கரி பற்றி மட்டும் குறிப்பிடுகின்றார். சிவரமணி, செல்வி ஏற்படுத்திய அதிர்வுகளை இவர் தமிழிலக்கியமாக கருதவில்லை. 1980-2000க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பல பெண் எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களைப் பதித்துள்ளனர். இது கூட இவரது பார்வைக்கு எட்டவில்லை. சிவரமணி, செல்வி போன்றவர்களை கூட சிவத்தம்பி மறந்து விட்டார். பெண் ஒடுக்கு முறைக்கு சமாதானம் கூறும் சிவத்தம்பி, "சைவமும், தமிழும்" என நியாப்படுத்துகின்றார். மேற்கத்திய நாடுகளிலும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் என தனது புதிய கண்டுபிடிப்பை முன்வைக்கின்றார். இவரது முன்னுரை இந்த நூல் கூறும் கருத்தை மறுதலிக்கின்றது. உண்மையில் இந்த நூலுக்கு ஓர் பெண் ஆய்வாளரே முன்னுரை எழுதியிருக்க வேண்டும்.

சிவத்தம்பி உட்பட மரபு அறிவு ஜீவிகள் அனைவரும் ஆணாதிக்க சிந்தனை கொண்டவர்களே. இது ஆறுமுகநாவலரது வழிவந்த மரபு அறிவு ஜீவிகளின் பண்பாகும். இந்து சிந்தனை மையம் பெண்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டு வந்துள்ளது. கோயில்களில் பெண்கள் எவரும் பூசை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஆண்களை மையப்படுத்தியே சமயச் சடங்குகள் உள்ளன. மொழியும், மதமும் அடிமைத் தனத்தையும், சாதியத்தையும் வளர்க்குமாயின் அப்படிப்பட்ட மொழி தேவை தானா என்ற கேள்வி எழுகின்றது.

கிறிஸ்தவர்கள் - குறிப்பாக அமெரிக்க மிசன்கள் தமது பாடசாலைகளில் கல்வி கற்போர்

67ம் பக்கம் பார்க்க...

66ம் பக்கத் தொடர்ச்சி...

கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தைக் கொண்டிருந்தன. இப்பொழுதும் யாழ் பரியோவான் கல்லூரியில் அதிபராக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களே வர முடியும். கத்தோலிக்கர்கள், இந்துக்கள் அடுத்த நூற்றாண்டில் கூட இக் கல்லூரியில் அதிபராக முடியாது. ஆனால் இங்கு கல்வி கற்பவர்கள் பெரும்பாலானவர்கள்



இந்துக்கள். அதே நிலை இந்துக் கல்லூரிகளிலும் காணப்படுகின்றது. இலங்கை கல்வித்திட்டத்தில் மதம் ஒரு பாடம் மாத்திரமே

கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப மூன்று விடயத்தை கிறிஸ்தவர்கள் கையாண்டார்கள்:

- தமிழில் ஆராதனைகளை மேற்கொண்டது.
- பெண்கள் கல்வி
- ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு கல்வியறிவை வழங்கியமை.

இந்துக் கல்லூரிகளில் அனுமதி மறுக்கப்பட்ட பலருக்கு கிறிஸ்தவ பாடசாலைகள் அனுமதி வழங்கியுள்ளன. இந்த பின் இரண்டையும் நாவலர் எதிர்த்தார். நாவலர் சாதி வெறிபிடித்தவர். இவரது செயற்பாடுகள் இந்து மேலாதிக்கவாதிகளைச் சார்ந்தே இருந்தது. இதனை தமது ஆய்வில் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறமகளின் ஆய்வின் சிறப்பம்சங்கள் தரவுகளுடன் மாத்திரம் நின்று விடாது, சமூக பின்னணியையும், காரண காரியங்களையும் ஆய்வுக்குட்படுத்தி வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் கல்லூரி அதிபர்கள், அவர்கள் ஆற்றிய பணிகள் என்பனவும் பதிவாக்கப்பட்டுள்ளன. தரவுகள் பற்றிய விபரங்கள் கொடுக்கப்படவில்லை. தரவுகள் பற்றிய சீரிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், தரவுகளின் பின்னணி பற்றிய தெளிவின்மை காரணமாக, ஆய்வுக் கட்டுரையின் முதற் கட்டமாகவே இந்த நூலை பார்க்க வேண்டியுள்ளது. போர்ச்சூழல், ஆய்வாளரின் புலம் பெயர்வு என்பன இதற்கான காரணங்கள் என்பதும் உண்மையே. ‘உலக பெண்கள் அனைவரும் ஒரு மொழியையே பேசுகின்றனர்’ என ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணிய வாதிகள் குறிப்பாக இந்த நூலைப்பற்றியும், இதன் உள்ளடக்கம் பற்றியும் விவாதிக்க வேண்டும். ஆனால் கனடாவில் பார்வதி கந்தசாமியைத் தவிர எவரும் அக்கறை கொள்ளவில்லை. ஆண்டொன்றிற்கு அவ்வப்போது வரும் இந்திய இலக்கிய சஞ்சிகைகள் கூட கண்டு கொள்ளவில்லை. இது அவர்களது பொது வான பண்பு.

இந்த நூலை வாசித்து முடித்த பின்னர் “நான் இந்த சமுதாய வழியில் வந்தவன்” என்ற நினைப்பு வெட்கத்தை கொடுக்கின்றது.

Simon de Beauvoir கூறிய கூற்று “பெண் பெண்ணாக பிறப்பதில்லை, அவள் உருவாக்கப்படுகின்றாள்”. இனி பெண் சமூகத்தை - அரசை உருவாக்கட்டும்.

■ ■ ■


APPLIANCES REPAIR & SERVICE

Commercial & Residential



• Electrical Repair • Stoves • Plumbing • Washers
• Fridges • Dryers • Freezers • Dishwashers

vq;fs; tPl;bd; kpd;ghtidg; nghUl;fspd; jpUj;j
NtiyfSf;Fk; guhkupg;Gj; NjitfSf;Fk; mioAQ;fs;

Sada
Certified Technician

416 • 773 • 1451



Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Good news !
for Real Estate Agents

Computek College is approved as a continuing education provider

by the
REAL ESTATE COUNCIL OF ONTARIO
( RECO)

for the following Courses

Windows XP
Ms Excel
Ms Word
Ms Access
Ms Power Point

Study at
Computek College
&
Earn your credits

for details :
416-321-9911

Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# இந்தியாவின் உலக கூட்டுத்தாபன பேரரசன் TATA

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -



1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இந்தியாவின் முதல் பிரதமர் நேரு அவர்கள் இந்தியா என்ற புதிய நாட்டின் பொருளாதாரக் கொள்கையை வகுப்பதற்காக அன்றைய மூத்த தொழிலதிபர் JRO TATA உடன் ஆலோசனை நடாத்தினார். திரு. TATA அவர்கள் தனிமனிதருக்கு பொருளாதார சுதந்திரம் கொடுத்து முதலாளித்துவப் பாதையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புமாறு ஆலோசனை கூறினார். ஆனால் நேரு அவருடைய ஆலோசனையை ஏற்காது சோசலிப் பாதையில் நாட்டை வழிநடத்தினார் என்பது சரித்திரம்.

இனி இன்றைய சரித்திரத்திற்கு வருவோம். ஆண்மையில் TATA நிறுவனம் Ford நிறுவனத்திற்குச் சொந்தமான Jaguar, Land Rover என்ற மாதிரி வகைகளை வாங்குவதற்கான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அடுத்த சில வாரங்களில் முடிவு எட்டப்படும் என TATA தெரிவித்துள்ளது. இந்த அளவிற்கு TATAவை ஒரு உலக வர்த்தக ரீதியில் ஒரு போட்டி போடும் அளவிற்கு கொண்டு வந்தவர் தற்போதைய அதிபர் Ratan Tata ஆவார். 16ஆண்டுகளுக்கு முன் தலைமைப் பதவிக்கு வந்த இவர் உலகின் ஒரு பெரிய, பல வித்தியாசமான வர்த்தகங்களை நடத்தும் TATAவை உலகளாவிய ரீதியில் தெரியக்கூடிய பெயராக மாற்றியுள்ளார்.

குண்டுசியில் இருந்து மோட்டார் கார்கள் வரைக்கும், தேயிலையில் இருந்து காப்புறுதி வர்த்தகம் வரைக்கும் என பல்வேறு பட்ட வர்த்தகங்களை TATA நடத்துகிறது. Basic Food இலும் Price Chopper இலும் நாம் வாங்கும் Tetley Tea இன் உரிமையாளர் TATA தான் என்பது பலருக்குத் தெரியாது.

இப்படி உலகளாவிய ரீதியில் வர்த்தகங்களை நடத்துவதில், கடந்த வருடம் 50%க்கு மேலான வருமானம் TATAவிற்கு இந்தியாவுக்கு வெளியில் இருந்து கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

TATAவின் முன்உதாரணம் வேறு பல இந்திய நிறுவனங்களை தட்டி எழுப்பி, பணம் பண்ண இந்தியா மட்டுமலலாது உலகில் வேறு இடங்களிலும் முதலிடலாம் எனக் காட்டியுள்ளது. இதைப்பற்றி கருத்துத் தெரிவித்த திரு Ratan Tata நமது நிறுவனங்கள் ஒரு பொருளாதாரங்களிலேயே தங்கியுள்ளன.



ரத்தன் டாடா
டாடா குழுமத்தின் தலைவர்

எங்களுக்கு ஒரு அகலமான ஆழமான பார்வை தேவை என்றார்.

1999ல் இருந்து TYCO Global Network, Daewoo Commicial Vehicles, Imacid – A Morroco Chemical Co, Tetley teas, Corus Co – 11.3 Billion British Co என்பனவற்றை வாங்கியுள்ளது இந்த TATA நிறுவனங்களில் திறந்த சந்தைப் பெறுமானம் US 70 Billion ஆகும். 2007 வரிக்கு பின்னான இலாபம் US.2.8 Billim ஆகும். இது 2006 விட 33% கூடவாகும்.

இந்த TATA நிறுவனம் 1868ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தநிறுவனம் இலாபத்தில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறதோ அந்தளவு கண்ணும் கருத்துமாக தொழிலாளர் நலனிலும் இருக்கிறது. இலஞ்சம் கொடுக்காமல் எதுவுமே செய்ய முடியாத இந்தியாவில் TATAவின் நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் நேர்மையானவை என ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

